# காதலும்... காமமும்!



"**கா**மம் என்பது கேவலம் என்று அர்த்தப்படுகிறது அல்லது வெற்றி என்று பொருள்படுகிறது. வெகு நிச்சயமாய் காமத்துக்கு இவை இரண்டும் பொருள் அல்ல. அது சங்கீதம், கவிதை, ஓவியம் போல் இறையுணர்வு கலந்த விஷயம்.

காதல் என்பது மதித்தல், காமம் என்பது பகிர்தல். இரண்டும் ஒரு சேர நிகழ சந்தோஷம் நிச்சயம்.

(எழுத்தாளர் பாலகுமாரன் சொன்னது.)

- ஆ. ஷாஜினிபர்வதம், சென்னை.

# சேலை கட்ட தடை

**நை**ஜீரியா நாட்டில் பெண்கள் சேலை கட்டக்கூடாதாம். சேலை கட்டி, சட்டை போடும் பெண்களின் வயிற்றுப் பகுதி வெளியே தெரிகிறதாம். இது அந்நாட்டு சட்டப்படி குற்றமாம்.

இதை மீறினால் சிறைத் தண்டனையோ, அபராதமோ விதிக்கப்படும்.

- தூத்துக்குடி வெ. முருகன்.






"ரெண்டு வாரம் நான் சொந்த ஊருக்குப் போயிட்டு வாறதுக்குள்ளே உங்க வீட்டில் என்னென்னவோ நடந்திருக்கும் போலிருக்கே...!"

பக்கத்து வீட்டு கமலா கேட்டதும், ஓடிக்கொண்டிருந்த

டி.வி.யின் திரையை 'ரிமோட்' உதவியால் வெறுமையாக்கினாள், செண்பகவல்லி.

புன்னகைத்துக்கொண்டே கமலாவை ஏறிட்டாள். நாற்பதுதி இரண்டு வயதைத் தொட்டிருந்தாலும் இன்னமும் இளமை மிச்சமிருக்கும் திருத்தமான முகம், ஒன்றிரண்டு நரை முடிகளும், கண்களுக்குக் கீழே இருந்த கருவளையமும் மட்டுமே வயதை அப்பட்டமாய் காட்டிக்கொடுத்தது.

"ஏதோ நடக்கக் கூடாதது நடந்துட்ட மாதிரி கேக்கறியே...? நல்ல விஷயம்தானே நடந்திருக்கு...?"

"பெரிய இடத்தில் இருந்து வந்து லேகாவைப் பெண் பார்த்துட்டுப் போனாங்களாம்... உண்மையா...?"

தலை அசைத்தாள் செண்பகவல்லி.

"ரொம்பப் பெரிய இடம்னு சொல்ல முடியாது. நம்மைவிட அந்தஸ்தில் பெரியவங்கதான். சொந்த பங்களா இருக்கு. கார் இருக்கு. நம்மை மாதிரி மாச சம்பளத்துக்காரங்க இல்லை..."

கமலா பல் வரிசையை அகலமாய் காட்டிச் சிரித்தாள்.

"மும்பைக்காரங்கன்னு சொன்னாங்க...?"

"ஆமா..."

"மும்பைல சொந்த பங்களா இருக்குன்னா நிச்சயமா பெரிய இடம்தான். தமிழ்காரங்கதானா...?"

"நம்மவங்கதான் கமலா. ஆனா, அவங்க மும்பையில் மூணு பரம்பரைக்கு முன்னாலேயே போய் 'செட்டில்' ஆயிட்டாங்க..."

"மாப்பிள்ளை என்ன பண்ணுறார்?"

"பிசினஸ்...?"

"என்ன பிசினஸ்...?"

"ஏதோ மெஷினெல்லாம் தயாரிக்கறதா சொன்னாங்க. எனக்கு அவங்க சொன்னதெல்லாம் எதுவும் புரியலை. லேகாவோட அப்பா விபரமா கேட்டுத் தெரிஞ்சிக்கிட்டிருந்தார். அவங்க தாத்தாவுக்குத் தாத்தா காலத்தில் ஆரம்பிச்ச தொழிலாம். இப்போ மாப்பிள்ளையின் மேற்பார்வையில் நடந்துக்கிட்டிருக்கு..."

"அப்படின்னா இனிமே லேகா அரக்கப் பரக்க வேலைக்குப் போக வேண்டியதில்லை. எஜமானியம்மா மாதிரி கம்பெனிக்குப் போய் நிர்வாகம் பண்ணலாம்..."

"அந்த மாதிரி ஆசையெல்லாம் எனக்கு இல்லை. லேகாவுக்கும் இல்லை. போற இடத்தில நிம்மதியோடவும், சந்தோஷத்தோடவும் வாழ்க்கை நடத்தற சூழ்நிலை இருந்தால போதும்."

"சும்மா சொல்லாதே. அந்த மாதிரி ஆசை இல்லாமலா புளியங்கொம்பு மாதிரி ஒரு சம்பந்தத்தைப் பிடிச்சிருப்பீங்க..."

"நாங்க தேடிப் போய் பிடிக்கலை கமலா. தானா வந்து அமைஞ்சதுதான்."

"எப்படி? புரோக்கர் மூலமாவா...?"

"பத்திரிகையில விளம்பரம் தந்திருந்தோம். நடுத்தர குடும்பம்தான் 'அப்ரோச்' பண்ணலாம்னு குறிப்பிட்டு இருந்தோம். ஆனா, இவங்க பணக்காரங்களா இருந்தும் சாதாரண குடும்பத்தில் இருந்து ஒரு அடக்கமான பொண்ணு வேணும்னு கேட்டு எங்களைத் தேடி வந்தாங்க..."

"என்ன நகை எதிர்பார்க்கறாங்க...?"

"அவங்க எதுவும் நிபந்தனை பண்ணலை. உங்க பொண்ணுக்கு எவ்வளவு போடணும்னு நீங்க விருப்பப்படுறீங்களோ... அவ்வளவு போட்டா போதும்னு மாப்பிள்ளையின் அப்பாவும், அம்மாவும் சொல்லிட்டாங்க."

"இந்தக் காலத்தில் இப்படியொரு நல்ல மனுஷங்களா...?"

செண்பகவல்லி புன்னகைத்தாள்.

"நல்ல மனுஷங்க எந்தக் காலத்திலும் இருக்கத்தான் செய்வாங்க. அவங்க தொடர்பு நமக்குக் கிடைக்கறது நம்ம அதிருஷ்டத்தைப் பொறுத்த விஷயம்..."

"நீங்க மும்பை போய் பார்க்கலையா...?"

"இல்லை."

"கிட்டத்தட்ட சம்பந்தம் பேசி முடிவு பண்ணியாச்சு. இன்னும் நீங்க மாப்பிள்ளை வீட்டைப் போய் பார்க்கலைன்னா எப்படி? கல்யாணம்ங்கறது ஆயிரம் காலத்துப் பயிர். அவசர அவசரமா எந்த முடிவும் எடுக்கக்கூடாது. நீர விசாரிக்கணும் செண்பகவல்லி."

"மனுஷங்களை நேரில் பார்த்தா எப்படிப்பட்டவங்கன்னு தெரியாதா? அவங்களோட நெருங்கிய உறவு ஜனங்கள் பதினைந்து.

இருபது பேர் கார்ல வந்து நட்சத்திர ஓட்டல்லதான் தங்கி இருந்தாங்க. லேகாவைப் பார்க்கறதுக்கு, மத்த பேச்சுவார்த்தைகளுக்குன்னு ரெண்டு, மூணு நாள் நம்ம வீட்டுக்கு வந்துட்டுப் போனாங்க..."

"இருந்தாலும் மாப்பிள்ளை வீட்டைச் சேர்ந்தவங்களை அவங்க இடத்தில் போய் ஒரு தடவை பார்த்துட்டு வர்றதுதான் சரின்னு என்னோட மனசுக்குப் படுது..."

"நிச்சயதார்த்தம் வைக்கறதுக்கு முன்னால ஒரு தடவை போயிட்டு வரணும்னு லேகாவோட அப்பா சொல்லிட்டிருந்தார். அதெல்லாம் அவர் சரியா விசாரிச்சிருப்பார்."

"நீயும்கூட போயிட்டு வா. அப்போதான் வீட்டு பொம்பளைங்களோட கலந்து பேசி, லேகாவை அவங்க நல்லா வைச்சிருப்பாங்களான்னு தெரிஞ்சிக்க முடியும்..."

"நான் போக முடியாது."

"ஏன்...?"

"என்னோட முதுகுவலி பிரச்சினைதான் உனக்குத் தெரியுமே? மும்பை போறதுன்னா கிட்டத்தட்ட ரெண்டு நாள் பயணம் பண்ணணும். ரெயில், பஸ்சில் சேர்ந்தாப்போல ரெண்டு தடவை பயணம் செஞ்சா உயிர் போற மாதிரி முதுகுத்தண்டில் வலி எடுக்க ஆரம்பிச்சிடும்."

"சரி, நீ போகாட்டியும் பரவாயில்லை. லேகாவோட அப்பாவை நல்லா விசாரிச்சிட்டு வரச் சொல்லு..."

"அவர் எப்பவுமே ஏமாந்து போற மாதிரி காரியம் செய்யமாட்டார் கமலா. நீ சொல்ற மாதிரி மனநெருடல் எதுவும் எனக்கோ, அவருக்கோ இல்லை. இந்த சம்பந்தம் வந்துட்டுப் போனதில் இருந்து எங்க எல்லோருக்குமே சந்தோஷம்தான்."

அவள் சொல்லிக்கொண்டு இருக்கும்போதே...

"கீங்க."

வாசல்புறம் ஒரு கார் வந்து நிற்கும் ஓசையும், அதைத் தொடர்ந்து 'ஹாரன்' சப்தமும் கேட்டது.

கமலா ஜன்னலில் பார்த்துவிட்டு, செண்பகவல்லியிடம் சொன்னாள்.

"உங்க வீட்டுக்குத்தான்... ஒரு டாக்சி வந்திருக்கு."



"டாக்சியா...?"

கேட்டுக்கொண்டே எட்டிப் பார்த்த செண்பகவல்லி, சட்டென்று பரபரப்பைத் தத்தெடுத்துக்கொண்டாள்.

"மாப்பிள்ளை மாதிரி தெரியுதே...?"

டாக்சியைவிட்டு இறங்கி வந்துகொண்டிருந்த இளைஞனைப் பார்வையில் வாங்கிய கமலா சொன்னாள்.

"இவர்தான் மாப்பிள்ளையா? ராஜ களையோட இருக்கார். லேகாவுக்குப் பொருத்தம்தான். சரி... நீ போய் மாப்பிள்ளையை கவனி. நான் கிளம்பறேன்."

சொல்லிக்கொண்டே கமலா படி இறங்கிச் சென்றுவிட்டாள்.

செண்பகவல்லி அவசரமாய் சேலைத் தலைப்பை இழுத்துப் போர்த்திக்கொண்டு, வாசற்படி ஏறிய இளைஞனை நோக்கிப் போனாள்.

"வா...ங்க மாப்பிள்ளை..."

நெடுநெடுவென்று ஆறடி உயரத்தை வாங்கியிருந்த சுந்தர், கதவுநிலை இடித்துக்கொள்ளாமல் இருக்க தலையை குனிந்து வீட்டுக்குள் பிரவேசித்தான். அடர்த்தியான புருவங்களுடன் ஒரு இந்திப் பட 'ஹீரோ'வைப் போல இருந்தான்.

செண்பகவல்லி தயக்கமாய் கேட்டாள்.

"இந்த மத்தியான நேரத்தில் வந்திருக்கீங்க. குடிக்க ஏதாவது தரட்டுமா?"

நேர்த்தியான பல் வரிசையைக் காட்டி புன்னகைத்தான் சுந்தர்.

"அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம். திடீர்னு தொழில் விஷயமா நான் சென்னைக்கு வர வேண்டியதாயிடுச்சு. அப்படியே கல்யாண விஷயமாவும் பேசிட்டு வரச்சொல்லி அம்மாவும், அப்பாவும் சொன்னாங்க. காலையில் என் விவகாரத்தை முடிச்சிட்டேன். அப்படியே வந்து உங்களைப் பார்த்துப் பேசிட்டு, முடிஞ்சா ராத்திரியே மும்பை கிளம்பிப் போயிடலாம்னு இருக்கேன்."

"லேகாவும் ஆபீசுக்குப் போயிட்டா. அவளோட அப்பாவும் ஆபீசுக்குப் போயிட்டார். வீட்டில் இப்போ நான் மட்டும்தான்."

அதைக்கேட்டு புன்னகைத்தான் சுந்தர்.

"அதனால என்ன...? நிச்சயதார்த்தம் நடந்த அடுத்த மாதத்தில நல்ல நாட்களைக் குறிச்சு வாங்கிட்டு வரச் சொன்னாங்க. காலண்டரையோ, பஞ்சாங்கத்தையோ பார்த்து நீங்களே குறித்துத் தந்தாப் போதும்."

"லேகாவோட அப்பாவையும் ஒரு வார்த்தை கேக்கணுமில்லையா? பக்கத்து வீட்டில் போன் இருக்கு. நான் போன் பண்ணி லேகாவையும், அவளோட அப்பாவையும் வரச் சொல்லிட்டு வந்துடறேன்."

"ஆபீஸ் நேரத்தில் அவங்களை ஏன் தொந்தரவு பண்ணணும்?"

"அதனாலென்ன... பரவாயில்லை."

செண்பகவல்லி சேலைத் தலைப்பை இன்னமும் நன்றாய் இழுத்துப் போர்த்திக்கொண்டு, எதிர்வீட்டை நோக்கி வேகமாய் நடைபோட ஆரம்பித்தாள்.

சுந்தர் நாற்காலிக்கு வசதியாய் சாய்ந்துகொண்டு சுற்றும் முற்றும் பார்த்தான்.

'புரட்டிக்கொண்டிருக்க ஏதாவது புத்தகம் கிடைக்குமா?'- பார்வையை துரத்தியவன் கண்களுக்கு டி.வி.யின் மேல் இருந்த புகைப்பட 'ஆல்பம்' சிக்கியது.

அந்த ஆல்பத்தை கையில் எடுத்தான்.

ஒவ்வொரு பக்கமாய் புரட்டிப் பார்க்க பழையதும், புதியதுமாய்- கலவையாய் புகைப்படங்கள் சொருகப்பட்டு இருந்தன.

சுவாரசியமாய் பார்த்தபடி பத்திருபது படங்களை புரட்டி இருப்பான். ஒரு பக்கத்தில் செருகியிருந்த அந்த அழகான பெண்ணின் மார்பளவு படத்தின் மேல் பார்வை விழுந்ததும் சுந்தரின் கண்கள் வியப்பில் உறைந்து போயிற்று!

## 2

ஆளுயர 'டிரஸ்சிங் டேபிள்' கண்ணாடி முன்னால் நின்றிருந்த சுந்தர்- உடை மடிப்புகளை சரிப்படுத்திக்கொண்டான். டின்னுக்குள் அழுத்தி வைக்கப்பட்டிருந்த பர்ப்யூமை மேலிருந்து கீழ்வரை பீய்ச்சிக்கொண்ட பின் மேசை மேலிருந்த தொலைபேசியை நெருங்கி-



எண்களை அழுத்த ஆரம்பித்தான்.

மறுமுனையில் 'ரிங்' போய் 'ரிசீவர்' எடுக்கப்பட்டு ஒரு கனிர் பெண் குரல் "ஹலோ..." என்றது.

"தொந்தரவுக்கு மன்னிக்கணும். பக்கத்து வீட்டிலிருக்கும் லேகாவைக் கூப்பிட முடியுமா? நான் அவங்க வுட்பி மாப்பிள்ளை சுந்தர் பேசறேன்."

"ஒரு நிமிஷம் 'லைன்'ல இருங்க."

காத்திருந்தான்.

சொற்ப நிமிடங்கள் வழிந்தன.

அதைத்தொடர்ந்து கடகடவென 'ரிசீவர்' எடுக்கப்படும் சப்தமும், லேகாவின் ஜாங்கிரித்தனமான குரலும் கேட்டது.

"ஹலோ..."

"என்ன, தயாராகிட்டியா லேகா?"

"ம்..."

"இன்னிக்கு முழுக்க லீவு போடச் சொன்னேன். போட்டியா?"

"போட்டாச்சு... போதுமா?"

"உன்னோட அப்பா ஆபீஸ் போயிட்டாரா?"

"அவர் காலையில எட்டரை மணிக்கெல்லாம் கிளம்பிப் போயிட்டார். நான்தான் உங்களுக்காக லீவு போட்டேன். அவருக்கு என்ன வந்தது?"

"வீட்ல என்ன சொன்னாங்க லேகா...?"

"அம்மாதான் கேலி பண்ணினாங்க."

"என்னன்னு...?"

"நிச்சயதார்த்தத்துக்கு தேதியை மட்டும் பார்த்துச் சொல்லுங்க. நான் ராத்திரியே மும்பை புறப்பட்டுப் போகணும்னு பறந்தார். லேகாவைப் பார்த்ததும் மனசு மாறிட்டார். இன்னிக்கு போகலை... நாளைக்குத்தான் மும்பை போறேன்னு ஒரேயடியா பல்டி அடிச்சதும் இல்லாம 'ஷாப்பிங்' கூட்டிட்டுப் போய் நகை வேற பரிசா வாங்கித் தர்றேன்னு சொல்றாரேன்னு அம்மாவுக்கு ஒரே ஆச்சரியம்."

"வேற ஒண்ணும் தப்பா நினைக்கலியே...?"

"தப்பா நினைக்கறதுக்கு இதுல என்ன இருக்கு...?"

"கல்யாணத்துக்கு முன்னாலேயே வெளியே கூட்டிட்டுப்

போறேன்னு சொல்றானேன்னு சங்கடப்படலையா...?"

"சேச்சே... எங்க அம்மாவும் சரி, அப்பாவும் சரி... அப்படி ரகம் கிடையாது. இதையெல்லாம் தப்பா எடுத்துக்கமாட்டாங்க. நீங்க நகை பரிசளிக்கிறதை உங்க வீட்ல உள்ளவங்க தப்பா நினைக்காம இருந்தாப் போதும்..."

சுந்தர் மெலிதாய்ச் சிரித்தான்.

"எங்க வீட்டில் உள்ளவங்களும் பரந்த மனசுள்ளவங்கதான் லேகா. இதையெல்லாம் தப்பா நினைக்கமாட்டாங்க... சந்தோஷப்படுவாங்க. சரி, இப்ப நீ ஒரு ஆட்டோ பிடிச்சு 'பூர்ணிமா காம்ப்ளக்ஸ்' முன்னால வந்து நிக்கிறியா...? அங்கிருந்து நான் உன்னை 'பிக் அப்' பண்ணிக்கறேன்..."

"சரி..."

"இப்போ மணி பத்தே கால். சரியா பத்தரை மணிக்கு நான் அந்த 'காம்ப்ளக்ஸ்' வாசலில் காத்திருப்பேன்..."

சுந்தர் தன் கையில் இருந்த ரிசீவரை அதன் இடத்தில் வைத்துவிட்டு, ஓட்டல் அறையைவிட்டு வெளியே வந்தான்.

சாவியைத் திருகி கதவைப் பூட்டிவிட்டு, வராந்தா முடிவில் இருந்த 'லிப்ட்'டுக்குள் நுழைந்தான்.

தானியங்கிக் கதவுகள் சாத்திக்கொண்ட பின்– ஊஞ்சலாட்டம் ஆடியபடி தரையை நோக்கி 'லிப்ட்' நழுவிச் செல்ல ஆரம்பித்தது.

மங்கலான மஞ்சள் விளக்குகளோடும், ஆளை விழுங்கும் சோபாக்களோடும் இருந்த வரவேற்பு அறையைக் கடந்து ஓட்டலின் வெளிவாசலுக்கு வந்தான்.

காத்திருந்த டாக்சி டிரைவர் அவனுக்காக பின்பக்க கதவைத் திறந்துவிட்டார்.

சுந்தர் இருக்கையில் சாய்ந்ததும் கதவை அறைந்து சாத்திவிட்டு, காரைச் சுற்றி வந்து 'டிரைவிங்' இருக்கைக்கு வந்தார்.

"எங்கே சார் போகணும்...?"

"பூர்ணிமா காம்ப்ளக்ஸ்..."

டாக்சி புறப்பட்டு போக்குவரத்தில் கலந்து விரைந்தது.

நான்கு முனை சந்திப்புகளில் பச்சை சிக்னலுக்காக தவித்துத் தவித்து அந்த 'காம்ப்ளக்ஸ்' வாசலைத் தொட்டபோது நேரம்



சரியாய்ப் பத்து முப்பத்தைந்து.

காம்ப்ளக்சின் நிழலில் லேகா காத்துக்கொண்டு இருந்தாள்.

ரோஜா நிறத்தில் சல்வார் கமீஸ் அணிந்திருந்த லேகா– கேசத்தை இறுக்கமாய் வழித்துப் பின்னி ஒரு தேவதையின் மறுபதிப்பு போல இருந்தாள்.

சுந்தர் அவளை நெருங்கி புன்னகைத்தான்.

"வந்து ரொம்ப நேரமாச்சா?"

"சரியா பத்தரை மணிக்கு நான் இங்கே வந்துட்டேன்..."

"ஸாரி... நான் கொஞ்சம் தாமதம் பண்ணிட்டேன். உன்கிட்ட போன் பேசி முடிச்சதுமே கிளம்பி வந்துட்டேன். டாக்சி போக்குவரத்தில் ஊர்ந்து வந்தது. அதனாலதான் நேரமாகிடுச்சு..."

"பரவாயில்லை... ஏதோ ஆபீசுக்கு தாமதமா வந்து, மானேஜர்கிட்ட ஸொர்க 'எக்ஸ்கியூஸ்' கேக்கற மாதிரி கேட்டுட்டு இருக்கீங்களே...?"

"கல்யாணமான பின்னாடி மனைவிதானே மேனேஜிங் டைரக்டர்..."

ரோஜா நிற உதடுகள் தெரியப் புன்னகைத்தாள் லேகா.

"நமக்குத்தான் இன்னும் கல்யாணமே ஆகலையே...?"

"ஆன மாதிரித்தான். தொண்ணூற்று ஒன்பது சதவீதம் முடிவாயிடுச்சே?"

"இந்த மாதிரி விளக்கம் பேசி பேசி பெண்களை மயக்கத்திலேயே வெச்சிருக்கறது ஒரு வகை நூதனமான ஆண்கள் ஆதிக்கம்..."

"அடக் கடவுளே... முன்னாலே போனா கடிக்கறீங்க. பின்னால வந்தா உதைக்கிறீங்க. உங்களை சமாளிக்கறது நிஜமாவே கஷ்டம்தான்."

லேகா சிரித்துவிட்டுச் சொன்னாள்...

"சரி, இப்படியே 'காம்ப்ளக்ஸ்' வாசலிலேயே நின்னு எவ்வளவு நேரம்தான் பேசிட்டிருக்கிறது...?"

"எதிர்பக்கம் இருக்கிற ஓட்டலில் உட்கார்ந்து இன்னும் கொஞ்ச நேரம் பேசலாம்... அதுக்கப்புறமா 'பர்ச்சேஸ்' பண்ண போகலாம்."

லேகா தோள்களை குலுக்கினாள்.

...போகலாம்..."

அதுக்கே வேகமாய்ச் செல்லும் கார்களும், ஆட்டோக்களும் வடியும் வரை காத்திருந்து சாலையைக் கடந்தார்கள்.

உணவகத்தில் குடும்ப அறைக்குள் நுழைந்து, எதிரெதிர் நாற்காலிகளில் அமர்ந்தார்கள்.

கதவைத் திறந்துகொண்டு உள்ளே வந்த பேரரிடம், 'மெனு' கார்டைப் பார்த்து 'ஆர்டர்' செய்தான் சுந்தர்.

அடுத்த பத்து நிமிடங்களில் மேசை நிறைத்தது. 'ஹாட்பேக்'கில் வந்த உணவு வகைகளைச் சாப்பிடத் தொடங்கிய சுந்தர் மெதுவாகப் பேச்சை ஆரம்பித்தான்.

அத்தனை நேரமாய்க் குறும்புடன் பேசிக்கொண்டிருந்த அவன் முகம் இந்த நிமிடம் ஒரு இறுக்கத்திற்கு உட்பட்டிருந்தது.

"லேகா..."

குளிர்ந்த நீரை சிப்பிக்கொண்டே நிமிர்ந்தாள் லேகா.

"சொல்லுங்க..."

"நிச்சயதார்த்தம் நடக்கிறதுக்கு முன்னாடி உனக்கு ஒரு நகை வாங்கி பரிசளிக்கணும்னு ஏற்கெனவே நான் முடிவு பண்ணி இருந்தேன். ஆனா, அந்த நகையை மும்பையில வாங்கணும்னுதான் நினைச்சிட்டிருந்தேன்..."

"திடீர்னு ஏன் உங்க எண்ணத்தை மாத்திட்டு நகையை இங்கே வாங்க நினைச்சீங்க?"

"உன்கிட்ட ஒரு முக்கியமான விஷயத்தைப் பத்தி பேச வேண்டியது இருந்தது. அதனாலதான் நகை வாங்கித் தர்றதை ஒரு சாக்கா வெச்சு உன்னை வெளியே கூட்டிட்டு வந்தேன்."

"பெண் பார்க்க வந்த அன்னிக்கே... எங்க வீட்டு மொட்டை மாடியில நின்னு ஒரு மணி நேரத்துக்கு மேல் என்கூட தனியா பேசிட்டிருந்தீங்களே!"

"அன்னிக்கு... பொதுவா எல்லா விஷயங்களைப் பத்தியும் ஒருத்தரை ஒருத்தர் பரஸ்பரம் புரிஞ்சுக்கறதுக்காக பேசினோம். ஆனா, இன்னிக்கு அப்படியில்லை. ஒரு முக்கியமான விஷயத்தைப் பத்திப் பேசணுங்கறதுக்காகவே உன்னை கூட்டிட்டு வந்தேன்."

"நேத்து கொஞ்ச நேரம் மொட்டை மாடியிலேயே பேசி



இருக்கலாமே...?"

"இல்ல... இது வீட்டில் வெச்சு பேசக்கூடிய விஷயமில்லை லேகா..."

லேகா குழப்பத்தோடும், கவலையோடும் அவன் முகத்தையே பார்த்தபடி கேட்டாள்... "சரி, சொல்லுங்க... என்ன விஷயம்?"

"அது... வந்து... வந்து..."

"நீங்க தயங்கறதைப் பார்த்தா... மும்பையில் இருந்து வர்றப்போ உங்களுக்கு என்கூட தனியா பேசணும்ங்கற எண்ணம் இல்லைன்னு நினைக்கிறேன். இங்கே வந்ததுக்கு அப்புறமாத்தான் அதுக்கான அவசியம் ஏற்பட்டு பயணத்தை ஒருநாள் ஒத்திப் போட்டு இருக்கீங்க..."

"நீ சொல்றது சரி... இன்னும் சொல்லப் போனா நேத்திக்கு உங்க வீட்டுக்குள் நுழையற வரைக்கும்கூட அந்த அபிப்பிராயம் எனக்கு ஏற்படலை."

"அப்படின்னா நேத்திக்கு எங்க வீட்டில் நடந்த ஏதோ ஒரு விஷயம்தான் உங்களை இவ்வளவு தூரம் 'டிஸ்டர்ப்' பண்ணி இருக்கு."

"ஆமா..."

"அப்படி என்ன நடந்தது? அம்மா ஏதாவது தப்பா பேசிட்டாங்களா...?"

"சேச்சே... அப்படி எதுவுமில்லை..."

"வேறென்ன...?"

"அவசரப்படாதே... நான் உன்கிட்டே பேசத்தானே போறேன். சட்டென்று ஆரம்பிக்கக் கூடிய விஷயமில்லை. கொஞ்சம் கொஞ்சமாத்தான் ஆரம்பிக்கணும்."

"எனக்கு படபடப்பா இருக்கு... விஷயம் யாரைப் பத்தி? என்னைப் பத்தியா...?"

"இல்லை..."

"அப்பா...?"

"நோ... நோ..."

"அம்மாவைப் பத்தியா?"

"பாதி அப்படி வெச்சிக்கலாம்..."

லேகாவின் இதயப் பரப்பிற்குள் பயம் பரவியது.

"பீடிகை வேண்டாம்... பிளீஸ், எதுவா இருந்தாலும் உடனே வெளிப்படையா பேசுங்க. நீங்க தயங்கத் தயங்க எனக்குள்ளே 'டென்ஷன்' அதிகமாகிட்டே இருக்கு..."

"உன்னை 'டென்ஷன்' ஆக்கணும்ங்கறது என்னோட நோக்கமில்லை லேகா. நீயே சொன்ன மாதிரி... எதுவா இருந்தாலும் வெளிப்படையா கேட்டுத் தெளிவுபடுத்திக்கறதுதான் நல்லதுங்கற எண்ணத்தில் நான் இப்போ இந்த விஷயத்தைப் பேச ஆரம்பிக்கிறேன்..."

மனதுக்குள் பரபரப்பு மோத சுந்தரையே அமைதியாய்ப் பார்த்துக்கொண்டிருந்தாள் லேகா.

அவன் தொடர்ந்தான்.

"லேகா, நான் கேட்கப் போற கேள்விக்கு நீ தயங்காம உண்மையைச் சொல்லணும்..."

"கேளுங்க..."

"உனக்குக் கூடப் பிறந்த அக்காவோ, தங்கச்சியோ இருக்காங்களா...?"

இப்படியொரு கேள்வியை அவனிடமிருந்து சற்றும் எதிர்பார்க்காதவளாக திகைப்போடு நிமிர்ந்தாள்.

"நான் ஒரே பொண்ணுதான். நீங்க பொண்ணு பார்க்க வந்த அன்னிக்கே... அப்பா எங்க குடும்பம் பூராத்தையும் பத்தி தெளிவா உங்க அப்பா- அம்மாகிட்டே சொன்னாரே...?"

"சொன்னார்... அதை நானும் கேட்டுகிட்டுத்தான் இருந்தேன். இருந்தாலும் உன்கிட்டே மறுபடியும் கேக்கறேன். உனக்குக் கூடப் பிறந்த அக்காவோ, தங்கையோ... யாராவது இருக்காங்களா?"

தீர்க்கமாய் மறுத்தாள் லேகா.

"இல்லை..."

"ஒண்ணுவிட்ட உறவு முறைகளில்...?"

"அதாவது...?"

"சித்தி அல்லது பெரியம்மா பொண்ணுங்க யாராவது...?"

"நான் எப்படி என்னோட பெற்றோருக்கு ஒரே மகளோ... அதே மாதிரிதான் என்னோட தாத்தா- பாட்டிக்கு எங்க அம்மா ஒரே மகள். எனக்கு அம்மா வழியில் மாமா, சித்தி, பெரியம்மான்னு எந்த



உறவுமே கிடையாது..."

"உன் அம்மாவோட இளமைக்காலம் பத்தி உனக்கு எந்த அளவுக்குத் தெரியும்...?"

ஒரு திடுக்கிடல் அவளுக்குள் [illegible] பரவினாலும், அதை வெளிக்காட்டாமல் அவனை ஏறிட்டாள்.

"எதுக்காக இதையெல்லாம் கேக்கறீங்க...?"

"காரணத்தோடதான் நான் கேக்கறேன் லேகா. உனக்குத் தெரிஞ்ச உண்மைகளை நீ சொல்லணும்னு எதிர்பார்க்கிறேன்..."

சில விநாடிகளை யோசனைக்கு செலவழித்த லேகா, மெல்லமாய் வார்த்தைகளை வெளியிட்டாள்.

"என்னோட அம்மாவுக்கு சின்ன வயசா இருக்கும்போதே அம்மா வழி தாத்தா இறந்துட்டாங்க. அம்மாவுக்குக் கல்யாணமான ஒரு வருஷத்துக்குள்ளே பாட்டியும் இறந்துட்டாங்க. அப்பாவோட சின்ன வயசு பிரதாபங்களை தாத்தா, பாட்டி மூலமா கேட்டுத் தெரிஞ்சுக்கிட்ட மாதிரி அம்மாவின் இளமைக்காலம் பத்தித் தெரிஞ்சுக்க அம்மா வழி தாத்தா- பாட்டி இல்லாம போயிட்டாங்க..."

"லேகா! உன் அம்மாவோட வாழ்க்கையில் ஒரு பெரிய ரகசியம் புதைஞ்சி கிடக்குன்னு நான் நினைக்கிறேன்..."

"எ... என்ன சொல்றீங்க...?"

"ஒருவேளை அதைப் பத்தி உனக்குத் தெரியாமல் இருக்கலாம். உன் அப்பாவுக்குக் கூடத் தெரியாத ரகசியமா அது இருக்கலாம்."

"என்னை [illegible] மாத்தினீங்க. எனக்கும், என்னோட அம்மாவுக்கும் இடையில் தேவையில்லாத இடைவெளிகள் எதுவும் கிடையாது. எந்த விஷயத்தைப் பத்தியும் நான் சுதந்திரமா அம்மாகிட்டே விவாதிப்பேன். என்னவோ ரகசியம் அது இதுன்னு பீடிகை போடறீங்க. அது என்னன்னு வெளிப்படையா சொல்லுங்க. எனக்கு தெரியாத விஷயமா இருந்தா நான் அம்மாகிட்டே நேரடியா கேட்டு உங்களுக்கு சரியான விளக்கம் தர்றேன். எதையும் மூடி மறைக்கணும்ங்கற எண்ணம் எங்க குடும்பத்தில் யாருக்குமே இல்லை..."

"இங்கே பார் லேகா... நீங்க வேணும்னேதான் ஒரு விஷயத்தை மூடி மறைச்சிட்டதா நான் குற்றம் சாட்ட வரலை. அம்மாவைப்

பத்தின அந்த ரகசியம் உங்களுக்கே இதுநாள் வரைக்கும் தெரியாம இருக்கலாம்..."

"அப்படின்னா அம்மா எங்கிட்டேயே ஏதோ ஒரு விஷயத்தை மூடி மறைச்சிருக்காங்கன்னு சொல்ல வர்றீங்களா...?"

"அவசரப்படாதே! எனக்கும் முழுசா எந்த உண்மையும் தெரியாது. இந்த நிலைமையில் நான் யாரையும் குற்றம்சாட்ட விரும்பலை. ஆனா, சில விஷயங்களை இந்த நிலைமையில் தெளிவுபடுத்திக்கலைன்னா... என்னிக்காவது ஒருநாள் நம்ம வாழ்க்கையில பெரிசா புயலடிச்சிடுமோனு பயமா இருக்கு..."

"விஷயத்தைச் சொல்லுங்க மொதல்ல..."

"நீ எவ்வளவோ விஷயங்களை உங்க அம்மாகிட்ட பேசி பதில் வாங்கி இருக்கலாம் லேகா. ஆனா, இந்த விஷயத்தை... நான் இப்போ சொல்லப் போகிற விஷயத்தை அது மாதிரி எளிதா பேச முடியாது."

"சுந்தர்... நீங்க பீடிகை போடப் போட எனக்குள்ளே ரத்த அழுத்தம் எகிறிட்டே இருக்கு."

"காரணத்தோடதான் நான் இவ்வளவு தூரம் பீடிகை போடறேன் லேகா. ஏன்னா, விஷயம் அவ்வளவு சிக்கலானது."

லேகா நெற்றியில் விழுந்த கற்றை முடியை ஒதுக்கிக்கொண்டே கலக்கம் நிரம்பிய விழிகளோடு சொன்னாள்.

"நீங்க இவ்வளவு தூரம் தயக்கம் காட்டினதிலேயே ஏதோ ஒரு அதிர்ச்சிகரமான தகவலைக் கேக்க மனசளவில் நான் தயாராயிட்டேன் சுந்தர். எதுவா இருந்தாலும் பரவாயில்லை. சொல்லுங்க..."

சுந்தர் ஒரு நீண்ட மவுன இடைவெளிக்குப் பின்னர் தன் பாக்கெட்டில் கையை நுழைத்து, அந்தப் புகைப்படத்தை எடுத்து மேஜையில் அவள் பார்க்கிற மாதிரி வைத்தான்.

"என்னோட மும்பை பயணத்தை ஒருநாள் ஒத்திப் போட்டுட்டு... இந்த நிமிஷம் உன்கூட என்னைப் பேச வெச்சிட்டிருக்கறது... இந்த போஸ்ட் கார்டு அளவு புகைப்படம்தான் லேகா..."

பழுப்பேறிய அந்த புகைப்படத்தைப் பார்த்து பலத்த திகைப்போடு நிமிர்ந்தாள் லேகா.

"இது... இது...?"



"யாரோட போட்டோன்னு தெரியுதா...?"

"சின்ன வயசில் எடுத்த என் அம்மாவோட போட்டோதான். இது... எப்படி உங்களுக்குக் கிடைச்சது...?"

"நேத்திக்கு நான் உங்க வீட்டுக்கு வந்தபோது, வீட்டில் அம்மா மட்டும்தான் இருந்தாங்க. உனக்கும், உன்னோட அப்பாவுக்கும் நான் வந்திருக்கும் தகவலை போன் பண்ணிச் சொல்லப் போனப்ப உங்க வீட்டு 'ஷெல்ப்'பில் இருந்த போட்டோ ஆல்பத்தை எடுத்து பொழுது போறதுக்காக பார்த்துட்டிருந்தேன்.

ஆல்பத்தைப் புரட்டிகிட்டே வந்தவன்... இந்த போட்டோவைப் பார்த்ததும் 'ஷாக்' ஆயிட்டேன். அந்த நிமிஷமே உன்கூட தனியா பேசணும்னு முடிவு எடுத்தேன். இந்த போட்டோவையும் அந்த ஆல்பத்தில் இருந்து உருவி எடுத்து, என் பேண்ட் பாக்கெட்டில் பத்திரப்படுத்தி வெச்சிகிட்டேன்..."

"என்னோட அம்மாவின் சின்ன வயசு போட்டோவைப் பார்த்து நீங்க ஏன் 'ஷாக்' ஆகணும்...?"

சுந்தர் நிதானமான குரலில் சொன்னான்.

"அப்படியே அச்சில் வார்த்த மாதிரி... இந்த போட்டோவில் இருக்கிற இதே சாயலில் உள்ள ஒரு பெண்ணை மும்பையில் நான் தினமும் பார்த்திருக்கிறேன்..."

திடுக்கிட்டுப் போய் நிமிர்ந்தாள் லேகா.

"எ... என்ன சொல்றீங்க...?"

"ஏதோ உங்க அம்மா சாயல்ல இருக்கிற ஒரு பொண்ணுன்னு நான் சொல்ல வரலை லேகா. நிறம், கூர்மையான அந்த மூக்கு, காது மடலின் மத்தியில் உங்க அம்மாவுக்கு லேசான மடங்கல் இருக்கே... அதுகூட பிசகாம அப்படியே அந்தப் பொண்ணுக்கு இருக்கு. சுருக்கமா சொல்லப் போனா இந்த போட்டோவை நேரில் பார்க்கிற மாதிரியே இருக்கும். நீ உங்க அப்பாவோட ஜாடையில் இருக்கே லேகா. ஆனா, அந்தப் பொண்ணு உங்க அம்மாவையே உரிச்சு வெச்சிருக்கு."

லேகா கண்கள் கலங்க அவனை ஏறிட்டு... நடுங்கும் குரலில் பேசினாள்.

"இவ்வளவு அதிர்ச்சியான ஒரு விஷயத்தைச் சொல்லி என்னை ஸ்தம்பிக்க பண்ணிட்டீங்க. இதைப்பத்தி நான் எப்படி நேரடியா

பார்க்கும்போதெல்லாம், "அம்மா...ஏம்மா என்னை விட்டுட்டு போயிட்டே... நான் கருப்பா அசிங்கமா இருக்கேன்னு உனக்கு என்னை பிடிக்கலையா? அம்மா, என்னைக்கட்டிப்பிடிப்பியா? எனக்கு முத்தம் தருவியா?" -இப்படி மனசுக்குள் நிறைய கேள்விகள் கேட்டுக்கொள்வான். அந்தப்பொம்மையின் அருகில் நின்று, இமைகொட்டாமல் பார்த்துக்கொண்டிருக்கும் இவனை பலமுறை துணிக்கடை ஊழியர்கள் விரட்டி இருக்கிறார்கள்.

ஒருநாள் தெருவில் விளையாடிக் கொண்டிருந்தபோது, கீழே விழுந்துவிட்டான். காலில் காயம்பட்டுவிட்டது. என்ன செய்வதென்றே தெரியாமல் அழுதான். அப்படியே நேராக துணிக்கடை பக்கம் போனான்.

பொம்மையை இறுக்கமாக் கட்டிக்கொண்டான்.

அதை ஊழியர்கள் பார்த்துவிட்டார்கள். "இந்த வயசுல என்ன புத்தி பாருங்க! பொம்மையைக் கட்டிப்பிடிக்கிறான்" என்று ஒருவன் பேசிக்கொண்டே வந்து அவன் சட்டைபோடாத முதுகில் 'சடார்' என அடித்தான்.

அவன் வலிதாங்காமல் அலறி துடித்தான். மெதுவாக நடந்து சென்று அந்த வேப்பமரத்தடிக்கு வந்தான். அழுக்குமூட்டையைத் தலைக்கு வைத்து ஒருக்கழித்துப் படுத்தான். கண்களில் வழிந்தோடிய கண்ணீர், கன்னங்களில் உருண்டோடியது.

அது வலியின் வேதனையால் வந்ததா? அன்னை என நினைத்து சிலையைத் தொட்டுவிட்ட ஆனந்தத்தில் வந்ததா? தெரியவில்லை! ★

## மொய்க்காத பூக்கள்

**வ**ண்டுகள் மொய்க்காத பூக்களும் உண்டு. அவை செண்பகம், வேங்கைப் பூக்கள்.

– சுமதி சண்முகசுந்தரம், தேவனாங்குறிச்சி.



எங்க அம்மாகிட்டே கேக்க முடியும்...?"

"ஐ நோ... இதை நீ உன் அம்மாகிட்டேயும் கேக்க முடியாது. இதைப் பத்தி உங்க அப்பாகிட்டேயும் விசாரிக்க முடியாது."

"என்னோட அம்மாவை முதன் முதலா நீங்க பார்த்த அன்னிக்கு இந்த விஷயம் உறுத்தலையா...?"

"ஏற்கெனவே எங்கேயோ பார்த்த மாதிரி இருக்கேன்னு மட்டும் தோணிச்சு. வயசாயிட்டதாலே அவங்க முகம் நிறைய மாறி இருக்கே... இந்த சின்ன வயசு போட்டோவைப் பார்த்ததும் பளிச்சுன்னு எனக்கு மும்பையில் இருக்கும் அந்தப் பொண்ணு ஞாபகத்தில் வந்திடுச்சு..."

"யார் அவள்...?"

"அவளோட பேர் எனக்குத் தெரியாது. மும்பையில் எங்க கம்பெனியின் ரெஜிஸ்டர் ஆபீஸ் இருக்கிற அதே கட்டடத்தின் தரைத்தளத்தில் உள்ள ஒரு கட்டட காண்டிராக்டரின் ஆபீஸில்தான் அந்தப் பொண்ணு வேலை பார்க்கிறா..."

"அவளைப் பத்தி இதுக்கு மேலே உங்களுக்கு வேற எந்தத் தகவலும் தெரியாதா...?"

"தெரியாது லேகா. ஒரே கட்டடத்தில் இருக்கிறதால அடிக்கடி பார்த்துப் பார்த்து அந்த பொண்ணோட முகம் மட்டும் என் மனசில் பதிவாகி இருந்தது..."

"மும்பையில் எங்களுக்கு உறவுக்காரங்க கூட யாருமே இல்லை."

"இந்த சந்தேகத்தைத்தான் நான் ஆரம்பத்திலேயே கேட்டுத் தெளிவுபடுத்திட்டேன். அந்தப் பொண்ணு அச்சில் வார்த்த மாதிரி உங்க அம்மாவைப் போலவே இருக்கிறதால உங்க அம்மா பெத்தெடுத்த மகளாத்தான் அவ இருக்க முடியும்..."

லேகா காதுகளைப் பொத்திக்கொண்டாள்.

"சுந்தர்..."

"சிலநேரம் உண்மைகள் இப்படித்தான் இடி மாதிரி இறங்கும் லேகா. அவை உண்மையா இருக்கிற பட்சத்தில் அவைகளைத் தாங்கிக்கக் கூடிய சக்தி நிச்சயமா நமக்கு வேணும்..."

"என்னோட அம்மாவின் வாழ்க்கையில் ஏதோ ஒரு நிழலா பின்னணி இருக்குன்னு நீங்க நினைக்கிறீங்களா...?"

"இருக்கலாம்."

"வெள்ளிக்கிழமையானா விடிகாலையில தலைக்குக் குளிச்சு முகமெல்லாம் மஞ்சள் மின்ன... நெத்தி நிறைய குங்குமப் பொட்டு வெச்சு சாமி படத்தின் முன்னால உக்காந்தாங்கன்னா - சுப்ரபாதம் கந்தசஷ்டி கவசம், விநாயகர் அகவல், அபிராமி அந்தாதி, லட்சுமி ஸ்தோத்திரம்னு ஒரு வாயி பச்சை தண்ணிக்கூட குடிக்காம எட்டு மணி வரைக்கும் பூஜை அறையிலேயே இருப்பாங்க.

'ஏம்மா இப்படி 'ஸ்ட்ரெயின்' பண்ணிக்கறே?'ன்னு கேட்டா 'எனக்கு உறவுன்னு சொல்லிக்க உன்னையும், உன் அப்பாவையும் விட்டா வேற யாருடி இருக்கா...? நீங்க ரெண்டு பேரும் நல்லா இருக்கணும்னுதான் வெள்ளிக்கிழமை விரதம் இருக்கேன்'னு சொல்லுவாங்க.

சாமி படத்தின் முன்னாலே உக்காந்து என்னோட அம்மா சொன்ன பதில் பொய்யா...? 'எனக்கு உன்னையும், அப்பாவையும் விட்டா வேற எந்த உறவுமே கிடையாதுன்'னு கடவுள் படத்தை சாட்சியா வெச்சிகிட்டு பொய் சொல்ற அளவுக்கு அழுத்தக்காரியா எங்க அம்மா...? அவங்க மாசு படிஞ்சவங்கறதைத் தவிர இந்த விஷயத்தில் வேற எந்த சாத்தியாம்ம் இல்லையா சுந்தர்...?"

"வேற என்ன சாத்தியக்கூறு இருக்க முடியும்னு நீ நினைக்கிறே...?"

"இந்த உலகத்தில் ஒரே மாதிரி உருவத்தோட ஏழு பேர் இருப்பாங்கன்னு சொல்வாங்களே...?"

"வாஸ்தவம்தான்! ஆனா, இந்தப் பிரச்சினையை நல்லா யோசனை பண்ணிப் பாரு. அந்தப் பொண்ணுக்கும், உன்னோட அம்மாவுக்கும் ஒரு தலைமுறை வயசு வித்தியாசம் இருக்கு. உன் அம்மாவைப் போலவே தோற்றத்தோட அவங்களோட சம வயதில் ஒரு பெண்மணி இருந்தா, நீ சொல்ற கோணத்தில் யோசிச்சுப் பார்க்கலாம்..."

"அப்படின்னா அம்மா கறை படிஞ்சவங்களா...?"

"ஒரு விஷயத்தை முழுசா தெரிஞ்சிக்காம நாம எதையும் பட்டவர்த்தனமா சொல்லக்கூடாது."

"அப்படின்னா இப்ப என்னதான் செய்யறது...?"

"இதைப் பத்தி உன்னோட அம்மாகிட்டேயும் கேக்க முடியாது. அப்பாகிட்டேயும் கேக்க முடியாது. நாம ரெண்டு பேரும் முயற்சி எடுத்து அந்தப் பொண்ணோட பின்னணியைத் தெரிஞ்சிக்கணும்..."

"நீங்கதான் அந்தப் பொண்ணை அணுகி விபரம் விசாரிக்க முடியும். நான் இப்போ எப்படி மும்பை வர முடியும்...?"

"நான் விசாரிச்சாலும்கூட அந்தப் பொண்ணு சொல்ற தகவல்களை சரிபார்க்க உங்க குடும்பப் பின்னணி தெரிஞ்ச யாராவது ஒருத்தர் என்கூட இருக்கணும் லேகா. நகை வாங்கறதை சாக்கா வெச்சு நான் உன்னை எப்படி இங்கே கூட்டிட்டு வந்தேனோ... அதே மாதிரி ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லி ஒரு நாலைந்து நாளைக்கு நான் உன்னை மும்பை கூட்டிட்டுப் போகணும்..."

"நான் உங்ககூட தனியா மும்பைக்கு வர்றதுக்கு என்ன காரணம் சொல்ல முடியும்...?"

"நான் நேத்துலேருந்தே யோசிச்சுகிட்டு இருக்கேன்... இந்த நிமிஷம் வரைக்கும் பொருத்தமான காரணம் எதுவும் கிடைக்கலை. நீயும் யோசனை பண்ணிப் பாரு லேகா..."

அவள் யோசனையாய் நெற்றியை விரலால் தேய்த்துக்கொண்டிருந்த விநாடி...

அந்த அறையின் கதவு அசையும் சப்தம் கேட்டது.

இருவரும் திரும்பிப் பார்த்தார்கள்.

அதிர்ந்தார்கள்.

கதவு வாசலில்...

லேகாவின் அப்பா ராமமூர்த்தி.

மெதுவாய் நடைபோட்டு உள்ளே வந்தார்.

பார்வை விலகியிருந்தது.

"அப்பா..." - லேகா மெதுவாய் எழ முயல...

"மாமா நீ... ங்க... எப்போ வந்தீங்க...?" சுந்தர் திக்கித் திணற - அவர் சொன்னார்.

"என்னோட மனைவி செண்பகவல்லி பத்தி லேகாகிட்டே நீங்க சொல்லிட்டிருந்தீங்களே... அப்பவே நான் வந்துட்டேன்..."

ராமமூர்த்தியின் கண்களும், முகமும் சிவந்து கிடந்தன.

## 3

அதிர்ச்சியுடன் இருந்த ராமமூர்த்தியை சமாதானப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டான் சுந்தர்.

"மாமா... நீங்க அவசரப்பட்டு எந்த முடிவுக்கும் வராதீங்க..."

"மாப்பிள்ளை... ஒரு பொண்ணை நல்லபடியா வளர்த்து, நல்ல பேரோட ஒரு இடத்தில் கல்யாணம் பண்ணித் தர்றதுங்கறது எவ்வளவு பெரிய காரியம்னு பொண்ணைப் பெத்தவங்களுக்குத்தான் தெரியும். நீங்க இந்தக் காலத்து ஆள். அதனால பெருந்தன்மையோடு லேகாவைத் தனியாகக் கூப்பிட்டு இதைப் பத்தி விசாரிச்சிட்டிருக்கீங்க. இதே உறுத்தல் உங்க வீட்டுப் பெரியவங்களின் மனசில் ஏற்பட்டிருந்தா... அவங்க என்ன செஞ்சிருப்பாங்க தெரியுமா? உடனடியா கல்யாணத்தை நிறுத்தி இருப்பாங்க."

"அப்படியெல்லாம் எதுவும் நடக்காது மாமா."

"அப்படித்தான் நடக்கும். அவங்களைச் சொல்லித் தப்பு இல்லை... அவங்களோட கோணத்திலிருந்து பார்த்தா அது சரிதான். என்னோட வருத்தமெல்லாம் செண்பகவல்லி மேலதான். இருபது வருஷ தாம்பத்தியத்தில் என்கிட்டே கூட இன்னித்த தேதி வரைக்கும் அவ எதையுமே சொல்லவே இல்லையே... அவ செஞ்ச தப்புக்காக இன்னிக்கு என் மகளோட வாழ்க்கை பறிபோற நிலைமைக்குக் கொண்டுவந்து விட்டிருக்கா..."

"மாமா, விஷயத்தைச் சொன்னதும்... லேகாவும் இடிஞ்சு போயிட்டா. நீங்களும் ஆத்திர வயப்பட்டுட்டீங்க. ஆனா, நான் நிதானம் தவறாம இருக்கேன். முழுசா விசாரிக்காம அத்தை மேல எந்தப் பழியையும் போட விரும்பலை..."

"கண்ணெதிரே நடமாடும் சாட்சியா மும்பையில் அந்தப் பொண்ணு இருக்கிறப்போ... இதுக்கு மேலும் முழுசா விசாரிக்கறதுக்கு என்ன இருக்கு மாப்பிள்ளை...?"

"கண்ணால் காண்பதும் பொய்... காதால் கேட்பதும் பொய்... தீர விசாரிப்பதே மெய். இது பழைய பழமொழிதான். ஆனா, பெரியவங்க சும்மா சொல்லலை... இந்த மாதிரி நேரங்களில் நாம நிதானம் இழக்காம யோசிக்கறதுக்காகத்தான் சொல்லி இருக்காங்க..."

"உங்க நிதானமான அணுகுமுறை எனக்கு ஆச்சரியமா இருக்கு..."

"என்னோட இந்த நிதானத்துக்குக் காரணமே அத்தைதான்..."

"புரியும்படியா சொல்லுங்க மாப்பிள்ளை..."

"ரெண்டொரு தடவைதான் அவங்களை நான் பார்த்திருக்கேன். அதிகபட்சமா நாலு வார்த்தைகளுக்குள்தான் பேசியிருப்பேன். ஆனா, இந்த குறுகிய சந்திப்பிலேயே எனக்கு அவங்க மேல அபாரமான மரியாதை ஏற்பட்டுப் போயிடுச்சு. அவங்களைப் பார்த்தவுடனே கையெடுத்துக் கும்பிடத்தான் தோணுதே தவிர, வேறவிதமா நினைக்கத் தோணலை..."

"ஒரு பெரிய ரகசியத்தை உள்ளுக்குள்ளே புதைச்சி வெச்சிக்கிட்டு அவளால எப்படி இயல்பா சிரிக்க முடியுதுங்கறதுதான் என்னோட கேள்வி..."

"இல்லை மாமா... உள்ளே விஷத்தை வெச்சிக்கிட்டு மேலே சிரிக்க முடியாது. மனசுக்குள் அழுக்கு இருந்தா அந்த அழுக்கை நிச்சயமா முகம் காட்டிக் கொடுத்துடும்."

"செண்பகவல்லி எந்தத் தப்பும் செஞ்சிருக்க மாட்டாள்னு நீங்க சொல்றீங்களா...?"

"நான்தான் ஆரம்பத்தில் இருந்தே திரும்பத் திரும்ப ஒரே விஷயத்தை சொல்லிட்டு வர்றேனே... அவங்க மேல தப்பு இருக்கா, இல்லையான்னு நாம இப்படி விவாதிச்சு தீர்மானிக்க வேண்டாம். அந்த மும்பைப் பெண்ணின் பின்னணி பத்தி விசாரிச்சித் தெரிஞ்சுகிட்டு அதுக்கப்புறமா ஒரு முடிவுக்கு வரலாம்..."

"அந்த முடிவு செண்பகவல்லிக்கு பாதகமா இருந்தா...?"

- கேட்ட ராமமூர்த்தியைப் பார்த்து புன்னகைத்தான் சுந்தர்.

"உங்க கவலை எனக்குப் புரியுது. இந்தப் பிரச்சினைக்கும் லேகாவோட கல்யாணத்துக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது. முடிவு எப்படி இருந்தாலும் லேகாவை நான் கல்யாணம் பண்ணிக்கப் போறேன்ங்கறதில் எந்த மாற்றமும் இல்லை. அந்த சத்தியத்தை இந்த நிமிடம் நான் உங்களுக்குத் தர்றேன் மாமா..."

பனித்த கண்களோடு சுந்தரின் கைகளைப் பற்றிய ராமமூர்த்தி தழுதழுத்த குரலில் சொன்னார்.

"மாப்பிள்ளை... உங்க பெருந்தன்மையான மனசை நான் வாழ்நாள் பூராவும் மறக்கமாட்டேன். உங்களுக்கு எப்படி நன்றி சொல்றதுன்னு தெரியலை..."

"அதையெல்லாம் அப்புறம் பார்த்துக்கலாம். முதல்ல நம்ம மூணு பேர் மனசுக்குள்ளும் எழுந்திருக்கிற இந்த உறுத்தலைப் போக்கறதுக்கு என்ன வழின்னு யோசிக்கலாம்..."

"அதுக்கு ஒரே வழி... நீங்க சொன்ன மாதிரி அந்த மும்பை பொண்ணை நாம நேரில் சந்திச்சு- அவளோட பின்னணியை விசாரிச்சித் தெரிஞ்சிக்கறதுதான்..."

லேகா குறுக்கிட்டாள்.

"அம்மாகிட்டே ஏதாவது காரணத்தைச் சொல்லிட்டு நாம மும்பை போகணும்... அதான் இப்ப பிரச்சினை..."

சுந்தர் புன்னகையோடு அவளிடம் சொன்னான்.

"இந்த நிமிடம் அது ஒரு பிரச்சினையே இல்லை லேகா."

"பொருத்தமான காரணம் எதுவும் தோணவே இல்லைன்னு அப்பவே சொன்னீங்களே?"

"அப்ப கிடைக்கலை... அதனால அப்படிச் சொன்னேன். இப்போ எனக்குக் காரணம் கிடைச்சிடுச்சு..."

"சொல்லுங்க..."

"எனக்கு மும்பையில் இருந்து இன்னிக்குக் காலையில போன் வந்ததா சொல்லப் போறோம்..."

"என்னன்னு போன்...?"

"வயசான தாத்தா ஒருத்தர் எங்க வீட்டில் படுத்த படுக்கையா கிடக்கறார். அவர் லேகாவைப் பார்க்கணும்னு சொன்னதா



அத்தைகிட்டே சொல்லலாம். தினமுமே அவர் லேகாவை ஒரு தடவை கண்ணிலே பார்க்கணும்னு புலம்பிட்டுத்தான் இருக்கார்..."

"சரி..."

"அவர் இன்னிக்கோ... நாளைக்கோன்னு படுக்கையில கிடக்கறார்... ஒருவேளை கல்யாணம் நடந்து முடியறதுக்குள்ளே போய்ச் சேர்ந்துட்டா, அப்புறம் வீட்டுக்கு வரப் போற மணமகளை நேரில் பார்க்க முடியாமலே போயிடுமேன்னு நினைக்கறார்..."

லேகா சந்தேகக் கேள்வியை எழுப்பினாள்.

"அம்மாவும் கூட வருவாங்களே...?"

"வரட்டுமே! எப்படி இருந்தாலும் ஒரு லாட்ஜிலோ... கெஸ்ட் ஹவுசிலேயோதான் உங்களைத் தங்க வெக்கப் போறோம். அந்த நாலு நாளில் சில மணி நேரங்கள் அத்தையை விட்டுட்டுப் போய் அந்த பொண்ணைப் பார்த்து- அவள் பின்னணியை விசாரிச்சுத் தெரிஞ்சுக்கறது பெரிய பிரச்சினை இல்லை. தாராளமா உங்க அம்மா வரட்டும்."

ராமமூர்த்தி குறுக்கிட்டார்.

"அந்தக் கவலையெல்லாம் உங்களுக்கு வேணாம். செண்பகவல்லி கூப்பிட்டாலும்கூட வரமாட்டா..."

"எப்படி இவ்வளவு உறுதியா சொல்றீங்க...?"

"நான் வரலைன்னு அவளே சொல்லிடுவா. ஏன்னா அவளால அவ்வளவு தூரம் பயணம் பண்ண முடியாது. காரணம் முதுகுவலி. செண்பகவல்லியை மும்பை கூட்டிட்டுப் போகணும்னா விமானத்தில் போறதுதான் ஒரே வழி..."

லேகாவும் தலையாட்டினாள்.

"ஆமா... அன்னிக்கு ஒரு நாள் திருப்பதி போறதுக்குள்ளேயே அம்மா படாதபாடு பட்டுட்டாங்க. அவங்க எப்படி மும்பை வரைக்கும் நம்ம கூட வர முடியும்? அம்மா கண்டிப்பா வர மாட்டாங்க."

"அப்படின்னா நாம மூணு பேரும் மும்பை போறோம். வியாழக்கிழமை அந்தப் பொண்ணை சந்திக்கிறோம். அவளின் குடும்ப பின்னணியை விசாரிச்சித் தெரிஞ்சிக்கிறோம். எந்த

விதத்திலாவது அவளுக்கும், அத்தைக்கும் இடையில் உறவு இருக்கான்னு கண்டுபிடிக்கிறோம்..."

ராமமூர்த்தியும், லேகாவும் கலக்கமாய் தலைகளை அசைத்தார்கள்.

## 4

விழாழக்கிழமை.

மும்பை மேக மூட்டத்துடன் இருந்தது.

நகரத்தின் இடைப்பு பகுதியில் மரங்களுக்கு மத்தியில் புதைந்திருந்த கெஸ்ட் ஹவுசில் ராமமூர்த்தியும், லேகாவும் தங்க வைக்கப்பட்டு இருந்தார்கள்.

லேகா பால்கனியில் நின்று ஈரத் தலையை உலர்த்திக் கொண்டிருந்தபோது, 'கேக்' துண்டம் போல கெஸ்ட் ஹவுசுக்குள் வழுக்கிக்கொண்டு வந்தது அந்த இலவம் பஞ்சு நிற கார்.

'ஸ்டியரிங்'கை வளைத்துக்கொண்டே மேலே பார்த்துப் புன்னகை முகத்துடன் கையை அசைத்தான் சுந்தர்.

லேகா பதிலுக்குக் கை அசைத்தபோது கெஸ்ட் ஹவுசின் போர்டிகோவுக்குள் வந்து கார் அடங்கி நின்றது.

லேகா மெல்ல பால்கனியைக் கடந்து உள்ளே வந்தாள்.

உடை மாற்றிக்கொண்டிருந்த ராமமூர்த்தியைப் பார்த்து சொன்னாள்.

"அப்பா... அவர் வந்துட்டார்."

அவர் தலை அசைக்கிறபோதே மாடிப் படிகளில் காலடி யோசையையும், அதைத்தொடர்ந்து 'டொக்... டொக்...' என்று கதவில் சுந்தர் எழுப்பிய நாகரீகமான தட்டல் சப்தமும் காது மடல்களைத் தொட்டன.

"வாங்க மாப்பிள்ளை... கதவு சும்மாதான் சாத்தி இருக்கு."

நீலநிற ஜீன்சும், வெள்ளை உல்லன் சட்டையும் அணிந்திருந்த சுந்தர், கார் சாவியை சுழற்றிக்கொண்டே அந்த ஹாலுக்குள் நுழைந்தான்.



"கெஸ்ட் ஹவுஸ் வசதியா இருந்ததா? ராத்திரி நல்லா தூங்கி 'ரெஸ்ட்' எடுத்தீங்களா...?"

"கெஸ்ட் ஹவுஸ் வசதியாத்தான் இருக்கு மாப்பிள்ளை. ஆனா எனக்கு சரியா தூக்கம்தான் வரலை."

"ஏன்...?"

"செண்பகவல்லியும், உங்க ஆபீஸ் கட்டடத்தில் இருக்கற பொண்ணும்தான் என் மனசை அரிச்சிட்டு இருக்கும்போது எப்படி தூக்கம் வரும்?"

"மாமா... ஒரு பிரச்சினை நமக்கு முன்னாடி இருக்குன்னா அதை சந்திக்கிறதைத் தவிர வேற வழியில்லை. அநாவசியமா மன சஞ்சலப்பட்றதில் எந்த அர்த்தமும் இல்லை. எந்த முடிவா இருந்தாலும் தாங்கிக்கற மனப் பக்குவத்துக்கு நீங்க வரணும்."

"அந்தப் பக்குவத்துக்கு நான் வந்துட்டேன் மாப்பிள்ளை. ஆனா, ஏதோ ஒரு முடிவு தெரியற வரைக்கும் என்னால நிம்மதியா தூங்க முடியாது."


"நீங்க மனசை அலட்டிக்கவே வேண்டாம். இன்னிக்கு அந்தப் பொண்ணை நாம நேரில் பார்த்துப் பேசினோம்னா பிரச்சினையின் நீள, அகலங்கள் நமக்குத் தெரிஞ்சிடும்."

"என்னோட நிலையில் இருந்து யோசிச்சுப் பாருங்க... நான் எப்படி மன அமைதியோட இருக்க முடியும்?"

"பாசிட்டிவ்வா யோசனை பண்ணுங்க..."

"என்னோட மனைவியின் அச்சு மாதிரி ஒரு பொண்ணு மும்பையில் இருக்கும்போது... இதை நான் எந்த வகையில் பாசிட்டிவ்வா எடுத்துக்க முடியும்...?"

"அத்தை எதையோ மறைச்சிட்டாங்கன்னு நீங்க நினைச்சா அது 'நெகட்டிவ்' அணுகுமுறை. அத்தைக்கே தெரியாம அவங்க குடும்பத்தில் ஏதோ உறவு முறைகள் இருந்திருக்கலாம். அப்படி ஏதாவது இருந்தா அதுக்கு அத்தை எப்படி பொறுப்பாக முடியும்? இது 'பாசிட்டிவ்' அணுகுமுறை. இந்த 'பாசிட்டிவ்' எண்ணத்தோட நாம இந்தப் பிரச்சினைக்கு விடை தேட முயற்சி பண்ணினோம்னா... நிச்சயமா தெளிவான, அமைதியான மனசோட ஒரு தீர்வுக்கு வர முடியும். இல்லைன்னா... தேவையில்லாத ஆத்திரமும், மன சஞ்சலமும்தான் மிஞ்சும்."



"நீங்க சொல்ற மாதிரி இந்த விஷயத்தில் நான் 'பாசிட்டிவ்' எண்ணத்தோடவே இருக்க முயற்சி பண்ணுறேன்."

"தட்ஸ் குட்."

– சொல்லிக்கொண்டே தொலைபேசியை நெருங்கியவன், அதற்கு அருகில் வைத்திருந்த தடிமனான டைரக்டரியை எடுத்தான்.

'எம்' வரிசையில் விரல்களை நகர்த்திக்கொண்டே வந்து– 'மெட்ரோ பில்டர்ஸ் அண்ட் ஆர்க்கிடெக்ட்ஸ்' என்ற வரியில் தேடலை நிறுத்தினான்.

அதற்கு நேரே இருந்த எண்களை மனதில் வாங்கிக்கொண்டு பொத்தான்களை அழுத்தினான்.

மறுபக்கம் சில விநாடிகளுக்கு 'ரிங்' போன பின்பு 'ரிசீவர்' எடுக்கப்பட்டது.

"ஹலோ மெட்ரோ பில்டர்ஸ் அண்ட் ஆர்க்கிடெக்ட்ஸ்..."

ஒரு கரகரப்பான ஆண் குரல் கேட்டதைத் தொடர்ந்து– சுந்தர் தொண்டையைச் செருமிக்கொண்டு கேட்டான்.

"உங்க காம்ப்ளக்சின் ரெண்டாவது தளத்தில் மும்பை மெஷின்–டூல்ஸ்னு ஒரு கம்பெனி இருக்கு தெரியுமா...?"

"தெரியும் சொல்லுங்க..."

"அந்த கம்பெனியின் எம்.டி. சுந்தர் பேசறேன்..."

"சொல்லுங்க சார்... என்ன விஷயம்?"

"உங்க ஆபீசில் ஒரு பொண்ணு வேலை பார்க்குதே...?"

"ஆமா, ஊர்மிளா."

"என்னவா இருக்கா...?"

"டிராட்ஸ் வுமன் சார்... பில்டிங் டிராயிங்ஸ், பிளான்ஸ் எல்லாம் வரைஞ்சு கொடுக்கும். எஸ்டிமேஷன் தயார் பண்ணும்."

"அந்தப் பொண்ணுகூட நான் பேசணும்..."

"இன்னிக்கு அந்தப் பொண்ணு வரலை சார்..."

"வரலையா... ஏன்?"

"உடம்பு சரியில்லை. இன்னிக்கு ஒரு நாள் லீவு வேணும்னு கொஞ்ச நேரத்துக்கு முன்னாலதான் போன் பண்ணி சொல்லிச்சு..."

"ஐ ஸீ..." என்றபடியே சில விநாடி யோசித்தவன் கேட்டான்.

"உடம்பு சரியில்லைன்னா அந்த ஊர்மிளா தன் வீட்டில்தானே

இருப்பா...?"

"ஆமா சார். வைரஸ் காய்ச்சல். ஒரு நாள் முழுக்க ஓய் எடுக்கணும்னு டாக்டர் சொன்னாராம்."

"அந்தப் பொண்ணோட வீட்டு முகவரி தர முடியுமா? நா அந்தப் பொண்ணை உடனடியாக பார்த்தாகணும்."

"தர்றேன்... என்ன விஷயமா ஊர்மிளாவைப் பார்க் விரும்பறீங்கன்னு நான் தெரிஞ்சிக்கலாமா...?"

"கொஞ்சம் 'பர்சனல்'. அவளைப் பார்க்கிறதுக்கா சென்னையில் இருந்து அவளுக்கு வேண்டியவங்க ரெண்டு பே வந்திருக்காங்க..."

"அட்ரசை சொல்றேன்... 'நோட்' பண்ணிக்கறீங்களா...?"

"சொல்லுங்க..."

"நாற்பத்தெட்டு... முதல் கிராஸ்... வடக்கு அவென்யூ... சிவா நகர்..."

"தாங்க்யூ..."

ரிசீவரை வைத்தான் சுந்தர்.

ராமமூர்த்தி அவனை ஏறிட்டார்.

"அந்தப் பொண்ணு கிடைச்சாளா மாப்பிள்ளை...?"

"உடம்பு சரியில்லாததால் வீட்டில் ஓய்வு எடுத்துட்டிருக்காளாம் நாம வீட்டில் பேசலாம். வீட்டில் வேற பெரியவங்க இருந்தா அவளுக்குத் தெரியாத விஷயங்களைக் கூட கேட்டுத் தெரி சிக்கலாம்..."

"வீட்டு முகவரி வாங்கிட்டீங்களா...?"

"வாங்கிட்டேன்... நாம இப்போ கிளம்பிப் போனா சரியா இருக்கும்னு நினைக்கிறேன்."

படிகளில் தடதடத்துக் கீழே வந்தார்கள்.

காரின் 'குஷன்' இருக்கைகளில் சாய்ந்தார்கள்.

சுந்தர் இக்னீஷியனை உசுப்பி காரை 'ஸ்டார்ட்' செய்து வடக்கத்திய முகத்தோடு இருந்த வாசல் காவலாளியின் 'சல்யூட்'டை வாங்கிக்கொண்டே கெஸ்ட் ஹவுசைக் கடந்தான்.

பெரிய பெரிய ஹோர்டிங்குகளும், சைன் போர்டுகளும்– நாற்பது சதவீதம் இந்தியும், முப்பது சதவீதம் மராத்தியும், இருபது சதவீதம்



ஆங்கிலமும் பேசிக்கொண்டிருந்தன.

அகலமான சாலைகளின் இரண்டுபுறமும் போஷாக்கான உயரத்தில் கட்டடங்கள் வானத்தை நோக்கிப் போயிருக்க– பிளாட்பாரம் பூராவும் நிற்பதற்கு நேரமில்லாத இறக்கை கட்டிய மனிதர்கள். பல [illegible] கூட்டம் போல் [illegible] வழிய– [illegible] அடைத்துக்கொண்டு சென்[illegible]

[illegible] கார் கண்ணாடி [illegible] பார்த்து விழி[illegible]

"உலகத்திலேயே கூட்டம் அதிகமா பிதுங்கி வழியறது சென்னை பஸ்களில்தான்னு பஸ்ஸில் நெரிசல் நேரத்தில் போறப்போ நினைப்பேன். அந்த எண்ணம் தப்புன்னு இப்போ தெரியுது. இங்கே அதைவிட பத்து மடங்கு அதிகமா கூட்டம் இருக்கும் போல இருக்கே...?"

சுந்தர் 'ஸ்டியரிங்'கை வளைத்துக்கொண்டே புன்னகைத்தான்.

"ஒருத்தனை நரகத்துக்குப் போகச் சொல்றதும் ஒண்ணுதான்– இங்கே டவுன் பஸ்ஸையோ, மின்சார ரெயிலையோ பிடிச்சு ஆபீசுக்குப் போயிட்டு வரச் சொல்றதும் ஒண்ணுதான். சுருக்கமா சொன்னா இந்த நெரிசலான பயணம் தினசரி நரகம்..."

போக்குவரத்து நெரிசலில் நீண்ட நேரம் தத்தளித்த கார், ஆள் நடமாட்டம் குறைவான கிளைச் சாலைகளில் புகுந்து ஓரிரு திருப்பங்களை விழுங்கியது.

சிவாஜி நகர் என்று இந்தியில் பெரிய எழுத்துகளில் பேசிய அலங்கார வளைவுக்குள் நுழைந்து வடக்கு அவென்யூவின் முதல் குறுக்குத் தெருவைத் தொட்டார்கள்.

நாற்பத்தெட்டு என்று எண்களில் செதுக்கி இருந்த காம்பவுண்டின் ஓரமாய் காரை நிறுத்தினான் சுந்தர்.

கதவுகளை விரித்துக்கொண்டு மூன்று பேரும் இறங்கினார்கள்.

காம்பவுண்டு சுவரைத் தடவியபடி போகன்வில்லா பயிராகி இருந்தது.

வாசல் கதவைத் தள்ளினான் சுந்தர்.

கீலில் எண்ணெய் வறண்டிருக்க– பெரிய குரலில் அலறியது அந்த கேட்.

சிமெண்டு பாதையில் நடந்து செல்லும் சுந்தரை படபடக்கும்

இருதயங்களோடு பின் தொடர்ந்தார்கள் லேகாவும், ராமமூர்த்தியும்.

முகப்புக் கதவைத் தொட்டு அழைப்பு மணியை அழுத்த- வயலினுக்கு மூக்கடைப்பு ஏற்பட்டது போன்ற குரலில் எலக்ட்ரானிக் இசைத்தது.

இரண்டு முறை அழைப்பு மணியை அழுத்திய பிறகு உள்ளே வெகு தொலைவில் தொடங்கிய கொலுசுச் சப்தம் கொஞ்சம் கொஞ்சமாய்க் கதவை நோக்கி நெருங்கி வந்தது.

லேகாவும், ராமமூர்த்தியும் சற்றே பயத்தோடு பரஸ்பரம் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டார்கள்.

செண்பகவல்லியின் நகல் போல இருக்கும் அந்தப் பெண்ணைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் இருவருக்குள்ளும் ஆர்ட்டீஷியன் ஊற்றாய்ப் பீய்ச்சி அடித்தது.

கதவுத் தாழ் விலகி கால் பாகம் அளவுக்கு திறந்துகொள்ள- அந்த இடைவெளியில் ஒரு பதினாறு வயது வடக்கத்திய பெண் தெரிந்தாள்.

"கோன்...?"

சுந்தர் சரளமான இந்தியில் கேட்டான்.

"இது ஊர்மிளாவின் வீடுதானே..?"

"ஆமா, நீங்க யாரு...?"

"ஊர்மிளாவைப் பார்க்க வந்திருக்கோம்..."

"ஊர்மிளா மெஹுல் இப்ப வீட்டில் இல்லையே...?"

"வீட்டில் இல்லையா...? உடம்பு சரியில்லைன்னு சொன்னாங்களே?"

"இல்லையே... மெஹுல்ஜி நல்லாதான் இருக்காங்க."

"வீட்டில் வேற யாரெல்லாம் இருக்காங்க...?"

"நான் மட்டும்தான்..."

"நீ ஊர்மிளாவுக்கு என்ன வேணும்...?"

"நான் ராணிபாய். இந்த வீட்டு வேலைக்காரி."

"ஊர்மிளா எங்கே போயிருக்கான்னு தெரியுமா...?"

"தெரியலை. ஆனா, இப்போதான் கிளம்பிப் போனாங்க. அந்த நிமிஷம்கூட ஆகியிருக்காது. அநேகமா மெயின் ரோடு பஸ்



ஸ்டாப்புக்குப் போனீங்கன்னா அங்கே பஸ்சுக்காக காத்திருந்தாலும் இருப்பாங்க..."

"சரி... நாங்க பார்த்துக்கறோம்..."

சுந்தர் திரும்பினான்.

லேகாவும், ராமமூர்த்தியும் அவனைக் குழப்பத்தோடு பார்த்தார்கள்.

"யார் இந்தப் பொண்ணு...? ரெண்டு பேரும் இந்தியில் என்ன பேசிட்டீங்க...?"

சுந்தர் வேகமாய் காரை நோக்கி நடந்துகொண்டே சொன்னான்.

"இந்தப் பொண்ணு, வீட்டு வேலைக்காரி. வீட்டில் ஊர்மிளாவும், இந்தப் பொண்ணும்தான் இருக்காங்க போலிருக்கு. ஊர்மிளா இப்பதான் வீட்டைவிட்டுக் கிளம்பிப் போனாளாம். பஸ் ஸ்டாப்புக்குப் போனா அவளைப் பிடிச்சிடலாம்னு அந்த வேலைக்காரப் பொண்ணு சொன்னா..."

காருக்குள் அமர்ந்துகொண்டு கதவுகளை அறைந்து சாத்தினார்கள்.

சுந்தர் காரை நகர்த்தி, பின் வேகமாய்க் கிளப்பினான்.

ராமமூர்த்தி கேட்டார்.

"ஊர்மிளாவுக்கு உடம்பு சரியில்லை, வீட்டில் ஓய்வு எடுக்கிறாள்னுதானே கம்பெனியில் சொன்னாங்க...?"

"அப்படிச் சொல்லி லீவு வாங்கிட்டு, சொந்த வேலையா வெளியே கிளம்பிப் போயிருப்பாள்னு நினைக்கிறேன்..."

சொல்லிக்கொண்டே ஆக்ஸிலேட்டரை மிதித்தான் சுந்தர்.

நிமிஷத்தில் மெயின் ரோட்டை எட்டிப் பிடித்த கார் மெதுவாய்த் தயங்கிவிட்டு, பஸ் ஸ்டாப்பை சற்றுத் தொலைவில் பார்த்து இடதுபுறம் திரும்பியது.

பஸ் ஸ்டாப்பை கார் நெருங்க...

"மை குட்னஸ்..."

"என்னாச்சு...?"

லேகா கேட்க- சுந்தர் முன்பக்கம் கைகாட்டியபடி சொன்னான்.

"அந்த ஊர்மிளா... அதோ அந்த பைக்கில் ஏறிட்டிருக்கா..."

லேகாவும், ராமமூர்த்தியும் அவன் கைகாட்டிய திசையில் அவசரமாய்ப் பார்வையைப் போட்டார்கள்.

அங்கே ஊர்மிளாவின் முதுகுதான் தெரிந்தது.

ஒரு பைக்கின் பில்லியனில் ஏறி உட்கார்ந்துகொண்டிருந்தாள் அவள்.

இவர்கள் பார்க்கப் பார்க்கவே பைக் சைலன்சரில் புகையைத் துப்ப ஆரம்பித்து, துப்பாக்கியில் இருந்து விடுபட்ட தோட்டாவைப் போல விருட்டென்று சீறிச் செல்ல ஆரம்பித்தது.

லேகா பரபரத்தாள்.

"அந்த பைக்கை 'பாலோ' பண்ண முடியாதா...?"

"ஆள் நடமாட்டம் குறைவான தெருக்களில் போற வரைக்கும் பிரச்சினை இல்லை. டிராபிக் அதிகமுள்ள பகுதிக்குப் போனா... சின்ன சந்து கிடைச்சாலும் 'பைக்' பறந்துடும். ஆனா, காரில் போற நாம நிதானமாத்தான் போக முடியும்."

"எதுக்கும் முயற்சி பண்ணிப் பாருங்களேன்."

"அவ வீடு எதுன்னு தெரிஞ்சிடுச்சு. சாயந்தரம் கூட சாவகாசமா பார்த்துக்கலாம். அப்படியே முடியலைன்னாகூட நாளைக்கு ஆபீஸ்ல சந்திக்கலாம். எங்கே போயிடப் போறா அந்தப் பொண்ணு?"

"சின்ன வயசில் என்னோட அம்மா எப்படி இருந்தாங்களோ... அதே மாதிரி இந்தப் பொண்ணு இருப்பான்னு நீங்க சொன்னது எனக்குள்ளே அளவுக்கு அதிகமா ஆர்வத்தை தூண்டி விட்டிருக்கு. அந்த ஊர்மிளாவை உடனே பார்த்தாகணும் போல இருக்கு. பிளீஸ்... 'பாலோ' பண்ணுங்க."

அவள் சொல்லிக்கொண்டு இருக்கும்போதே ஆக்சிலேட்டரைத் தீவிரமாய் அழுத்தியிருந்தான் சுந்தர்.

"ஐ வில் டிரை மை லெவல் பெஸ்ட்..."

கார் சீறிக்கொண்டு சாலையில் வழுக்கியபடி அந்த பைக்கை விரட்டிச் சென்றது.

பத்து நிமிடத் துரத்தல்.

'பைக்' அந்த நகராட்சி பூங்கா அருகே இயக்கத்தை நிறுத்திக்கொண்டது.



24934477.

சிவப்புப் பூக்களைத் தரையில் கம்பளம் மாதிரிக் கொட்டி இருந்த வாதநாராயணா மரத்துக்கு கீழே 'பைக்'கை 'ஸ்டாண்ட்' போட்டு நிறுத்தினான் அந்த இளைஞன்.

பைக்கில் சாய்ந்து நின்றுகொண்டு அந்த இளைஞனும், ஊர்மிளாவும் தீவிரமாய் பேசிக்கொண்டிருந்தார்கள்.

சுந்தர் தனது காரை சற்றுத் தொலைவிலேயே நிறுத்திக்கொண்டான். 'டிரைவிங்' இருக்கையைவிட்டுக் கீழே இறங்கிக்கொண்டே சொன்னான்.

"கொஞ்சம் தள்ளி நின்னே அவளைப் பாருங்க. அவ அந்த இளைஞனோட ஏதோ சீரியஸா பேசிட்டிருக்கா. இந்த நேரத்தில் நாம அவளை தொந்தரவு பண்ணினா அவ எரிச்சலானாலும் ஆயிடுவா... நமக்கு சரியா பதில் சொல்லமாட்டா."

சுந்தரின் வார்த்தைகளை ஆமோதித்த லேகாவும், ராமமூர்த்தியும் ஊர்மிளாவின் முகத்தை நன்றாகப் பார்க்கிற மாதிரி ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்து மரத்தின் மறைவில் இருந்து அவள் மேல் பார்வையைப் போட்டார்கள்.

செண்பகவல்லியின் சின்ன வயதுத் தோற்றத்தை மில்லி மீட்டர் பிசகாமல் பெற்றிருந்தாள் அந்த ஊர்மிளா.

24648181

## 5

மறுநாள்.

சுந்தரின் அலுவலகம். தனி அறை.

காலை பத்து மணிக்கு தொலைபேசி தனது மவுன விரதத்தைக் கலைத்துவிட்டு வீறிட ஆரம்பித்தது.

ங்...

ங்...

ங்...

ரிசீவரைக் கையில் எடுத்தான் சுந்தர்.

"ஹலோ..."

வரவேற்பு பெண்ணின் குரல் பவ்வியமாகக் கேட்டது.

"ஓன் கோர்ன் ஈஸ் வெயிட்டிங் பார் யூ... இன் த லைன் சார்..."

"பேர் என்ன சேட்டியா...?"

"மிஸ் ஊர்மிளா..."

மனசுக்குள் சின்ன பரபரப்பு உற்பத்தியாகிக்கொள்ள- அவசரக் குரலை உதிர்த்தான்.

"கனெக்ட் பண்ணு..."

"எஸ் ஸார்..."

ஓரிரு விநாடி எலக்ட்ரானிக் சுருதிக்குப் பிறகு தொடர்பு கிடைத்து மறுமுனையில் இருந்து குரல் வெளிப்பட்டது.

"ஹலோ... நான் ஊர்மிளா பேசறேன்..."

"ஐயாம் சுந்தர்..."

"குட்மார்னிங் சார்..."

"குட்மார்னிங்... எங்கிருந்து பேசிட்டிருக்கே...?"

"கீழே என்னோட ஆபீசில் இருந்துதான் சார். இப்போதான் ஆபீசுக்கு வந்தேன். நேத்திக்கு நீங்க எனக்கு போன் பண்ணியிருந்ததா சொன்னாங்க. வீட்டு 'அட்ரஸ்' வாங்கிட்டு வீட்டுக்குக்கூட வந்துட்டுப் போனதா வேலைக்காரப் பெண் சொன்னா..."

"ஆமா வந்திருந்தேன். உனக்கு உடம்புக்கு இப்போ தேவலையா...?"

வேண்டுமென்றே சுந்தர் கேட்ட கேள்விக்கு ஓரிரு விநாடிகள் தயங்கிவிட்டு குற்ற உணர்ச்சி வழியும் குரலில் சொன்னாள்.

"ப... பரவாயில்லை சார். பை த பை... என்ன விஷயமா என்னைப் பார்க்க வந்தீங்கன்னு நான் தெரிஞ்சிக்கலாமா...?"

"போனில் விளக்கமா பேச முடியாது. இப்போ ஒரு மணி நேரம் எனக்காக செலவழிக்க முடியுமா?"

ஐந்து விநாடி தயக்க மவுனத்துக்குப் பின் சொன்னாள்.

"நேத்திக்கு நான் லீவு எடுத்துட்டேன். இப்ப கொஞ்சம் முன்னாலதான் ஆபீசுக்கு வந்தேன். வந்தவுடனே எப்படி 'பர்மிஷன்' கேட்க முடியும்?"

"உன்னோட என்ஜினியர் ஆபீசில் இருக்காரா...?"

"இருக்கார்..."

"அவர்கிட்டே ரிசீவரைக் குடு. நான் உனக்கு 'பர்மிஷன்' வாங்கித்



தாரேன்..."

சற்று நேரத்தில் ரிசீவர் கை மாற- அந்த என்ஜினியரிடம் சுந்தர் பரஸ்பரம் நலம் விசாரித்துவிட்டு விஷயத்துக்கு வந்தான்.

"அந்தப் பொண்ணு ஊர்மிளாகிட்டே ஒரு குடும்ப விஷயம் பேசணும். அதுக்காகவே சென்னையில் இருந்து என் வுட்பி வீட்டைச் சொந்தவங்க வந்திருக்காங்க. அவங்ககிட்டே ஊர்மிளாவைக் கூட்டிட்டுப் போகலாம்னு இருக்கேன். நேத்திக்கு முயற்சி பண்ணினேன்... நேத்து ஊர்மிளா லீவு..."

"அவளுக்கு இப்போ வேலை குறைவாத்தான் இருக்கு. அதனால நீங்க தாராளமா அழைச்சிட்டுப் போகலாம்."

"கீழே பார்க்கிங்ல என்னோட கார்ல நான் 'வெயிட்' பண்றேன். ஊர்மிளாவை வரச் சொல்லுங்க."

"ஓ. கே."

சுந்தர் ரிசீவரைச் சாத்திவிட்டு, இருக்கையைவிட்டு எழுந்தான்.

கீழ்த் தளத்துக்கு வந்து தன்னுடைய காரைத் தொட்டபோது, ஊர்மிளா ஆர்வத்தைத் தத்தெடுத்த முகத்தோடு ஏற்கெனவே அங்கே காத்திருந்தாள்.

"போகலாமா...?"

"எங்கே சார்?"

"என்னோட கம்பெனி கெஸ்ட் ஹவுசில் என் வருங்கால மாமனாரும், அவரோட மகளும்... ஐ மீன்... என் வுட்பி மனைவியும் உனக்காக காத்திட்டிருக்காங்க..."

"அவங்க எதுக்காக எனக்காகக் காத்திருக்காங்க...?"

"உன்கிட்டே ஏதோ பேச விரும்பறாங்க. அங்கே போய் விபரமா பேசிக்கலாம்."

காரின் முன் இருக்கையில் அவனுக்குப் பக்கவாட்டில் உட்கார்ந்தாள் ஊர்மிளா.

அந்த காம்ப்ளக்சைவிட்டு வெளியேறி சாலையில் கலந்தது கார்.

கட்டடங்கள் பின்னால் நழுவிக்கொண்டிருக்க- காற்றில் சிலும்பும் கேசத்தை ஒதுக்கி விட்டுக்கொண்டே ஊர்மிளா சொன்னாள்.

"என்னோட என்ஜினியர் உட்பட எல்லாருமே மதிக்கற அளவுக்கு

பெரிய தொழிலதிபர் நீங்க. எனக்கு உங்ககிட்டே இருந்து போன் வந்ததும் ஆச்சரியமா இருந்தது."

"எதுக்காக ஆச்சரியம்?"

"வேலை விஷயமா கூப்பிட்டு இருப்பீங்களோன்னு நினைச்சேன். ஆனா, போன்ல பேசின 'சூபர்வைசர்' நீங்க பர்சனலா பேசணும்னு சொன்னதா சொன்னார். அந்த நிமிஷத்தில் இருந்து இந்த நிமிஷம் வரைக்கும் குழப்பமா இருக்கேன்..."

"குழப்பம் மட்டும்தானே...! திடீர்னு இவன் எங்கேயோ கெஸ்ட் ஹவுசுக்குக் கூப்பிடுறானேன்னு பயமா நினைக்கலியே...?"

சிரித்துக்கொண்டே சுந்தர் கேட்டதும் அவள் புன்னகைத்தாள்.

"அந்த காம்ப்ளக்சில் உங்க மேல எல்லாருக்குமே மரியாதை இருக்கு. தவிர, தப்பான எண்ணம் இருந்தா இப்படி வெளிப்படையா ஆபீசுக்கு போன் பண்ணி பேசியிருக்கமாட்டீங்க. அதனால ஏதோ விஷயம் இருக்குன்னு புரிஞ்சிகிட்டேன்..."

அவள் சொல்லிக்கொண்டிருந்த விநாடி கார் கெஸ்ட் ஹவுசைத் தொட்டிருந்தது.

முன் ஹாலில் ராமமூர்த்தியும், லேகாவும் உட்கார்ந்திருப்பது தெரிந்தது. காரைவிட்டு இறங்கினான் சுந்தர்.

தயக்கமாய் நின்ற ஊர்மிளாவை அழைத்தான்.

"உள்ளே வா ஊர்மிளா..."

ராமமூர்த்தியும், லேகாவும் இன்னமும் ஆச்சரியம் விலகாத முகங்களோடு வரவேற்க மறந்தவர்களாய் நின்றிருந்தார்கள்.

ஊர்மிளாவுக்கு அவர்களை அறிமுகம் செய்து வைத்தான் சுந்தர். கைகளை கூப்பி வணக்கம் சொன்னாள் ஊர்மிளா.

ராமமூர்த்தி மெல்ல லேகாவின் காதில் கிசுகிசுத்தார்.

"முதல் முதலா நான் உன் அம்மாவைப் பொண்ணு பார்க்க போனப்ப அவ எப்படி இருந்தாளோ... அதே மாதிரி இருக்கா இந்த ஊர்மிளா..."

லேகா தலையாட்டினாள்.

"நான்கூட அம்மாவின் பழைய படத்தின் சாயலில்தான் இருப்பாள்னு நினைச்சேன். அச்சு அசலா 'ஜெராக்ஸ்' எடுத்த மாதிரி இருப்பாள்னு நான் நினைக்கவே இல்லை..."



சுந்தர், கிசுகிசுத்துக்கொண்டு இருந்த அவர்களிடையே குறுக்கிட்டான்.

"என்ன... ஊர்மிளாவை வரச்சொல்லிட்டு அப்பாவும், மகளும் உங்களுக்குள்ளேயே பேசிட்டு இருக்கீங்க...?"

இருவரும் கலைந்து போய்த் திரும்பினார்கள்.

ஊர்மிளா, சுந்தரிடம் கேட்டாள்.

"இவங்கதான் என்கிட்டே பேசணும்னு சொன்னாங்களா...?"

"ஆமா..."

"என்கிட்டே இவங்க என்ன பேசணும்...?"

"உன்னோட குடும்பப் பின்னணி பத்தி தெரிஞ்சிக்க விரும்பறாங்க..."

"எதுக்கு...?"

"அதைப் பிறகு சொல்றேன். முதலில் உன்கிட்டே இருந்து இவங்களுக்குத் தேவை சில விபரங்கள்..."

"சுந்தர் சார்! உங்க மேல உள்ள மரியாதை காரணமா நீங்க கூப்பிட்டவுடனே மறுபேச்சு பேசாம நான் வந்திருக்கேன். இங்கே வந்த பிறகுகூட நீங்க விஷயத்தை முழுசா சொல்லாம விபரங்கள் மட்டும் வேணும்னா நான் எப்படிச் சொல்ல முடியும்...?"

சுந்தர் அவளைப் பார்த்து மெலிதாக புன்னகை பூத்தான்.

"இவங்க ஒண்ணும் பெரிய சிதம்பர ரகசியத்தை உன்கிட்டே கேக்கப் போறதில்லை. ரொம்ப அந்தரங்கமாகவும் கேக்க மாட்டாங்க. சாதாரண கேள்விகள்தான்..."


ராமமூர்த்தி அவள் கண்களை ஊடுருவலாய்ப் பார்த்துக்கொண்டே கேட்டார்.

"சிவாஜி நகர்ல நீ மட்டும்தான் வீடு எடுத்துத் தங்கியிருக்கே போலிருக்கே...?"

"ஆமா! நானும், வேலைக்காரப் பொண்ணும் மட்டும்தான் அங்கே இருக்கோம்..."

"அப்படின்னா உங்க ஃபாமிலி எங்கிருக்கு? அம்மா, அப்பாவெல்லாம் எங்கே இருக்காங்க...?"

"சாந்திப்பூர்னு ஒரு கிராமத்தில் இருக்காங்க. இங்கிருந்து





கிட்டத்தட்ட நூறு கிலோ மீட்டர் தூரம் பயணம் பண்ணனும்..."

"அவங்களை அங்கே விட்டுட்டு நீ இங்கே தனியா இருக்கியே... கஷ்டமா இல்லே...?

"அவங்களுக்கு கிராமத்தைவிட்டு வெளியே வந்து இருக்க மனசு இல்லை. எனக்கு இது பழக்கமாயிடுச்சு. சின்ன வயசிலிருந்தே ஹாஸ்டலில் தங்கித்தான் படிச்சேன். வேலை கிடைச்ச பிறகு வீடு எடுத்துத் தங்கிட்டேன்..."

"உனக்கு வேற சகோதர-சகோதரிங்க இருக்காங்களா...?"

"நான் ஒரே பொண்ணுதான்..."

"உங்க சொந்தக்காரங்க எல்லாம் எங்கே இருக்காங்க...?"

"பெரும்பாலானவங்க சாந்திப்பூர், அதன் சுத்து வட்டார கிராமங்களில் இருக்காங்க..."

"சென்னையில் உனக்கு சொந்தக்காரங்க இருக்காங்களா...?"

"ஊஹூம்... இல்லை."

"இவ்வளவு சரளமா தமிழ் பேசறியே...! தமிழ்நாட்டோட எந்தத் தொடர்பும் இல்லாம இந்த தமிழ் நடை சாத்தியமே இல்லை..."

"என்னோட இந்தத் தமிழுக்கு காரணம் 'ஹாஸ்டல்' தோழிகள்தான். என்னோட நெருக்கமா பழகின அவங்க மூணு பேருக்குமே பூர்வீகம் தமிழ்நாடு. அவங்களுக்கு கட்டுப் போட்டாலும் இந்தி வராது. வேற வழியில்லாம நான் தமிழ் பேசக் கத்துக்கிட்டேன். பத்து வருஷம் ஒண்ணா இருந்ததில் அவங்க தெரிஞ்சிகிட்ட இந்தியைவிட நான் தெரிஞ்சுகிட்ட தமிழ்தான் அதிகம்..."

"இல்லை... உனக்கு சென்னையோட ஏதோ ஒரு தொடர்பு இருக்குன்னு நாங்க நினைக்கறோம். ஒருவேளை உனக்குத்


ராணி முத்து

சந்தா விவரம்

| | |
|---|---|
| இரண்டு ஆண்டு | ரூ. 275 |
| ஒரு ஆண்டு | ரூ. 150 |
| ஆறு மாதம் | ரூ. 80 |

வெளிநாடுகள்

| | |
|---|---|
| ஒரு ஆண்டு | ரூ. 1225 |
| ஆறு மாதம் | ரூ. 615 |

பணம் அனுப்பவேண்டிய முகவரி:

மேலாளர்,
'ராணி முத்து',
சென்னை-600 007.

தெரியாம இருக்கலாம். உன்னோட அம்மா, அப்பாவுக்குத் தெரிஞ்சிருக்கும்."

உதடுகளில் மெல்லிய புன்னகையை உட்கார வைத்தாள் ஊர்மிளா.

"என்னோட அம்மாவும், அப்பாவும் விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவங்க. இந்த மும்பை நகரையே வாழ்நாளில் ரெண்டு தடவைக்கு மேல பார்த்து இருக்கமாட்டாங்க. கிராமத்தில் இருந்த ஒரு வாத்தியாரின் வழிகாட்டலில்தான் நான் பட்டணத்தில் படிச்சு பாலிடெக்னிக் வரை தேறினேன். அந்த வாத்தியார் மட்டும் இல்லைன்னா நானும் இந்நேரம் முழங்கால் அளவு சேத்துக்குள்ளே நின்று நாத்து நட்டுகிட்டிருப்பேன்..."

"நாங்க உங்க அம்மா, அப்பாவை நேரில் பார்த்துப் பேசணும்னு விரும்பறோம். உன்னால எங்களோடு வர முடியலைன்னாலும் பரவாயில்லை... உங்க கிராமத்துக்கு எப்படிப் போகணும்? அங்கே போய் என்னன்னு கேக்கணும்? எல்லா விபரங்களும் சொன்னீன்னா சுந்தரை அழைச்சிட்டு நாங்களே போய்ப் பார்த்துட்டு வந்துடுவோம்..."

ராமமூர்த்தி சொன்னவுடன் ஏனோ அவள் சட்டென்று முகம் மாறிப் போனாள்.

"என்னோட அம்மா- அப்பாவை நீங்க நேரில் பார்க்கணுமா...?"

"ஆமா..."

லேசான தயக்கத்துக்குப் பின் சொன்னாள்.

"முன்பின் அறிமுகம் இல்லாதவங்ககிட்டே அவங்க சரியா பேச மாட்டாங்க. நான் கூட வராம நீங்க போனீங்கன்னா... அவ்வளவு தூரம் போயும் பிரயோஜனம் இல்லாமப் போயிடும்..."

"அப்படின்னா நீ லீவு போட்டுட்டு வர முடியுமா...?"

"நேத்திக்குத்தான் லீவு எடுத்தேன். இன்னிக்கு 'பர்மிஷன்'. என்ஜினீயர் ஏதாவது சொல்லுவார்..."

சுந்தர் குறுக்கிட்டுச் சொன்னான்.

"நான் அவர்கிட்டே பேசிக்கறேன் ஊர்மிளா. என்ஜினீயர் ஏதாவது சொல்லுவாரோன்னு நீ யோசிக்க வேண்டாம்..."

"வேண்டாம் சார்... நீங்க 'ரிக்வெஸ்ட்' பண்ணினா, உங்க



முகத்துக்காக அவர் சரின்னு சொல்லுவார். கடைசியில் எல்லா வேலையையும் இழுத்துப் போட்டு நான்தான் செய்யணும். எனக்குத்தான் வேலைப் பளு அதிகமாகும்..."

"இவங்க இன்னும் ரெண்டு நாளோ, மூணு நாளோதான் இங்கே இருப்பாங்க. அதுக்குள்ளே உங்க அம்மா- அப்பாவை சந்திக்க முடிஞ்சா நல்லது இடையில ஒரு ஞாயிறு வருது. ஞாயித்துக்கிழமை உனக்கு ஆபீஸ் லீவுதானே. அன்னிக்கு நாலு பேருமா காரில் போயிட்டு வரலாமா...?"

ஊர்மிளாவிடம் இருந்து மறுப்பு வந்தது.

"ஸாரி சார்... அன்னிக்கு எனக்கு வேறே நிகழ்ச்சி இருக்கு. ஏதோ ஒரு மணி நேரம் என்கூட பேசணும்னு சொன்னீங்க... உங்க கூட வந்தேன். பேசிட்டீங்க... இதுக்கு மேல எனக்கு தொந்தரவு தராதீங்க. என்னோட அம்மா- அப்பாவைப் பார்க்கணும்னு நினைச்சீங்கன்னா... அடுத்த மாசம் பதினெட்டாம் தேதி வொர்ஜிநகர் வீட்டுக்கு வாங்க. அன்னிக்கு ஊரிலிருந்து அவங்க ரெண்டு பேரும் வருவாங்க..."

இதற்கு மேல் நான் எதுவும் பேசத் தயாராய் இல்லை என்பது போல கையைக் கூப்பியபடி எழுந்து நின்றாள்.

சுந்தர் அவளை நிமிர்ந்து பார்த்தான்.

"ஊர்மிளா...!"

"எனக்கு ஆபீசுக்கு நேரமாச்சு... நான் போகணும்."

"ஒரு நிமிஷம் இரு... நான் உன்னை ஆபீசில் 'டிராப்' பண்ணிடறேன்."

"வேண்டாம் சார். நான் டாக்சியோ, ஆட்டோவோ பிடிச்சி போய்க்குவேன். வர்றப்போ எனக்கு இடம் தெரியாது. அதனால உங்ககூட வந்தேன். இப்போ ஆபீசுக்குத்தானே போறேன்... நோ பிராப்ளம்..."

சொல்லிவிட்டு அவனுடைய பதிலைக்கூட எதிர்பார்க்காமல் விடுவிடுவென்று ஹாலைக் கடந்து போர்டிகோ படிகளில் இறங்கி வேக வேகமாய்ச் செல்ல ஆரம்பித்தாள் ஊர்மிளா.

அவளைத் திகைப்புடன் பார்த்தபடி மூன்று பேரும் உட்கார்ந்து இருந்தார்கள்.

சுந்தர் முதலில் பேசினான்.

"அவனோட அம்மா, அப்பாவை நேரில் பார்க்கணும்னு நீங்க சொன்ன விநாடியில் இருந்தே ஊர்மிளா 'நெர்வஸ்' ஆயிட்டா... அவசர அவசரமா பேசி சமாளிச்சிட்டு கார் கூட வேண்டாம்னு கிளம்பிப் போயிட்டா பாருங்க..."

"என்ன காரணம்...?"

"அவ ஏதோ பொய் சொல்லி இருக்கா... காரில் போறப்ப இன்னும் நான் குடைஞ்சி கேப்பேங்கற பயத்தில்தான் டாக்சி பிடிச்சிப் போயிக்கறேன்னு சொல்லிட்டு வேகமா போயிட்டா..."

"நம்மகிட்டே ஏன் அவ பொய் சொல்லணும்...?"

"அம்மா, அப்பா விஷயத்தில்தான் அவ ஏதோ பொய் சொல்லி இருக்கான்னு எனக்கு தோணுது. அதனாலதான் அவங்களைப் பார்க்கணும்னு சொன்னதும் உடனே 'நெர்வஸ்' ஆயிட்டா..."

"அப்படின்னா இனிமே அவகிட்டே நேரடியா கேட்டு உருப்படியாக எந்தத் தகவலும் பெற முடியாதுன்னு தெரிஞ்சிடுச்சு..."

"நீங்க சொல்றது சரி..."

"அவளைப் பத்தி இனி எந்த வழியில் விசாரிக்கறது...?"

லேகா புருவங்கள் முடிச்சிடக் கேள்வி எழுப்ப– சுந்தர் கப்போர்டில் இருந்த டைரக்டரியை எடுத்தான். அதன் பக்கங்களைப் புரட்டி– ஒரு எண்ணைத் தேடிப் பிடித்து டெலிபோனின் 'பெதர் டச்' பொத்தான்களை அழுத்தினான்.

லேகாவே கேட்டாள்.

"யாருக்கு போன் பண்ணுறீங்க...?"

"ஹவுஸ் புரோக்கர்ஸ் அசோசியேஷன்..."

"அங்கே போன் பண்ணி...?"

"எனக்கு இப்போதான் ஞாபகம் வந்தது. சிவாஜிநகர் வீட்டு தரகர்கள் சங்க செயலாளரோடு நான் ஏற்கெனவே பேசியிருக்கேன். அந்த பகுதியில் எங்க கம்பெனி ஊழியர்கள் தங்கறதுக்காக நாலு மாசம் முன்னால ஒரு 'ஹவுசிங் அபார்ட்மெண்ட்' தேடிட்டிருந்தோம். அப்போ அவர் அடிக்கடி என்னோட ஆபீசுக்கே வந்துட்டுப் போவார்..."

"அவருக்கு போன் பண்ணி என்ன கேக்கப் போறீங்க...?"

"பொதுவா ஹவுஸ் புரோக்கர்ஸ் அந்த பகுதியில் இருக்கிற



ஒவ்வொரு வீட்டைப் பத்தியும் விபரமா தெரிஞ்சு வெச்சிருப்பாங்க. ஊர்மிளா அந்த சிவாஜிநகர் வீட்டை புரோக்கர் மூலமாகத்தான் வாடகைக்குப் பிடிச்சிருக்க முடியும்..."

சுந்தர் சொல்லிக்கொண்டு இருந்த விநாடி சட்டென்று மறுமுனை ரிசீவர் எடுக்கப்பட– அவன் கவனம் ரிசீவருக்கு மாறியது.

"ஹலோ... உங்க சங்க செயலாளர் இருக்காரா?"

"........"

"நான் சுந்தர் பேசறேன்னு சொல்லுங்க..."

"........"

"சரி... லைன்ல காத்திருக்கேன்..."

சில விநாடிகளுக்குப் பின் செயலாளரின் குரல் ரிசீவரில் வர – சுந்தர் தொடர்ந்தான்.

"உங்க பகுதியில் இருக்கும் ஒரு ஆளைப் பத்தின விபரங்கள் தெரியணும்..."

"........"

"ஊர்மிளான்னு ஒரு பொண்ணு. சிவில் எஞ்ஜினியரிங் கட்டுமான கம்பெனியில வேலையில இருக்கு. வேலைக்காரியும், அந்தப் பொண்ணுமா முதல் குறுக்குத் தெருவுல குடியிருக்காங்க..."

"........"

"தெரியுமா...! நீங்கதான் அந்தப் பொண்ணுக்கு வீடு ஏற்பாடு பண்ணிக் குடுத்தீங்களா...?"

"........"

"ஆமா... அவனோட அப்பா, அம்மா எங்கே இருக்காங்க...என்ன பண்ணுறாங்க...? இந்த விபரங்கள் வேணும்..."

"........"

மறுமுனையில் இருந்து வந்த பதிலால் சட்டென்று முகம் சுருத்துப் போனான் சுந்தர்.

"இஸிட்...? எந்த இடம்னு உங்களுக்குத் தெரியுமா...?"

"........"

"ஓ.கே.ங்க. அதை நான் விசாரிச்சிக்கறேன். தாங்க்ஸ் பார் யுவர் இன்பர்மேஷன்..."

ரிசீவரைச் சாய்த்தவனின் முகத்திலிருந்த பரபரப்பு ரேகைகளைக்

கண்ணில் வாங்கிய ராமமூர்த்தியும், லேகாவும் கேள்விக்குறியோடு அவனைப் பார்த்தார்கள்.

"ஏன் ஒரு மாதிரி ஆயிட்டீங்க...! அந்த செயலாளர் என்ன சொன்னார்...?"

சுந்தர் நிதானமான வார்த்தைகளை விடுவித்தான்.

"ஊர்மிளாவுக்கு அப்பா, அம்மான்னு யாருமே கிடையாதாம். அவள் வளர்ந்ததெல்லாம் அநாதை ஆசிரமத்திலாம்..."

ராமமூர்த்திக்கு இதயம் வலித்தது.

## 6

'இண்டர்காம்' கிணுகிணுத்தது.

ரிசீவரை எடுத்து காதில் ஒட்ட வைத்தான் சுந்தர்.

"ஹலோ..."

"நான் பி.ஏ. பேசறேன் சார்..."

"சொல்லுங்க..."

"மெட்ரோ பில்டர்ஸ் என்ஜினீயர் உங்களைப் பார்க்க வந்திருக்கார்..."

"உள்ளே அனுப்பி வையுங்க..."

ரிசீவரை அதனிடத்தில் வைத்த பல விநாடிகளுக்குள் என்ஜினீயர் யாதவ்குமார் பீப்பாய் உடம்போடு உள்ளே வந்தார்.

சுந்தர் வரவேற்றான்.

"வாங்க மிஸ்டர் யாதவ்குமார்... உக்காருங்க..."

அவர் எதிர் இருக்கையை எடுத்துக்கொண்டார்.

"ஒரே காம்ப்ளக்சில் பல வருஷமா இருக்கோம். ஆனா, நாம நேரில் பார்த்துக்கறது ரொம்ப அபூர்வமா இருக்கு..."

சுந்தர் புன்னகைத்தான்.

"காரணம், நம்ம ரெண்டு பேரோட தொழிலும் ஒன்றுக்கொன்று கொஞ்சம் கூட தொடர்பில்லாததா இருப்பதுதான்..."– சொன்ன சுந்தர் தொடர்ந்து கேட்டான்.

"என்ன சாப்பிடறீங்க... காபி, டீ...?"

"நோ பார்மாலிட்டீஸ் ப்ளீஸ்... இப்போதான் நான்





"அவர் 'மெகா சீரியல்' டைரக்டர்னு எப்படி கண்டுபிடிச்சீங்க?"

"கதையையே தயாரிப்பாளர்கிட்டே ஒரு ஆண்டாக சொல்லிகிட்டுஇருக்காருன்னா பாருங்களேன்."

– பிருந்தா ரமணி, மதுரை.

"இந்த டாக்டர் ஓட்டப்பந்தய வீரராம்!"

"அதுக்காக ஓடிவந்து ஊசி குத்தறது கொஞ்சங்கூட நல்லாயில்லே..."

– விஜயலெட்சுமி, அய்யம்பேட்டை.





"மன்னா! நீங்கள் சொன்னபடி 'பாடை' தயாராகிவிட்டது!"

"அடப்பாவி... 'படை' தயாராகட்டும் என்றுதானே சொன்னேன்?."

– மு. தமிழ்ச்செல்வன், ஆப்பக்கூடல்.



## பெண்மணி சூட்டிய பெயர்

அமெரிக்காவைச் சேர்ந்த 'பே' என்ற பெண்தான் இயேசுபிரான் பிறந்த நாளுக்கு 'கிறிஸ்துமஸ்' என்று பெயர் சூட்டினார்.

- ராதிகா அழகப்பன், விக்கிரமசிங்கபுரம்.

## வித்தியாசமான கொண்டாட்டம்!

இங்கிலாந்து நாட்டின் மக்கள் சபையில் உறுப்பினராக இருந்த 6- வது கோமகன் டிக்பை, கிறிஸ்துமஸ் பண்டிகையை வித்தியாசமாகக் கொண்டாடினார்.

இவர், கிறிஸ்துமஸ் அன்று, கடன் வழக்கில் சிக்கி சிறையில் அடைக்கப்பட்டவர்களுக்காக சொந்தப் பணத்தைக் கொடுத்து கடனை அடைத்து, அவர்களுக்கு விடுதலை வாங்கித் தருவார்.

- முனைவர் ஜகான், மதுரை.

## இரவல் இதயம்

★ உலகில் முதன் முதலாக மனிதனுக்கு இரவல் இதயத்தைப் பொருத்திய தென் ஆப்பிரிக்க டாக்டர் பர்னாட்.

★ இந்தியாவில் கட்டாக் என்ற இடத்தில் புறா கடிதப் போக்குவரத்து நிலையம் நிறுவப்பட்டது.

★ சிரியா நாட்டில் வார விடுமுறை புதன்கிழமை.

★ இந்தியாவில் முதன் முதலாக கொல்கத்தா நகரில் தபால் தந்தி அலுவலகம் தொடங்கப்பட்டது.

★ உலக புகழ்பெற்ற முதல் வானிலை ஆய்வுக்கூடம் இங்கிலாந்து நாட்டில் இருக்கிறது.

★ தங்கத்தின் மதிப்பு லண்டனில் நிர்ணயிக்கப்படுகிறது.

★ பூனைகளுக்கு கோவில் உள்ள நாடு எகிப்து.

- பா.வரதன், கலவை.



குடிச்சேன்...?"

"நான் கேட்ட விபரம் கிடைச்சதா மிஸ்டர் யாதவ்குமார்...?"

தான் கொண்டு வந்திருந்த கோப்பை மேஜை மேல் வைத்தபடியே சொன்னார் அவர்.

"என் ஆபீஸ்ல வேலை பார்க்கிறவங்க குறைவுதானே... அதனால ஒவ்வொருவருக்கும் தனித்தனியா 'பைல்' வச்சிருக்கிறேன்... இது ஊர்மிளாவின் பைல்..."

"இந்த பைலில் ஊர்மிளா வளர்ந்த இல்லம் பத்தின தகவல் இருக்கா...?"

"அவ என் கம்பெனில சேர்ந்த புதுசில் குடுத்த 'பயோடேட்டா' முதற்கொண்டு போன மாசம் வாங்கின சம்பள உயர்வு விபரம் வரை எல்லாமே இருக்கு. நீங்க எதுக்காக அந்தப் பொண்ணோட பின்னணி மேல இவ்வளவு ஆர்வம் காட்டறீங்க சுந்தர்...?"

"எ... எனக்காக இல்லை. வேற ஒருத்தருக்காக நான் இந்த விபரங்களை சேகரிச்சுக்கிட்டு இருக்கேன்..."

"ஏதாவது திருமண விவகாரமா...?"

யாதவ்குமார் கேட்க- தலையசைத்து வைத்தான் சுந்தர்.

"அ... ஆமா. அவகிட்டே நேரடியா பேசினப்போ சாந்திப்பூர் கிராமத்தில் அம்மா, அப்பா இருக்காங்கன்னு சொன்னா. அவ பொய் சொல்றான்னு தோணிச்சு. அதனால வேற வழியில் விசாரிச்சோம்..."

"தான் ஒரு அநாதைன்னு சொல்லிக்க சங்கடப்பட்டு உங்ககிட்டே அவ பொய் சொல்லி இருக்கலாம்..."

"மே பீ..."

"என்னோட தனிப்பட்ட யோசனை ஒண்ணு சொல்லலாமா...?"

யாதவ்குமார் கேட்க- நிமிர்ந்தான் சுந்தர்.

"சொல்லுங்க..."

"திருமண விவகாரமா அந்தப் பொண்ணு ஊர்மிளாவைப் பார்க்க வேண்டாம்னு நினைக்கிறேன்..."

"ஏன் அப்படிச் சொல்றீங்க...?"

"அவ ஏற்கெனவே ஒருத்தரை காதலிச்சிட்டிருக்கா... அவனைத்தான் கல்யாணம் பண்ணிக்கப் போறா."

"யார் அவன்...?"

"அவன் யாருன்னு தெரியலை. ஆனா, அடிக்கடி ஆபீசுக்கே வந்து அவளை 'பிக் அப்' பண்ணிட்டு போவான்..."

"தாங்க்யூ மிஸ்டர் யாதவ்குமார். இந்த பைலை நான் அப்புறமா கொடுத்து அனுப்பினா போதுமா...?"

"அவசரமில்லை. மெதுவா கொடுத்துவிடுங்க..."

யாதவ்குமார் விடைபெற்றுச் சென்ற பின், அந்த பைலைப் புரட்டினான் சுந்தர்.

பைலின் கடைசியில் இருந்த 'பயோடேட்டா' தாள்களைப் பார்வைக்குக் கொண்டுவந்தான்.

அவள் கொடுத்திருந்த முகவரி மேல் சுந்தரின் கண்கள் படர்ந்தன.

ஊர்மிளா,
கேர் ஆப் கஸ்தூரிபா அநாதை இல்லம்,
அந்தேரி ஈஸ்ட்,
மும்பை.

## 7

அந்தப் பெரிய கிராதி கேட் அருகே காரை நிறுத்தி 'ஹாரன்' வளையத்தை அழுத்தினான் சுந்தர்.

அவனுக்குப் பக்கவாட்டில் லேகாவும், பின்இருக்கையில் ராமமூர்த்தியும் இருந்தார்கள்.

காரை பெயர்ந்த காம்பவுண்டு சுவருக்கு மேல் ஒரு சாயம் போன போர்டு தலையை நீட்டிக்கொண்டிருந்தது. அந்த போர்டில் கலங்கலாய் எழுத்துகள் இந்தியில் பேசின.

கஸ்தூரிபா அநாதை இல்லம்.

கதவின் திறப்பில் எட்டிப் பார்த்த கூர்க்கா, காரைப் பார்வையில் வாங்கி கிராதி கேட்டை அகலமாய் விரித்து வைத்தான்.

ஒரு பெரிய மைதானம் பூந்தோட்டமாய் மாற்றப்பட்டிருக்க, பூச்செடிகளின் நடுநடுவே துண்டு துண்டாகக் கட்டடங்கள்.

அலுவலகம்.

தையல் பிரிவு.



தச்சுப் பிரிவு.

கைவினை.

வார்ப்படம்.

அம்புக்குறிகள் அந்தந்தப் பிரிவைக் காட்டின.

இளம்பெண்கள் சிலர் தோட்ட வேலையில் ஈடுபட்டிருந்தார்கள்.

சுந்தர் காரை அடர்த்தியான மரத்துக்குக் கீழே நிறுத்திவிட்டு, கதவுகளை விரித்தான்.

மூன்று பேரும் கீழே இறங்கினார்கள்.

அலுவலகம் இருந்த பகுதியை நோக்கி நடையைப் போட்டார்கள். அலுவலகத்தை தொட்டு- கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே செல்ல- குஷன் சோபாக்களோடு ஒரு குட்டி வரவேற்பறை தெரிந்தது.

இவர்கள் கதவைத் தள்ளுகிறபோது- ஒரு நடுத்தர வயதுப் பெண்மணி வேகமாய் எங்கிருந்தோ வந்து சேர்ந்தாள். இந்தியில் கேட்டாள்.

"யாரு வேணும்...?"

"இந்த இல்லத்தை நிர்வாகம் பண்ணிட்டிருக்கற மேனேஜரை நாங்க பார்க்கணும்..."

"என்ன விஷயமா? ஏதாவது 'டொனேஷன்' தரப் போறீங்களா...?"

"நாங்க ஒரு விபரத்தைத் தேடி இங்கே வந்திருக்கோம். அந்த விபரம் எங்களுக்குக் கிடைச்சதுன்னா கண்டிப்பா நான் இந்த இல்லத்துக்கு நிறைய 'டொனேட்' பண்ணுவேன்."

சொல்லிக்கொண்டே தன்னுடைய 'விசிட்டிங் கார்டை' அந்தப் பெண்மணியிடம் நீட்டினான் சுந்தர்.

கார்டில் இருந்த எழுத்துகளை மனதில் வாங்கியவள்- விழிகளை விரித்துக்கொண்டே சொன்னாள்.

"நான் ஏற்கெனவே இந்த கம்பெனி பத்தி கேள்விப்பட்டிருக்கேன்- அதன் எம்.டி.யா நீங்க...?"

சுந்தர் தலையசைக்க- அவள் தொடர்ந்து சொன்னாள்.

"உங்க கம்பெனி சார்பா வருஷா வருஷம் ஒரு தொகை 'டொனேஷனா' இந்த இல்லத்துக்கு வந்துட்டுதான் இருக்கு-"

சுந்தர் சொன்னான்.

"கம்பெனி சார்பா வருஷா வருஷம் பல சேவை நிறுவனங்களுக்கு 'டொனேஷன்' தந்துட்டுதான் இருக்கோம். நான் தேடி வந்திருக்கிற விபரங்கள் எனக்கு கிடைச்சா பர்சனலா இந்த இல்லத்துக்கு நிறைய செய்வேன்னு சொல்ல வந்தேன்..."

"உங்களுக்கு என்ன விபரம் வேணும்? உள்ளே வாங்க... உக்காந்து பேசலாம்..."

'ப' வடிவ சோபாவில் மூன்று பேரும் புதைந்த பின்- அந்தப் பொண்ணும் ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டு எதிரே அமர்ந்தாள்.

ராமமூர்த்தி கேட்டார்.

"நீங்கதான் இந்த அநாதை இல்லத்தை நிர்வாகம் பண்ணுறீங்களா?"

"இல்லை. இந்த இல்லத்தை 'மேனேஜ்' பண்ணுறது மேடம் வசுந்தராதேவி..."

"அவங்களை நாங்க பார்க்கணுமே...?"

"இன்னும் மூணு மாசத்துக்கு அவங்களை நீங்க பார்க்க முடியாது..."

"ஏன்...?"

"இல்ல வளர்ச்சிக்காக அகில உலக சுற்றுப்பயணம் மேற்கொண்டு இருக்காங்க. சரியா மூணு மாசம் கழிச்சித்தான் அவங்க திரும்பி வருவாங்க. அவங்க வர்றவரைக்கும் நான்தான் இங்கே பொறுப்பு..."

"உங்க பேரு...?"

"என் பேர் வாணி. உங்களுக்கு என்ன விபரம் வேணுமோ... அதை நீங்க என்கிட்டேயே கேக்கலாம்..."

லேகா மெதுவாய் ஆரம்பித்தாள்.

"இங்கே... ஊர்மிளான்னு ஒரு பொண்ணு இருந்தது தெரியுமா...?"

நிமிர்ந்தாள் அந்த வாணி.

"ஊர்மிளாவா...? நல்லாத் தெரியுமே...!"

"அவளைப் பத்தின சில விபரங்கள் தெரிஞ்சிக்கறதுக்காகத்தான்



நாங்க இங்கே வந்திருக்கோம்..."

"அவளைப் பத்தி உங்களுக்கு என்ன விபரம் வேணும்? அவ வளர்ந்தது, படிச்சது எல்லாமே இந்த அநாதை இல்லத்தின் ஆதரவினால்தான். பாலிடெக்னிக் வரை படிச்சா... சம்பாதிக்கக் கூடிய நிலைமை வந்ததும் இல்லத்தைவிட்டுப் போயிட்டா. ரொம்பவும் புத்திசாலிப் பொண்ணு. நல்ல பெண்: கடினமா உழைக்கக் கூடியவ.

மேடம் வசுந்தராதேவிக்கு ஊர்மிளாவைப் பிடிக்கும். தனக்குப் பின்னாடி இந்த இல்லத்தின் நிர்வாகப் பொறுப்புகளை அவ எடுத்துக்கணும்ங்கற ஆசை கூட மேடமுக்கு இருந்தது. ஆனா, அவ படிச்சிருக்கறது சிவில் என்ஜினீயரிங். அது சம்பந்தமான ஒரு வேலையை செஞ்சால்தான் மனசுக்கு நிறைவா இருக்கும்னு சொல்லிட்டு, இந்த இல்லத்தைவிட்டு வெளியேறிட்டா..." மளமளவென்று சொல்லிக்கொண்டே போனாள் வாணி. இடையே குரலை நுழைத்துக் குறுக்கிட்டான் சுந்தர்.

"அவ இப்போ எப்படி இருக்காள்னு எங்களுக்குத் தெரியும். எங்களுக்கு வேண்டியதெல்லாம் ஊர்மிளாவின் பூர்வீகம் பத்தின தகவல்கள்.

அ... அவளோட அம்மா யாரு? அவ இந்த அநாதை ஆசிரமத்துக்கு வந்ததின் பின்னணி என்ன? இதெல்லாம் எங்களுக்குத் தெரியணும்..."

வாணி பதில் எதுவும் சொல்லாமல் யோசித்துக்கொண்டிருக்க- மூன்று பேரும் அவளையே பார்த்தார்கள்.

சுந்தர் கேட்டான்.

"என்ன யோசிக்கறீங்க...?"

"பழைய தகவல்களை எடுத்துப் பார்க்கணும். தேடி எடுக்கணும்."

"எவ்வளவு நேரமானாலும் பரவாயில்லை. நாங்க காத்திருக்கோம். தேடி எடுக்கறதில் எங்களோட உதவி உங்களுக்குத் தேவைப்பட்டாலும் சொல்லுங்க... செய்யறதுக்கு நாங்க தயாரா இருக்கோம்..."

அந்த வாணி இன்னமும் யோசனையில் தத்தளிக்கிற முகத்தோடு தலையாட்டினாள்.

"அதுக்காக நான் யோசிக்கலை..."

"பின்னே...?"

"இங்கிருக்கற ஒவ்வொரு குழந்தையின் பிறப்பு மூலத்தையும் மிகவும் ரகசியமா பாதுகாக்கறது எங்களோட தார்மீகக் கடமை. அந்த விபரங்களை உங்களுக்குச் சொல்றதுக்கு இல்ல விதிகள் இடம் தராதுன்னு நினைக்கிறேன்..."

"அப்படின்னு நீங்க நினைக்கறீங்க... உங்களுக்கு உறுதியா தெரியாது இல்லையா...?"

"இல்ல. விதிகள் அதை அனுமதிக்குமா... அனுமதிக்காதான்னு சரியா தெரியாம நான் எப்படி உங்களுக்கு உதவ முடியும்...?"

"இந்த விதிகளை நடைமுறைப்படுத்தறது யாரு...! நீங்க சொல்லுங்க. நாங்க அவங்களைப் பாத்து பேசறோம்..."

அந்த வாணி மூக்கு கண்ணாடியை உயர்த்திக்கொண்டே மென்மையான புன்னகையோடு சொன்னாள்.

"மேடம் வசந்தராதேவிதான் இது சம்பந்தமா முடிவு எடுக்கணும். அவங்களைத்தான் கேக்கணும்..."

"அவங்க வர்றதுக்கு மூணு மாசம் ஆகும்னு நீங்கதானே கொஞ்ச நேரத்துக்கு முன்னால சொன்னீங்க...?"

"ஆமா..."

"அப்படின்னா இந்த விபரங்களைத் தெரிஞ்சிக்கறதுக்கு நாங்க மூணு மாசம் காத்திருக்கணுமா...?"

"அப்படி நான் சொல்லலை. மேடம் வசந்தராதேவி அடிக்கடி இங்கே 'போன்' பண்ணுவாங்க. அப்படி 'போன்' பண்ணறப்போ இந்த விஷயத்தை நான் அவங்க காதில் போட்டு வெக்கறேன்..."

"ஒருவேளை அவங்க... இந்த மாதிரி தகவலெல்லாம் தரக் கூடாதுன்னு சொல்லிட்டா...?"

"அப்படி சொல்லமாட்டாங்கன்னு நினைக்கிறேன்."

"எப்படி இவ்வளவு உறுதியா சொல்றீங்க...?"

"நீங்க தொடர்ந்து எங்க இல்லத்துக்கு உதவி பண்ணுற கம்பெனியின் எம்.டி.யாச்சே. அதனால் உங்களுக்கு பாதகமா பதில் சொல்லமாட்டாங்க..."

"அவங்ககிட்டே நான் நேரடியா பேச முடிஞ்சா அவங்களை சமாதானம் பண்ண வசதியா இருக்கும். அவங்க 'போன் நம்பர்'



கிடைக்குமா...? அல்லது என் நம்பரைக் குடுத்து அவங்களை பேசச் சொல்றீங்களா...?"

வாணி புன்னகையோடு மறுத்தாள்.

"அதுக்கான அவசியமே இல்லை. நானே அவங்ககிட்டே முறையா பேசிடறேன்."

வாணி கைகுவித்து விடை கொடுக்க- மூன்று பேரும் வெளியே வந்தார்கள். முகங்களில் கனத்த ஏமாற்றம்.

காரை நோக்கி நடந்து சென்றபோது பூவாளியைச் சுமந்தபடி சென்று கொண்டிருந்த ஒரு நடுத்தர வயது அம்மாள் அவர்களைப் பார்த்து மெல்லிய குரலில் கேட்டாள்.

"நீங்க ஊர்மிளாவைப் பத்தி விசாரிக்க வந்திங்களா?"

மூன்று பேரும் அந்த அம்மாளை ஆச்சரியப் பார்வையில் நனைத்தார்கள்.

"ஆமா... அது உங்களுக்கு எப்படித் தெரியும்...?"

"வாணிகூட நீங்க பேசிட்டிருந்ததை நான் கேட்டுட்டுதான் இருந்தேன்..."- சொன்னவள் சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு தொடர்ந்தாள்.

"ஆபீஸ் பக்கத்தில் இருக்கிற பூச்செடிகளுக்கு நான் தண்ணீர் விட்டுட்டு இருந்தேன். அப்போ நீங்க பேசினதெல்லாம் காதில் விழுந்தது..."

"உங்களுக்கு ஊர்மிளாவின் பூர்வீகம் பத்தி ஏதாவது தெரியுமாம்மா...?"

"எனக்குத் தெரியாது. ஆனா. உங்களுக்குத் தெரிய வைக்கறதுக்கு என்னால் உதவ முடியும்...?"

"எப்படி...?"

"முதல்ல நீங்க எதுக்காக ஊர்மிளாவின் பூர்வீகம் பத்தி விசாரிக்கறீங்கன்னு நான் தெரிஞ்சுக்கணும்..."

"அது வந்து..."

"நீங்க நல்ல நோக்கத்துக்காக அவளைப் பத்தி விசாரிக்கறீங்கன்னு தெரிஞ்சா... நான் உதவி செய்வேன்..."

"நாங்க நல்ல நோக்கத்தோடதான் அவளைப் பத்தி விசாரிக்கறோம்..."

"உங்க நோக்கம் என்னன்னு சொல்லுங்க... அது நல்லதா கெட்டதான்னு நான் தீர்மானிக்கிறேன்..."

ராமமூர்த்தியும், லேகாவும் என்ன சொல்லுவதென்று புரியாமல் நின்றுகொண்டிருக்க- சுந்தர் சொன்னான்.

"இவ்வளவு வருஷமா அநாதையா வாழ்ந்துட்ட ஊர்மிளாவை அவ குடும்பத்தோட சேர்த்து வைக்கணும்ங்கற நல்ல நோக்கத்தோடதான் நாங்க அவளைப் பத்தின விபரம் விசாரிக்கிறோம்..."

"இன்னும் கொஞ்சம் புரியும்படியா சொல்றீங்களா...?"

'ஊர்மிளா இன்னாருடைய மகளாகத்தான் இருப்பாள்னு நாங்க யூகிச்சு இருக்கோம். ஆனா, அதை உறுதிப்படுத்திக்க எங்ககிட்டே எந்தவிதமான ஆதாரமும் இல்லை. உறுதியா எதுவும் தெரியாத நிலையில் நாங்க எப்படி ரெண்டு பேரையும் சேர்த்து வைக்க முடியும்...?"

அந்த அம்மாள் சந்தேகத் தொனியோடு கேட்டாள்.

"இத்தனை வருஷமா இல்லாம திடீர்னு இருபது வயசுப் பொண்ணு அந்த வீட்டுக்குள்ளே நுழைஞ்சா... அந்த குடும்பத்தில் குழப்பம் ஏற்படாதா...?"

"அந்தக் குடும்பத்தில் ஒரு சுமூகமான சூழ்நிலை இருக்கறதாலதான் நாங்க இப்போ இந்த முயற்சியிலேயே இறங்கி இருக்கோம்."

சற்று நேர யோசனைக்குப் பிறகு தலையசைத்தாள் அந்த அம்மாள்.

"சரி... நான் உங்களுக்கு உதவறேன். ஊர்மிளாவைப் பத்தி விபரங்களைத் தெரிஞ்சிக்கறதுக்கு வழி சொல்றேன்..."

"சொல்லுங்கம்மா."

"அவளோட பூர்வீக விபரங்களைத் தெரிஞ்சிக்கறதுக்கு ஒரே வழி வாணிதான்..."

"வாணிதான் கையை விரிச்சிட்டாங்களே..."

"இந்த அநாதை இல்லத்தின் 'ரெக்கார்டு' அறையைப் பார்த்துக்கறது வாணிதான். ஊர்மிளா பத்தின விபரங்களை அவளாலேதான் தர முடியும்...?"

"மேடம் வசுந்தராதேவியைக் கேட்டுட்டுதான் எதையுமே சொல்ல முடியும்னு வாணி சொன்னாங்களே...?"



"அதெல்லாம் சும்மா. உங்களை இழுத்தடிக்கறதுக்காக அவ அப்படிச் சொல்லியிருக்கா..."

"எங்களை எதுக்காக அவங்க இழுத்தடிக்கணும்...?"

"உங்களுக்கு வேண்டியது தகவல். அது அவகிட்டே இருக்கு. அவளுக்கு வேண்டியது பணம். கொஞ்சம் முறுக்கிட்டாத்தானே நீங்க அவ கேக்கற பணத்தைத் தருவீங்க..."- அந்த அம்மாள் சொல்ல சுந்தர் திகைத்தான்.

"வாணி பணத்தை எதிர்பார்த்துத்தான் எங்களை திருப்பி அனுப்பிட்டாங்களா...! எங்களாலே நம்பவே முடியலையே...?"

"தோற்றத்தை வெச்சு அவளைப் பத்தி தப்புக் கணக்குப் போடாதீங்க. மேடம் இருக்கிறபோதே எல்லா வழியிலும் பணம் சம்பாதிக்கப் பார்ப்பா அந்த வாணி. இனி மூணு மாசத்துக்கு மேடம் வரப் போறதில்லை. அதுக்குள்ளே முடிஞ்ச வரைக்கும் சுருட்டிக்கத்தான் பார்ப்பா..."

"மேடம் வசந்தராதேவிகிட்டே போனல பேசிட்டுதான் சொல்ல முடியும்னு சொல்லி எங்களை அனுப்பி வெச்சிட்டாங்களே... மறுபடியும் நாங்க என்ன சொல்லி அவங்களை 'அப்ரோச்' பண்ண முடியும்...?"

"இப்போ நீங்க பணம் குடுக்கத் தயாரா இருந்தா சொல்லுங்க... நான் அவகிட்ட பேசி ஏற்பாடு பண்ணுறேன்..."

"எவ்வளவு பணம் எதிர்பார்ப்பாங்க...?"

"அதிகபட்சம் ரெண்டாயிரமோ, மூவாயிரமோ எதிர்பார்ப்பா..."

சுந்தர் அலட்சியமாய்த் தோள்களைக் குலுக்கிவிட்டு, பேண்ட் பாக்கெட்டில் இருந்து பர்சை எடுத்துப் பிரித்தான்.

மடிப்பு கலையாத ஐநூறு ரூபாய் சலவைத் தாள்களை அந்த அம்மாளின் கையில் தந்தான்.

"இதைக் கொண்டுபோய் வாணிகிட்டே கொடுத்துப் பேசுங்க. எங்களுக்கு தேவை அவளைப் பற்றிய விபரங்கள்தான். பணத்தைப் பத்திக் கவலையில்லை..."

"நீங்க இங்கே கார் பக்கத்திலேயே நில்லுங்க. நான் போய் வாணிகிட்டே பேசிட்டு உங்களைக் கூப்பிடறேன்."

மூவரும் தலையசைக்க- அந்த அம்மாள் அலுவலக அறையை

நோக்கி வேக வேகமாய் போனான்.

அவன் சென்றபின் ராமமூர்த்தி மெல்லக் கேட்டார்.

"மாப்பிள்ளை... இவ்வளவு 'ரிஸ்க்' எடுக்கணுமா? செலவு பண்ணி நம்ம மன நிம்மதியைக் கெடுத்துக்கணுமா?"

"இதில் என்ன 'ரிஸ்க்' இருக்கு? உறுத்தல் இருந்தாலும் மனசு நிம்மதியா இருக்கப் போறதில்லை. இப்போ ஊர்மிளாவைப் பத்தின பின்னணி தெரிஞ்சதுன்னா நம்ம மூணு பேரின் மனசுக்குள்ளும் உறுத்தலா இருந்துகிட்டிருக்கும் கேள்விக்கு விடை கிடைச்சிடும்..."

சுந்தர் சொல்லச் சொல்லவே... அலுவலகத்தில் இருந்து வேக வேகமாய் வாணி வெளிப்பட்டான்.

வழியலாய் ஒரு சிரிப்பை உதடு நிறைய ஒட்ட வைத்துக்கொண்டு சொன்னான்.

"உள்ளே வாங்க."

"ஊர்மிளா பத்தின தகவல்கள்..."

"நான் எடுத்துத் தர்றேன்..."

"வசுந்தராதேவியைத்தான் கேக்கணும்னு கொஞ்ச நேரத்துக்கு முன்னால சொன்னீங்களே...?"

"பெரிய இடத்தில் இருந்து வந்திருக்கீங்க. எடுத்த எடுப்பிலே பணம் வேணும்னு உங்ககிட்டே எப்படிச் சொல்றதுன்னு தெரியலை. தவிர, நீங்க பர்சனலா மேடத்தோட பழக்கம் உள்ளவரோங்கற பயம் வேற அடிமனசில் இருந்தது..."

"எங்களுக்குத் தேவை உடனடியா ஊர்மிளாவைப் பத்தின பின்னணித் தகவல்கள். தர்றீங்களா...?"

"ஆவண அறையின் சாவியே என் பொறுப்பில்தான் இருக்கு. பழைய ஆவணங்களை அலசிப் பார்த்தா பத்தே நிமிடத்தில் விபரங்கள் கிடைச்சிடும். நீங்க... உள்ளே வந்து உட்காருங்க."

அவர்கள் உள்ளே வந்து சோபாவில் அமர்ந்த பின்– 'ஆவண அறை' என்று நெற்றியில் அப்பியிருந்த கதவினுள் நுழைந்தான் வாணி.

பதினைந்து நிமிடங்கள் கழிந்திருக்கும்.

அறைக்குள் இருந்து வாணி குறிப்பு எடுத்துக்கொண்ட தாள்களோடு



வெளியே வந்தான். தலையிலும், முகத்திலும் லேசாய் ஒட்டடை.

சுந்தர் கேட்டான்... ஆர்வம் தெறிக்கும் குரலில்.

"விபரங்கள் கிடைச்சதா...?"

"முகவரி முதற்கொண்டு எல்லாமே தெளிவா கிடைச்சிருக்கு."

சொல்லிக்கொண்டே அவன் காட்டின தாளின் மேல் பார்வையைப் போட்டார்கள் மூன்று பேரும்.

முகவரியில் அந்த பெயர் தெரிந்தது. ராதாபாய்.

"ராதாபாய்...? யார் இந்த ராதாபாய்...?"

"ஊர்மிளாவோட அம்மா..."

வாணி சொல்ல– திகைப்போடு அவனைப் பார்த்தார்கள்.

"இது உள்ளது ராதாபாயோட விலாசமா...?"

"ஆமா! இந்த ராதாபாய்தான் ஊர்மிளாவை இந்த இல்லத்தில் சேர்த்தது..."

"மும்பை முகவரிதான் குடுத்திருக்கு. உண்மையிலேயே இருந்துகிட்டு தான் பெத்த குழந்தையை இந்த இல்லத்தில் விட வேண்டிய அவசியம் அந்த ராதாபாய்க்கு என்ன அவசியம் வந்தது...?"

"காரணம், தன்னோட குழந்தை நல்லபடியா வளரணும்கிற எண்ணம்தான்..."

"அம்மாவைப் பிரிஞ்ச அந்தக் குழந்தை எப்படி நல்லபடியா வளரும்...?"

சிரித்தான் வாணி.

"அம்மா இருப்பது ஒரு மோசமான சூழலில். அதே சூழ்நிலைக்கு பிள்ளையும் தள்ளப்பட்டு விடக்கூடாதே..."

"புரியும்படியா சொல்லுங்க..."

"அந்த ராதாபாய் விபசார விடுதியில் இருந்த பொண்ணு. அவளுக்குப் பிறந்தவள்தான் ஊர்மிளா. பொண்ணும் தன்னை மாதிரி ஆயிடக் கூடாதேங்கற கவலையில் நல்ல சூழ்நிலையில் வளரட்டுமேன்னு மகளை அநாதை இல்லத்தில் சேர்த்திருக்கா அந்த ராதாபாய்..."

வாணி சொல்ல–

ராமமூர்த்தி, லேகாவுக்குள் விபரீதமான எண்ணங்கள் வேகமாய்

வேர்விடத் தொடங்கின.

'செண்பகவல்லிதான் அந்த ராதாபாயா...?'

மனசுக்குள் முளைத்த கேள்வி விஸ்வரூபம் எடுத்தது.

## 8

**கா**ரில் போகப் போக ராமமூர்த்தியை சமாதானப்படுத்திக்கொண்டே வந்தான் சுந்தர்.

"ராதாபாய்ங்கற பேரில் அத்தைதான் இங்கே இருந்திருப்பாங்கன்னு நீங்க நினைக்கறது ரொம்பத் தப்பு மாமா..."

"வேற எப்படி நினைக்கறது மாப்பிள்ளை? மும்பை விபசார விடுதியில் இருந்து மீட்கப்பட்ட அபலைப் பெண்கள் பெற்றோரிடம் ஒப்படைப்பு. இந்த மாதிரி அடிக்கடி செய்தி வருமே... அதுதான் இப்போ எனக்கு ஞாபகத்துக்கு வருது..."

லேகா ஆமோதித்தாள்.

"நான் அம்மாவைத் தப்பு சொல்லலை. சந்தர்ப்ப வசத்தால இந்த சாக்கடையில் விழுந்துட்டு- பிறகு மீட்கப்பட்டு இருக்கலாம்னு நினைக்கத் தோணுது..."

"ஏன் இஷ்டத்துக்கு கற்பனை பண்ணுறீங்க? உண்மை தெரியாமே எந்த ஒரு முடிவுக்கும் வரக்கூடாது."

சுந்தர் சொல்லிக்கொண்டு இருக்கும்போதே, கார் ஜி.டி. சாலையையொட்டிய சந்துகளில் நுழைந்து ஒரு சிறிய தெரு முனையில் நின்றது.

கதவைத் திறந்து இறங்கிக்கொண்டே சுந்தர் சொன்னான்.

"இந்த பாதைக்குள்ளே கார் போகாது... நடந்துதான் உள்ளே போகணும்..."

ராமமூர்த்தியும், லேகாவும் காரைவிட்டு இறங்கினார்கள். மூன்று பேரும் அந்தக் குறுகலான சந்துக்குள் நுழைந்தார்கள்.

இருபுறமும் பால்கனிகளோடு உயர உயரமாய் வீடுகள். பால்கனிகள் பூராவும் அரட்டை அடித்துக்கொண்டு இளம் பெண்கள் தெரிந்தார்கள். குறுக்கும் மறுக்கும் கட்டப்பட்ட கொடிகளில்



துணிகள் படபடத்தன.

முள் முள்ளாய் தாடி வைத்து நீள பைஜாமா அணிந்திருந்த மனிதன் குறுக்கிட்டான்.

"யாரைத் தேடறீங்க...?"

"நூத்தி ரெண்டு எங்கிருக்கு...?"

சுந்தர் கேட்டதும், பான் கறை இட்டுத் திட்டாய்ப் படிந்திருந்த பல் வரிசையைக் காட்டி அவன் சிரித்தான்.

"இங்கே ஒவ்வொரு டோர் நம்பருக்குள்ளும் குறைந்தபட்சம் பத்து தனித்தனிக் குடும்பம் இருக்கும். பேரைச் சொல்லாம கண்டுபிடிக்க முடியாது..."

"ராதாபாய்ங்கறவங்களை தேடி வந்திருக்கோம்..."

அந்த ஆசாமி லேசாய் முகம் மாறினான்.

"என்ன விஷயமா அவங்களை பார்க்க வந்திருக்கீங்க?"

"அவங்ககிட்டே கொஞ்சம் பர்சனலா பேசணும்..."

"நீங்க போலீஸா?"

"சேச்சே... அதெல்லாம் இல்லை. நீங்க பயப்பட வேண்டாம். அந்த ராதாபாய்கிட்டே சில விபரங்கள் கேட்டுத் தெளிவு பெறணும்னு நினைக்கிறோம். ஒரு அரை மணி நேரம் பேசிட்டுப் போயிடுவோம்..."

இடுங்கிய கண்களால் கொஞ்ச நேரம் அவர்களை யோசனையோடு பார்த்த ஆசாமி, மெதுவாய்த் தலையை அசைத்தான்.

"என்கூட வாங்க..."

இவர்கள் தயங்கித் தயங்கி நடக்க- சாக்கடைகளின் குறுக்கே அவன் வேகமாய் நடந்து சென்றான்.


உயரமான வாசற்படியுடன் இருந்த அந்த வீட்டின் தாழ்வாரத்தைக் கடந்து உள்ளே போனான்.

நடந்துகொண்டே சப்தமிட்டான்.

"ராதாபாய்... ராதாபாய்..."

"சில்லாவோ மத்... மை ஆ ரஹீஹீங்..."

ஒரு கரகரப்பான பெண் குரல் கேட்டதைத் தொடர்ந்து அழுக்கான அந்தத் திரைச்சீலையை ஒதுக்கிக்கொண்டு அவள் வெளிப்பட்டாள்.





கோதுமை நிறத்தில் பருமனான உடம்பு. பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னால் இந்திப்பட கதாநாயகி மாதிரி அழகாய் இருந்திருப்பாள் என்று தோன்றியது. இயல்பாகவே அவள் முகத்தில் ஒரு ரவுடித்தனம் குடியிருந்தது.

அந்த ஆசாமியைப் பார்த்து அதட்டலான குரலில் இந்தியில் கேட்டாள்.

"என்ன வேணும்...?"

"உன்னைப் பார்க்க யாரோ வந்திருக்காங்க..."

"யாரு...?"

தாழ்வாரத்தை ஒட்டினாற்போல நின்றிருந்த அவர்கள் மூன்று பேரையும் காட்டினான் அவன்.

வெற்றிலைக் குதப்பலை அங்கிருந்த தொட்டியில் உதட்டைக் குவித்துத் துப்பிவிட்டு மூன்று பேரையும் ஏற இறங்கப் பார்த்தாள் அந்த ராதாபாய்.

தனக்குள் முணுமுணுத்தாள்.

'இவங்களைப் பார்த்தா அந்த விவகாரத்துக்காக வந்தவங்களைப் போலத் தெரியலை...'

யோசித்துக்கொண்டே இந்தியில் கேட்டாள்.

"என்ன வேணும் உங்களுக்கு...?"

சுந்தரும் இந்தியில் பேசினான்.

"நீங்கதானே ராதாபாய்? உங்ககிட்டே சில விஷயங்கள் பேசிட்டுப் போகணும்னு வந்திருக்கோம்..."

"எதைப் பத்தி...?"

"ஊர்மிளாவைப் பத்தி..."

"ஊர்மிளா...?"

"ம்...! உங்க மக ஊர்மிளா..."

சுந்தர் சொன்னதும் சட்டென்று ராதாபாயின் முகத்தில் ஒரு மாறுதல் நிகழ்ந்தது.

ஏதோ சொல்ல வந்தவள், அந்த பைஜாமா ஆசாமியைப் பார்த்து மராத்தியில் கத்தினாள்.

"கொண்டு வந்து விட்டுட்டேல்லே... இவங்களை நான் பார்த்துக்கறேன்... நீ போயிட்டு வா..."

கறை படிந்த பற்களை காட்டிக்கொண்டு அவன் அங்கிருந்து அகன்று சென்றான்.

ராதாபாய் பரபரப்பாய் ஒரு பாயை விரித்துப் போட்டாள்.

"உக்காருங்க..."

அந்த அழுக்கான பாயில் மூன்று பேரும் தயக்கமாய் அமர்ந்தார்கள்.

வெற்றிலைக் குதப்பலை மறுபடியும் தொட்டியில் துப்பிவிட்டு, அருகில் வந்து அமர்ந்தாள்.

"இந்த 'அட்ரஸ்' யார் உங்களுக்குக் குடுத்தாங்க...?"

"கஸ்தூரிபா அநாதை இல்லத்தில் எங்களுக்குக் கிடைச்சது..."

சொன்ன சுந்தர் தொடர்ந்து கேட்டான்.

"பல வருஷங்களுக்கு முன்னால அந்த அநாதை இல்லத்தில் கொண்டு போய் சேர்த்திங்களே... அந்தக் குழந்தையைப் பத்தி ஏதாவது சொல்ல முடியுமா?"

"அது... நான் பெத்த குழந்தைதான்..."

"உண்மையாவா...?"

"ஆமா" என்று தலையாட்டிய ராதாபாய் சந்தேகத் தொனியோடு கேட்டாள்.

"இதெல்லாம் எதுக்காகக் கேக்கறீங்க...?"

"நீங்க சரளமா இந்தியும், மராத்தியும் இப்போ பேசலாம். ஆனா, உங்க பூர்வீகம் அநேகமா தமிழ்நாடா இருக்கும்னு நான் நினைக்கறேன்..."

"என்னைப் பேசவிடாம நீங்க பாட்டுக்கு பேசிகிட்டே இருக்கீங்க. ஆரம்பத்தில் இருந்தே நான் ஒரு சின்னத் திருத்தம் சொல்ல வர்றப்போவெல்லாம்... நீங்க எதையாவது குறுக்கே பேசி பேச்சை திசை திருப்பிட்டு இருக்கீங்க..."

அவன் படபடப்பாய்ச் சொன்னவுடன் சுந்தர் நிதானத்துக்கு வந்தான்.

"சரி! நீங்க... என்ன சொல்றீங்க...?"

"என்னோட மக பேரு ஊர்மிளா இல்லை.... ஊர்வசி."

"ஊர்வசியா...?"

"ஆமா... நீங்க என் பூர்வீகம் சம்பந்தமா ஏதேதோ கேக்கறப்பவே



எங்கேயோ தப்பு இருக்குன்னு நினைச்சேன். நான் சுத்தமான மராத்திக்காரி. என் பூர்வீகமே இந்த சிவப்பு விளக்கு பகுதிதான். மூணு பரம்பரையாவே நாங்க இந்த சாக்கடையில்தான் கிடக்கிறோம். ஊர்வசி என் வயிற்றில் உண்டானப்போ என்னோட மனசுக்குள்ளே ஒரு உறுத்தல். இது பொண்ணா இருந்தா நிச்சயமா இவளை இந்த சாக்கடைக்குள் தள்ளக் கூடாதுன்னு நான் தீர்மானிச்சேன்.

அதுக்காக என்னோட தாய்ப் பாசத்தைக் கூட விட்டுக் கொடுக்க தயாரா இருந்தேன். ஒரு 'கஸ்டமர்' மூலமா அநாதை இல்லம் பத்தி விபரம் தெரிஞ்சிகிட்டேன். என் உடம்பை வித்து சம்பாதிச்ச வெச்சிருந்த ஒரு தொகையை நிதியா கொடுத்து அவளை அங்கே ஒப்படைச்சேன். கையில் கிடைக்கிற பணத்தை எல்லாம் அப்பப்போ அந்த இல்லத்துக்கு கொடுத்து அனுப்புவேன்..."

"உங்க மக ஊர்வசி இப்போ எங்கே இருக்கா...?"

"அவ டிகிரி வரைக்கும் படிச்சிட்டா. அவளுக்கு அரசாங்க வேலையே கிடைச்சிடுச்சு. நாலு தெரு தள்ளி ஒரு நல்ல இடத்தில் வாழ்க்கைப்பட்டிருக்கா. அவ சந்தோஷமா இருக்கறதைப் பார்த்துப் பார்த்து நான் பூரிச்சுப் போயிட்டிருக்கேன். ஆனா, தன்னோட அம்மா இப்படிப்பட்டவள்னு இந்த நிமிஷம் வரைக்கும் அவளுக்குத் தெரியாது..."

ராதாபாய் கண்கள் பனிக்கச் சொல்லி முடிக்க– சுந்தர் திகைத்துப் போய் அப்படியே உட்கார்ந்துவிட்டான்.

குழப்பமான பார்வையோடு அவர்களின் சம்பாஷணையை புரியாமல் பார்த்துக்கொண்டிருந்த லேகாவும், ராமமூர்த்தியும் கேட்டார்கள்.

"இந்தம்மா என்ன சொல்றா...?"

ராதாபாய் சொன்னவைகளை சுந்தர் சுருக்கமாய் விவரிக்க... அவர்களும் நெகிழ்ந்து போன பார்வைகளோடு நிமிர்ந்தார்கள்.

"இந்த மாதிரி பெண்களின் தொழிலைப் பார்த்து நாம அவங்களை அருவருப்பா நினைக்கறோம். அவங்களுக்குள்ளே புதைஞ்சிருக்கற ஈரம் நிறைஞ்ச இதயங்கள் நம்ம கண்களில் படறதே இல்லை..."

விநாடி மவுனத்துக்குப் பிறகு லேகா சொன்னாள்.

"மொத்தத்தில் நாம தேடி வந்த விபரம் இன்னும் நமக்குக் கிடைக்கவே இல்லையே...?"

"அந்த வாணி, ஊர்மிளாங்கற பெயரைப் பார்க்கிறதுக்கு பதிலா ஊர்வசிங்கற பேரைப் பார்த்து இந்த ராதாபாயின் விபரங்களை நமக்கு எழுதித் தந்து இருப்பாளா...?"

"அப்படித்தான் நடந்திருக்கணும்..."

"இங்கே போன் இருந்தா இப்பவே அந்த இல்லத்துக்கு போன் பண்ணி கேட்டுப் பாருங்களேன் மாப்பிள்ளை. அவ இந்தத் தப்பான தகவலை குடுக்கிறதுக்கா மூவாயிரம் ரூபாய் வாங்கினா...?"

தன்னுடைய கோட் பாக்கெட்டில் இருந்து செல்போனை வெளியே எடுத்தான் சுந்தர்.

பொத்தான்களை ஒற்றி எடுத்தான்.

மறுமுனை இணைப்பு கிடைத்ததும் பேசினான்.

"ஹலோ... நான் மும்பை மெஷின் டூல்ஸ் எம்.டி. சுந்தர் பேசறேன். வாணி இருக்காங்களா...?"

"ஒரு நிமிஷம் 'லைன்'ல இருங்க..."

சொற்ப நேரம் நகர்ந்த பிறகு– வாணியின் குரல் ரிசீவருக்கு வந்தது.

"நான் வாணி பேசறேன் சார்."

"நீங்க தப்பான தகவலை எடுத்துக் குடுத்துட்டீங்களே வாணி..."

"எ... என்ன சொல்றீங்க சார்...?"

"ஊர்மிளாவைப் பத்தின தகவல்களைக் கேட்டா– ஊர்வசியைப் பத்தின விபரங்களை தந்திருக்கீங்க..."

"நோ... நோ... நோ... நான் சரியாதான் எடுத்துத் தந்தேன்..."

"இல்லை... நீங்க தந்த ராதாபாயின் விலாசத்தில் இருந்துதான் இப்போ நான் பேசிட்டிருக்கேன். அவங்க மக பேரு ஊர்வசி. அவ கல்யாணமாகி குடியும் குடித்தனமுமா பக்கத்தில்தான் எங்கேயோ இருக்கா. நாங்க சொல்ற ஊர்மிளா வேற பொண்ணு..."

"நான் ஒரு முறைக்கு மூணு முறை சரிபார்த்துத்தான் அந்த விபரங்களை உங்களுக்குத் தந்தேன் சார்..."

"இல்லை... நான் 'லைன்'ல இருக்கேன். நீங்க இன்னொரு தடவை அந்த தகவலை எடுத்துப் பாருங்க. ஊர்வசிங்கற பேரை ஊர்மிளான்னு அவசரத்தில் நீங்க தப்பா படிச்சிருப்பீங்க..."



"லைன்லயே இருங்க... நான் மறுபடியும் 'கிராஸ் செக்' பண்ணுறேன்..."

மேலும் சில நிமிடங்கள் வடிந்த பின் மீண்டும் வாணியின் குரல் கேட்டது.

"ஹலோ."

"சொல்லுங்க..."

"அந்த பழைய லெட்ஜர் இப்போ என் கையில்தான் இருக்கு சார்... நான் தெளிவா பார்த்துட்டேன்..."

"நீங்க பார்த்துச் சொன்ன தகவல் தப்புதானே...?"

"இல்லை... இங்கே விபரம் தெளிவா எழுதியிருக்கு. ஊர்மிளாவை இங்கே ஒப்படைச்சது ராதாபாய்தான்..."

"நல்லா பார்த்தீங்களா?"

"நல்லா பார்த்துட்டேன். 'ரெக்கார்டு'படி அப்படித்தான் இருக்கு..."

"ஊர்வசியோட விபரத்தை ஊர்மிளாங்கற பேருக்கு பக்கத்திலும், ஊர்மிளாவின் விபரத்தை ஊர்வசிங்கற பேருக்கு நேராவும் மாத்தி எழுதிட்டாங்களோ என்னவோ...? ஊர்வசிங்கற பேருக்கு நேரா என்ன எழுதி இருக்குன்னு பாருங்க..."

"அப்படி ஒரு பேரே இல்லை..."

வாணி பார்த்துச் சொல்ல– திகைப்போடு சுந்தர் தொடர்ந்து கேட்டான்.

"ஊர்வசின்னு ஒரு பொண்ணு அங்கே இருந்தாள்தானே...?"

"ஆமா, இருந்தா..."

"அப்படின்னா அவளைப் பத்தின விபரம் இருக்கணுமே...?"

"இருபது வருஷத்துக்கு முந்திய 'லெட்ஜர்' இது. இதைத் தேடி எடுத்ததே பெரிய காரியம். 'லெட்ஜர்' செல்லரிச்சுப் போயிருக்கு. சில பக்கங்களையே காணோம். நான் என்ன செய்யட்டும்... 'ரெக்கார்ட்ஸ்'ல என்ன இருக்கோ அதைத்தானே சொல்ல முடியும்...?"

"பிளீஸ்... எனக்காக கொஞ்சம் அக்கறை எடுத்து பழைய ரெக்கார்ட்லை இன்னும் கொஞ்சம் அலசிப் பாருங்க வாணி. ஊர்மிளாவைப் பத்தி வேற ஏதாவது தகவல் கிடைச்சா

சொல்லுங்க..."

"என்னால முடிஞ்சதைப் பண்ணிட்டேன். இதுக்கு மேல இந்த 'ரெக்கார்டு' அறையில் இருந்து எந்தத் தகவலும் கிடைக்கும்னு எனக்குத் தோணலை. உங்களுக்கு என் மேல நம்பிக்கை இல்லைன்னா நீங்க குடுத்த பணத்தைக்கூட திருப்பி வாங்கிக்கங்க. அதை அப்படியேதான் நான் வெச்சிருக்கேன்..."

"சேச்சே... நான் அப்படியெல்லாம் சொல்லலை. உங்க உதவிக்கு ரொம்ப தாங்க்ஸ்..."

ஒரு பெருமூச்சோடு செல்போனை அணைத்தான் சுந்தர்.

"என்னாச்சு...?" என்றாள் லேகா.

"அந்த வாணி கையை விரிச்சிட்டாங்க. 'ரெக்கார்டு'படி கிடைச்ச விபரம் இதுதான். இருபது வருஷத்துக்கு முந்தைய 'ரெக்கார்டு', அப்போ இருந்தவங்க தப்பா 'என்ட்ரி' போட்டதுக்கு நான் என்ன செய்ய முடியும்னு கேக்கறாங்க..."

ராமமூர்த்தியும், லேகாவும் குழப்பம் அமிழ்ந்த முகங்களோடு பார்த்துக்கொண்டிருக்க- இவர்களின் கவலையில் இந்திக் குரலை நுழைத்து பங்கெடுத்துக்கொண்டாள் அந்த ராதாபாய்.

"என்ன பிரச்சினை...?"

சுந்தர் அவளிடம் விஷயத்தைச் சொல்ல- உண்மையான அக்கறையோடு ராதாபாய் சொன்னாள்.

"ஊர்வசியை நான் அந்த இல்லத்தில் சேர்த்த நேரத்தில்தான் நீங்க தேடற ஊர்மிளாவும் சேர்க்கப்பட்டிருக்கா இல்லையா....?"

"ஆமா..."

"அந்த நேரத்தில் இல்லத்து வேலைகளை எல்லாம் பொறுப்பா கவனிச்சிட்டிருந்த ஆயிஷா பேகங்கறவங்களை எனக்குத் தெரியும். அவங்ககிட்டேதான் ஊர்வசியை நான் ஒப்படைச்சேன். அந்த அம்மாதான் அந்தச் சமயத்தில் 'லெட்ஜர்' விவகாரங்களையும் கவனிச்சிக்கிட்டாங்க.. அந்த அம்மா மட்டும் இருந்ததுன்னா எந்த லெட்ஜரையும் புரட்டிப் பார்க்காமலே உங்களுக்கு சரியான விபரத்தைச் சொல்லிடும்..."

"அந்த அம்மா மட்டும் இருந்ததுன்னான்னு சந்தேகத்தோட சொல்றீங்களே...?"

"ஆமா... அந்த ஆயிஷாம்மாவுக்கு இப்போ வயசு எண்பது



இருக்கும். ரொம்ப உடம்புக்கு முடியாம வேற படுத்து இருந்தது. நான் விலாசம் தர்றேன். போய்ப் பாருங்க. அதிருஷ்டமிருந்தா அந்த அம்மாவை நீங்க சந்திக்கலாம்..."

ராதாபாய் கொடுத்த விலாசத்தை வாங்கிக்கொண்டு படபடக்கிற இதயத்தோடு அங்கிருந்து அகன்றார்கள் அவர்கள்.

## 9

நகரின் வால் பகுதியில் இருந்தது அந்தச் சின்ன கல்லுக் கட்டடம்.

'அஸ்பெஸ்டாஸ்' நிழலில் காரை நிறுத்திவிட்டு வீட்டின் முகப்புக் கதவைத் தட்டினார்கள்.

"டொக்... டொக்."

"கோன்...?"

கதவைப் பாதி திறந்து எட்டிப் பார்த்தாள் ஒரு இளம்பெண்.

"ஆயிஷா பேகம்ஜி வீடு இதானே...?"

"ஆமா..."

"அவங்க இருக்காங்களா...?"

"இருக்காங்க..."

அவள் சொன்னதும் மூன்று பேருக்குள்ளும் நிம்மதிப் பெருமூச்சு வெளியானது.

அந்தப் பெண் தொடர்ந்து கேட்டாள்.

"உங்களுக்கு என்ன வேணும். நீங்க எங்கிருந்து வர்றீங்க...?"

"கஸ்தூரிபா அநாதை இல்லத்தில் ஒரு விபரம் தெரிஞ்சிக்கறதுக்காகப் போயிருந்தோம். நாங்க கேட்ட விபரம் அங்கே கிடைக்கலை. நாங்க கேக்கற விபரம் நிச்சயமா ஆயிஷா பேகம்ஜிக்கு தெரியும்னு சொன்னாங்க..."

"அவங்ககிட்டே பேசணுமா...?"

"ஆமா..."

"அவங்க ரொம்பவும் உடம்புக்கு முடியாம படுத்திருக்காங்க. அவங்களால அஞ்சு நிமிஷத்துக்கு மேல் சேர்ந்த மாதிரி பேச

முடியாது..."

"நாங்க ஆயிஷாம்மாவுக்கு எந்த சிரமமும் தரமாட்டோம். அதிக நேரம் தொந்தரவு செய்யமாட்டோம்."

"நான் தாதிம்மாவைக் கேட்டுட்டு வர்றேன்..."

அவர்கள் காத்திருந்த கொஞ்ச நேரத்தில் அவன் திரும்பி வந்தான்.

"உள்ளே வாங்க..."

தயங்கித் தயங்கி அவர்கள் மூன்று பேரும் உள்ளறைக்குள் நுழைய - மரக் கட்டிலின் மேல் தடிமான போர்வை விரிக்கப்பட்டு அதன் மேல் உரித்துப் போட்ட நார் மாதிரி ஆயிஷா பேகம் கிடந்தாள். முகம் பூராவும் ஏராளமாய்ச் சுருக்கங்கள்.

குழி விழுந்து போன கண்களால் அவர்களைப் பார்த்து தன் மெல்லிய குரலில் கேட்டாள்.

"உங்களுக்கு என்ன விபரம் வேணும்...?"

சுந்தர் சுருக்கமாக தங்கள் பிரச்சினையை சொல்லி முடித்தான்.

"ஊர்மிளாவா...?"

கேட்ட ஆயிஷா பேகத்தின் கண்களில் திகைப்பு தெரிந்தது.

"ஆமா... உங்களுக்கு ஞாபகம் இருக்கா?"

"நல்லா ஞாபகம் இருக்கு. பச்சக் குழந்தையா இருந்த அவளைக் கையில் வாங்கினது நான்தான். 'ரெக்கார்டு' எழுதறப்போ ஊர்மிளான்னு அவளுக்கு பேர் வெச்சதே நான்தான்..."

"நீங்க ரெக்கார்டில் எழுதினீங்களா...? ஆனா, அங்கே எந்த விபரமும் கிடைக்கவே இல்லையே...?"

கன்னங்கள் ஒடுங்க மெலிதாய்ப் புன்னகைத்துக்கொண்டே ஆயிஷா பேகம் கேட்டாள்.

"அது எப்படிக் கிடைக்காமப் போகும்...?"

"வாணின்னு ஒரு அம்மா ரெக்கார்டுகளைப் பார்த்தாங்க. ராதாபாய்ங்கற பொண்ணோட மகள் ஊர்மிளான்னுதான் அதில் இருக்காம்..."

"அவ பொய் சொல்லியிருக்கா..."

"வாணி பொய் சொன்னாங்கன்னா... ஏன் அப்படிச்



சொல்லணும்...?"

"நான் இல்லத்தைவிட்டு வந்து மூணு வருஷம்தானே ஆகிறது. அங்கே இருக்கற ஒவ்வொருத்தர் பத்தியும் எனக்கு நல்லாவே தெரியும். ஊர்மிளா நல்ல திறமையான பொண்ணு. அதனாலதான் இல்லம் தந்த உதவியைப் பயன்படுத்தி படிச்சு இப்ப சொந்தக் காலில் நிக்கறா. வாணி அவளைவிட பல வருஷம் மூத்தவளா இருந்தாலும், எப்பவுமே அவளுக்கு ஊர்மிளா மேல பொறாமை அதிகம். அந்த பொறாமையின் காரணமாத்தான்... அவளோட பூர்வீகத்தைப் பத்தி விசாரிக்க வந்த உங்ககிட்டே - அவ ஒரு விபசாரியின் மகன்னு சொல்லி பழிதீர்த்துக்க பார்த்திருக்கா..."

ராமமூர்த்தி கொதித்துப் போய் கத்தினார்.

"என்ன நெஞ்சழுத்தம் இருந்தா அவ பணத்தையும் வாங்கிட்டு நம்மை இப்படி வேணும்னே அலைக்கழிச்சிருப்பா...?"

அவரை கையமர்த்தினான் சுந்தர்.

"ஆத்திரப்படறதால் எந்த பிரயோஜனமும் இல்லை மாமா. உடம்பு சரியில்லாத இவங்களை சிரமப்படுத்தாம விபரங்களைத் தெரிஞ்சிகிட்டுப் போறதுதான் முக்கியம்..."

சொன்னவன் ஆயிஷா பேகத்திடம் தொடர்ந்து கேட்டான்.

"அப்படின்னா ஊர்மிளாவின் நிஜமான பின்னணி என்ன...? அவளோட அம்மா யாரு? எந்த ஊரு...?"

"ஊர்மிளாவின் அம்மா யாருன்னு எனக்குத் தெரியாது..."

"அவளை யார் கொண்டு வந்து அந்த இல்லத்தில் சேர்த்தது... அதாவது தெரியுமா?"

"சீதாலட்சுமின்னு ஒரு டாக்டர்தான் ஊர்மிளாவை அந்த இல்லத்தில் கொண்டு வந்து ஒப்படைச்சாங்க..."

"சீதாலட்சுமியா...? பேரைப் பார்த்தா தமிழ்நாட்டைச் சேர்ந்தவங்க போலத் தெரியுதே?"

"அந்த டாக்டரம்மா தமிழ்நாட்டைச் சேர்ந்தவங்கதான்..."

"தமிழ்நாட்டில் எந்த ஊரைச் சேர்ந்தவங்கன்னு உங்களால ஞாபகப்படுத்தி சொல்ல முடியுமா...?"

சில விநாடிகள் நெற்றியைச் சுருக்கிய ஆயிஷா பேகம், தலையை லேசாய் அசைத்தபடி சொன்னாள்.

"ஊஞ்சம்பட்டின்னு ஒரு கிராமம்..."

சுந்தர் திரும்பிப் பார்க்க-

ராமமூர்த்தியின் முகம் மின்சாரம் இழந்த அறையைப் போல இருட்டிப் போயிருந்தது.

அவர் உடைந்து போன குரலில் சொன்னார்.

"செண்பகவல்லியின் சொந்த ஊர் அதுதான் மாப்பிள்ளை..."

## 10

**டா**க்டர் சீதாலட்சுமி ஆச்சரியத்துடன் நிமிர்ந்து அவர்களைப் பார்த்தாள்.

"நான் மும்பையில்தான் இருக்கேன்னு உங்களுக்கு எப்படித் தெரியும்...?"

எதிர் இருக்கையில் இருந்த ராமமூர்த்தி சொன்னார்.

"ஊஞ்சம்பட்டி கிராமத்துக்கே புறப்பட்டு போய் உங்களைச் சந்திக்கணும்னுதான் உடனடியாக எனக்குத் தோணுச்சு. பல வருஷங்களுக்கு முன்னால அங்கே இருந்திருக்காங்க... அந்த டாக்டர் இப்பவும் அங்கேயே இருப்பாங்கன்னு உறுதியா சொல்ல முடியாது. எதுக்கும் போன் பண்ணி விசாரிச்சிட்டுப் போகலாம்னு மாப்பிள்ளைதான் சொன்னார். அப்படி விசாரிச்சதனால உங்களை இங்கேயே பார்க்க முடிஞ்சது..."

"ஏறத்தாழ இருபது வருஷங்களுக்கு மேலாக நான் மனசுக்குள்ளே போட்டு வெச்ச விஷயத்தை இப்போ உங்ககிட்டே சொல்றதுங்கற முடிவுக்கு நான் வந்து இருக்கேன்னா... அதுக்கு காரணம் செண்பகவல்லி மேல சந்தேகப்பட்டு நீங்க இவ்வளவு தூரம் விசாரிச்சிட்டு வந்திருப்பதாலதான்..."

கண்ணாடியை ஒற்றை விரலால் ஏற்றி விட்டுக்கொண்டே சீதாலட்சுமி சொல்ல- தழுதழுத்த குரலில் ராமமூர்த்தி சொன்னார்.

"அசலா செண்பகவல்லியைப் போலவே ஒரு பொண்ணைப் பார்த்த பிறகு... இந்த விஷயத்தை உடனே தெளிவுபடுத்திக்கணும்ங்கற



வேகம்- தாக்கம் எங்களுக்கு அதிகமாயிருச்சு டாக்டர்..."

"என்ன நடந்ததுன்னு நான் உங்களுக்கு விபரமா சொல்றேன்... செண்பகவல்லிக்கு இதில் எவ்வளவு தூரம் பங்கு இருக்குன்னு நீங்களே முடிவு பண்ணிக்கங்க..."

சீதாலட்சுமி சொல்ல ஆரம்பிக்க...

சுந்தர், ராமமூர்த்தி, லேகா மூன்று பேரும் இமைகளை அசைக்காமல் டாக்டரையே பார்க்க-

மனசுக்குள் அந்தக் கால காட்சிகள் ஓடின.

## 11

**ஊ**ஞ்சம்பட்டி கிராமம்.

குடிசைக்குள் நுழைந்த வடிவாம்பிகை மூலையில் குத்துக் காலிட்டு உட்கார்ந்திருந்த மகள் செண்பகவல்லியைப் பார்த்து முகம் பூராவும் திகைப்பைப் பரவவிட்டாள்.

"ஏய் செண்பகவல்லி... உனக்கு என்னடி வந்தது...?"

பதினாறு வயது செண்பகவல்லி- இரண்டு முறை வடிவாம்பிகை கூப்பிட்ட பிறகு- மெதுவாய்த் தலையை மட்டும் உயர்த்தினாள். பேசாமல் முகத்தை திருப்பிக்கொள்ள- அம்மாக்காரி கேட்டாள்.

"ஏன் இப்படி வந்து உக்காந்திருக்கே...?"

"உட்காராமே... என்ன பண்ணுறதாம்...?"

"ஊரே கலகலன்னு ஒரே சந்தோஷமா இருக்கு... வெளியே போய்ப் பாரு."

"அதுக்கு என்னை என்ன பண்ணச் சொல்றே...?"

"பக்கத்து ஊர் திருவிழாவுக்குப் போறதுக்காக நாலு டிராக்டர் வண்டி ரெடியா இருக்கு. இன்னும் கொஞ்ச நேரத்தில் ஜனங்களை ஏத்திட்டு எல்லா வண்டியும் கிளம்பிடும்..."

"கிளம்பட்டுமே...!"

"உனக்கு என்ன ஆச்சு... ஊர்த் திருவிழான்னா எப்பவுமே குதியாட்டம் கட்டிகிட்டு முன்னாடி நிப்பியே...?"

"எனக்குப் பிடிக்கலை..."

"என்ன பிடிக்கலை...?"

"திருவிழாவுக்கு வரப் பிடிக்கலை..."

"ஏண்டி...!"

"காரணத்தைச் சொன்னா... அதனால என்ன பிரயோஜனம்... நான் கேக்கிறதை நீ வாங்கித் தரவா போறே...?"

"உனக்கு இல்லாம நான் எதை கொண்டுட்டுப் போகப் போறேன்? உனக்கு என்ன வேணும் சொல்லு...?"

செண்பகவல்லி தன் தாவணியைக் கழற்றி தாயிடம் காட்டினாள்.

"இப்படி கிழிஞ்ச தாவணியைக் கட்டிட்டு நான் எப்படி திருவிழாவுக்கு வர முடியும்...?"

"இது ஒண்ணுதான் உன்கிட்டே இருக்கா? மத்த தாவணியெல்லாம் என்ன ஆச்சு...?"

"எல்லா தாவணியிலும் கிழிசல் இருக்கு..."

"என்கிட்டே நீ பொய் சொல்லாதே. முந்தா நாள் நான்தானே உன்னோட துணிமணிகளையும் சேர்த்து துவைச்சிப் போட்டேன். இளிப் பச்சை தாவணி, அரக்கு நிற தாவணி... இதெல்லாம் நல்லாத்தான் இருந்தது."

"எல்லாம் சாயம் போன தாவணிங்க. அதைக் கட்டிகிட்டா பிச்சைக்காரியைவிட கேவலமா இருக்கும்..."

வடிவாம்பிகை தளர்ந்த குரலில் சொன்னாள்.

"வீட்டில் இருக்கறதைத்தானே கட்டிட்டுப் போக முடியும். திடீர்னு புதுத் தாவணிக்கு எங்கேடி போறது...? அடுத்த மாசம் அப்பாவை எடுத்து தரச் சொல்றேன். இப்போ நீ கிளம்பி வா..."

"சரசு, விமலா எல்லாரும் பட்டு தாவணி கட்டிட்டு இன்னிக்கு திருவிழாவுக்கு வரப் போறாங்க. நான் மட்டும் பழசு பரட்டையைக் கட்டிகிட்டு வர முடியாது. நான் இங்கேயே இருக்கேன்..."

"பட்டு தாவணிதானே உனக்கு வேணும்?"

"ஆமா..."

"ரெண்டு மாசம் போகட்டும், எடுத்து தர்றேன்."

"நான் ஒண்ணும் புதுசா எடுத்துத் தரச் சொல்லலை..."

"பின்னே...?"

"பீரோவுக்குள்ளேயே வச்சிருக்கியே... அதை எடுத்துக் கொடு."

"பீரோவுக்குள்ளேயா... பட்டுத் தாவணியா...?"

கேள்வி எழுப்பியபடியே வடிவாம்பிகை யோசிக்க– செண்பகவல்லி சொன்னாள்.

"பட்டுத் தாவணி இல்லை... பட்டுச் சேலை."



வடிவாம்பிகை புன்னகைத்தாள்.

"என்னோட கல்யாணப் பட்டுப் புடவையைச் சொல்றியா? உன்னை விட்டா அதை வேற யாருக்குடி தரப் போறேன். ஆனா, நீ இன்னும் புடவை கட்டிப் பழகலை இல்லையே... திடீர்னு இன்னிக்கு அதை எப்படிக் கட்டிட்டுப் போவே?"

"புடவை எனக்கு வேண்டாம். அந்த புடவையை நான் தாவணியா கட்டிக்கறேன்..."

வடிவாம்பிகை திகைப்போடு அவளைப் பார்த்தாள்.

"எட்டு கெஜம் புடவை அது. அதை எப்படி நீ தாவணியா கட்ட முடியும்?"

"தாவணிக்கு அளவா புடவையைக் கிழிச்சு மெஷின்ல தச்சிடலாம்..."

செண்பகவல்லி சொன்னதைக் கேட்டு அதிர்ந்து போய் நிமிர்ந்தாள் வடிவாம்பிகை.

"அ... அது... என் கல்யாணப் புடவைடி. அதைக் கிழிக்கணும்னு நீ சொல்றதைக் கேட்டாலே என் மனசெல்லாம் பதறுது..."

"அதனாலென்ன? நான் புதுசாவா கேக்கறேன். இருக்கிறதைத் தானே குடுக்கச் சொல்றேன்?"

"வேண்டாண்டி.. கல்யாணப் புடவையைக் கிழிக்கக் கூடாது."

"அந்தப் புடவையைக் கிழிச்சு தாவணியா கட்டிட்டு வர்றதுன்னா நான் திருவிழாவுக்கு வருவேன். இல்லைன்னா நீயும், அப்பாவுமே போயிட்டு வாங்க. நான் இங்கேயே கிடக்கிறேன்..."

"நீ வரலைன்னா அப்பா என்னைக் கோவிச்சுக்குவார்."

"சொல்றதைச் சொல்லிட்டேன். நான் வரணும்னு உனக்கு இஷ்டமிருந்தா அந்தப் புடவையைக் கிழிச்சு குடு..."

செண்பகவல்லியையே பார்த்துக்கொண்டு சிலை மாதிரி நின்றபடி யோசனையில் மூழ்கியிருந்த வடிவாம்பிகை நீண்ட மௌனத்துக்குப் பிறகு தலையை அசைத்தாள்.

"சரி... புடவையை எடுத்துட்டு வா."

வடிவாம்பிகை சொன்னதும் உற்சாகமானாள் செண்பகவல்லி.

ஓடிப் போய் பீரோவுக்குள் இருந்த பட்டுப் புடவையை எடுத்து பெரிய கத்திரிக்கோலை குறுக்காக நுழைத்து அளவாகக் கத்தரித்தாள் செண்பகவல்லி.

தையல் மெஷினைச் சுழற்றிவிட்டு ஓரங்களை தைத்தாள். தடுப்புக்கு பின்னே மறைந்து– பட்டுத் தாவணிக்கு மாற ஆரம்பித்தாள்.

அவன் உடை மாற்றிக்கொண்டு வருகிற வரைக்கும் துண்டாடப்பட்டிருந்த பட்டுப் புடவையின் மிச்சங்களையே பார்வையால் வெறித்துக்கொண்டிருந்தாள் வடிவாம்பிகை.

பத்து நிமிடங்கள்.

மயில் கழுத்து நிறத்தில் சுற்றியிருந்த தாவணியோடு வந்தாள் செண்பகவல்லி.

வீட்டைவிட்டு வெளியே நடந்தார்கள்.

"தாவணி நல்லா இருக்காம்மா...?"

"ம்..."

"ஏன் ஒரு மாதிரி ஆயிட்டே...?"

"ஒண்ணுமில்லை..."

"என் மேல் கோபமா...?"

"அதெல்லாம் எதுவுமில்லை..."

"நீயும் இந்தப் புடவையை அடிக்கடி கட்டறதில்லை. தாவணியா பண்ணிட்டா நான் அடிக்கடி கட்டிப்பேனே...?"

"நான் எதுவும் சொல்லலையே...?"

"நீ வாயை திறந்து சொல்லலைன்னாலும் உன்னோட முகம் நீ கோபமா இருக்கேன்னு சொல்லுது..."

அவர்கள் பேசிக்கொண்டே நடந்தபோது வேறு சில பெண்கள் இணைந்து கொள்ள–

பேச்சு திசை மாறியது.

சூழ்நிலை கலகலப்பானது.

பிரதான சாலைக்கு அருகே 'டிரெயிலர்' இணைக்கப்பட்டு நான்கு டிராக்டர்கள் வரிசையாய் நின்றிருந்தன.

ஒவ்வொரு டிரெயிலரிலும் கிராமத்து ஜனங்கள் மூட்டையைப் போல அடைந்து கிடந்தார்கள்.

முன்னால நின்றிருந்த டிரெயிலரில் இருந்து செண்பகவல்லியின் அப்பா பொன்னுச்சாமி குரல் கொடுத்தார்.

"ஏய் செண்பகம்... வடிவு... இங்கே வாங்க..."

இவர்கள் அந்த டிராக்டரை நெருங்கியபோது– நெருக்கியடித்துக்கொண்டு சுற்றி நின்றவர்கள் கத்தினார்கள்.

"இங்கே கால் வெக்கவே இடமில்லை. இதுல அவங்களை எங்கே கூப்பிடறே பொன்னுச்சாமி? ரெண்டு பேரையும் பின்னால வர்ற வண்டியில ஏறிக்கச் சொல்லு..."

வடிவாம்பிகை தலையாட்டினாள்.



"ஆமாங்க... ரொம்ப கூட்டமா இருக்கு. அதோ அந்த வண்டியிலே நானும், செண்பகவல்லியும் ஏறிக்கறோம்..."

"நானும் அந்த வண்டிக்கு வந்துடட்டுமா...?"

"இருக்கிற இடமும் போயிடப் போகுது. பேசாம இங்கேயே நில்லுங்க..."

"ஏன் இவ்வளவு நேரம் தாமதம் பண்ணிட்டீங்க...?"

பொன்னுச்சாமி கேட்டதுமே லேசாக முகம் மாறிப் போன வடிவாம்பிகை- சட்டென சுதாரித்துக்கொண்டு சொன்னாள்.

"எல்லாம் உங்க அழகு மக பிடிவாதத்தால தான். அதெல்லாம் அப்புறமா சொல்றேன்..."

பக்கத்து டிராக்டரில் இருந்து செண்பகவல்லியை சில பெண்கள் கூப்பிட– வடிவாம்பிகையை இழுத்துக்கொண்டு அவள் வேகமாய் ஓடினாள்.

நான்கு டிராக்டர்களும் நிரம்பி வழிய- அடுத்த சில நிமிடங்களில் கூச்சலும், கும்மாளமுமாய் அவை கிளம்பின.

உற்சாகத்தில் போட்டி போட்டுக்கொண்டு ஒன்றை ஒன்று முந்திச் செல்ல முயன்றன.

அரை மணி நேர பயணத்துக்குப் பிறகு...

விதி அந்த ஆளில்லா 'லெவல் கிராஸிங்' ரூபத்தில் வந்திருப்பதை உற்சாக மிகுதியில் யாருமே கவனிக்கவில்லை.

போட்டி போட்டுக்கொண்டு முன்னால் சென்ற டிராக்டரின் என்ஜின், ரெயில்வே கிராஸிங்கை கடந்துவிட்டது.

ஆனால், டிரெயிலர் நகர்வதற்குள்...

'பிராாங்க்க்...'

ராட்சத வேகத்தில் இரும்பு மலையாய் வந்து கொண்டிருந்த அந்த சரக்கு ரெயில்– பெரிய சப்தத்தோடு டிரெயிலரைத் தாக்க– டிரெயிலரின் விளிம்பில் நின்றிருந்த பொன்னுச்சாமி உட்பட பல பேர் விநாடியில் ரத்தச் சிதறல்களாய்த் தூக்கி வீசப்பட்டார்கள்.

கண்ணெதிரே பொன்னுச்சாமி துண்டு துண்டாய்ச் சிதறிப் போனதைப் பார்த்து உறைந்து போய் நின்றார்கள் வடிவாம்பிகையும், செண்பகவல்லியும்!

**அ**றை மூலையில் ஒண்டியிருந்த செண்பகவல்லியையே இமைக்காமல் கொஞ்ச நேரம் பார்த்தாள் டாக்டர் சிதாலட்சுமி.

நர்சிடம் திரும்பி சைகை காண்பிக்க– தாவணியோடு செண்பகவல்லியை மெல்ல மெல்ல நெருங்கினாள் அந்த நர்ஸ்.

செண்பகவல்லி மிரட்சியான பார்வையில் நர்சையே பார்த்துக்கொண்டிருக்க– டாக்டரம்மாள் மென்மையான குரலில் அவளைப் பார்த்துச் சொன்னாள்.

"செண்பகம்... ஒண்ணுமில்லை. சிஸ்டர் உனக்கு துணிதானே தர்றாங்க... தாவணியைப் போட்டுக்கோம்மா."

டாக்டரம்மாளின் வார்த்தைகளை அவள் காதிலேயே வாங்கிக்கொள்ளவில்லை.

நர்ஸ் நெருங்கி வரவர செண்பகவல்லி மரக்கட்டை போல விறைப்பானாள், கத்தினாள்.

"வராதே... பக்கத்துல வராதே..."

நர்ஸ் அவளை மிகவும் சமீபித்தாள்.

"வேண்டாம்... கிட்டே வராதே..."

இறுக்கமான குரலில் சொல்லிக்கொண்டிருந்த செண்பகவல்லி– அந்த நர்ஸ் அவள் மேல் தாவணியைப் போர்த்த முயன்றதும் தீத்துண்டம் மேலே பட்டதைப் போல வீறிட்டு நர்சை தள்ளிவிட்டாள்.

அந்த தாவணியை கையில் எடுத்து நர்ஸ் நாராய் கிழிக்க ஆரம்பித்தாள்.

ஆக்ரோஷமாய்க் கிழித்து எறிந்த பிறகும் செண்பகவல்லியின் மார்புக்கூடு ஆவேசத்தோடு மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்குவது நிற்கவே இல்லை.

நர்ஸ் பயந்த பார்வையோடு விலகி நிற்க– சீதாலட்சுமி யோசனை தவழும் முகத்தோடு அங்கிருந்து அகன்றாள்.

வடிவாம்பிகை அவள் பின்னாலேயே படபடப்போடு நடந்தாள்.

"டாக்டரம்மா... என் புள்ளைக்கு என்ன ஆச்சு? மேலுடுப்பை போட்டாலே உடம்பில் தீப்பட்ட மாதிரி கொதிச்சுப் போறாளே...?"

சீதாலட்சுமி தன்னுடைய அறைக்குள் நுழைந்து– நாற்காலியில் அமர்ந்துகொண்டே சொன்னாள்.

"கண்ணெதிரே அப்பாவைப் பறிகொடுத்தது செண்பகவல்லியின் மனசை பலமா பாதிச்சிருக்கு. நடந்தது எதிர்பாராத விபத்துதான். ஆனா, தன்னோட பட்டுத் தாவணி ஆசைதான் அப்பாவின் உயிரைப் பறிச்சிருக்குன்னு மனரீதியா அவளுக்குள் பதிவாகி இருக்கு. அந்த குற்ற உணர்ச்சி, வெறுப்பு, சோகம் எல்லாமா சேர்ந்துதான் எந்தத்



துணியை மேலே போட்டாலும் தூக்கி எறியற மனோ நிலைக்கு அவளைத் தள்ளியிருக்கு..."

"புருஷனை இழந்த துக்கத்தைவிட இது பெரிய துக்கமா இருக்கு டாக்டரம்மா. புத்தி பேதலிச்சிப் போயிருக்கற இவளோட மனசை சரியாக்க முடியாதா...?"

"முடியும்... நிச்சயமா முடியும். ஆனா..."

"ஆனா என்ன டாக்டரம்மா...?"

"மனசு சம்பந்தப்பட்ட விஷயம்ங்கறதால குணமாகறதுக்கு சில மாதங்களும் ஆகலாம். சில வருஷங்களும் ஆகலாம். அது தவிர இவளை குணப்படுத்தறதுக்கு மருந்து– மாத்திரையை விட இவ இருக்கிற சூழ்நிலைதான் ரொம்ப முக்கியம். நல்ல மனநோய் மருத்துவமனையில் செண்பகவல்லியை சேர்த்தால்தான் அவள் சீக்கிரமா குணமாக முடியும்..."

"ஆயிரக்கணக்கில் செலவாகுமே டாக்டரம்மா...?"

"மகள் சீக்கிரமா குணமாகணும்னா வேற வழியில்லை..."

"அவ்வளவு செலவழிக்கிற அளவுக்கு எங்கிட்டே சொத்துபத்து இல்லையே டாக்டரம்மா... இருக்கிற அரை ஏக்கர் நிலத்தில் பாடுபட்டுச் சம்பாதிக்கற பணம்தான் வருஷம் பூராவும் எங்க வாய்க்கும், வயத்துக்கும். அந்த மனுஷனும் போய்ச் சேர்ந்துட்டார். இனி நான் வயத்துப்பாட்டை பார்க்கிறதா... இல்லை இவளைப் பார்க்கிறதா...?"

"இப்படிச் சொல்லிட்டா எப்படி?"

"விதிப்படி ஆகட்டும்னு ஆண்டவன் மேல பாரத்தை போட்டுட்டு அன்றாடக் கஞ்சிக்கு வழி பார்க்க வேண்டியதுதான டாக்டரம்மா..."

"அவ வயசுப் பொண்ணுங்கறது ஞாபகம் இருக்கட்டும் வடிவாம்பிகை. தளதளன்னு வளர்ந்திருக்கா... எல்லாரோட பார்வையும் ஒரே மாதிரி இருக்காது. கண்கொத்திப் பாம்பு மாதிரி அவளைக் கவனிச்சிட்டே இருக்கணும். நீ வயல் வேலைக்குப் போற நேரத்தில் அவளை யார் பார்த்துக்குவாங்க?"

"குடிசைக்குள் வெச்சு அவளைப் பூட்டிட்டு போக வேண்டியதுதான் டாக்டரம்மா..."

**அ**டர்த்தியான அரச மரத்தின் கீழே அந்தப் பரட்டைத் தலை ஆசாமி அசிங்கமாய்ப் பற்களைக் காட்டிச் சிரித்தான்.

அவனுடைய சகா சற்றே பவ்வியத்தோடு அவனைப் பார்த்துக் கேட்டான்.

"என்னண்ணே, உற்சாகமா இருக்கீங்க...?"

"பின்னே என்னடா... எத்தனை நாளைக்குத்தான் அந்த அரை குறை ஏவாளை ஜன்னல் இடுக்கு வழியாவே பார்த்து ரசிக்கறது..."

"யாரைச் சொல்றீங்க...?"

"நம்ம செண்பகவல்லியைத்தான். ஆத்தாக்காரி, மகளோட அழகில் மத்தவங்க கண்ணு பட்டுடாம இருக்க ஜாக்கிரதையா அடைச்சி வெச்சிட்டுத்தான் போறா. ஆனா இந்தப் பூனை ஜன்னல் இடுக்கில் மோப்பம் பிடிக்கறது யாருக்கும் தெரியாது..."

"அடக் கடவுளே..."

"இதுக்கே கடவுளைக் கூப்பிட்டா எப்படி...? நாப்பது ரூபா பித்தளைப் பூட்டு தன் மகளோட கற்புக்கு உத்திரவாதமா பாதுகாப்பு குடுக்கும்னு வடிவாம்பிகை நம்பிக்கிட்டிருக்கா. என்னோட தொழில் திறமையைப் பத்தி அவளுக்குத் தெரியுமா...?"

"திண்டுக்கல் பூட்டில் இருந்து அலிகார் பூட்டு வரைக்கும் உங்க கை பட்டா அலறிகிட்டு வாயைப் பிளக்குமேண்ணே...?"

"அதேதான்... இங்கே பார்த்தியா..."

பளபளக்கிற பித்தளைச் சாவி ஒன்றை மேலும் கீழுமாய்த் தூக்கிப் போட்டுப் பிடித்தான், அந்தப் பரட்டைத் தலை.

"அண்ணே... இந்தச் சாவி...?"

"இது சாதாரண சாவி இல்லைடா... செண்பகவல்லிங்கற சொர்க்கவாசல் கதவைத் திறக்க வைக்கப் போற விசேஷமான சாவி. வடிவாம்பிகை கதவில் மாட்டிட்டுப் போறாளே... அந்தப் பூட்டைத் திறக்கற கள்ளச் சாவி..."

சகா சற்றே பயந்த கண்களோடு பரட்டைத் தலையைப் பார்த்தான்.

"வடிவாம்பிகை வயலுக்குப் போனப்புறம் இந்தக் கள்ளச்சாவி போட்டு வீட்டுக்குள்ளே போய்... செண்பகவல்லி மேல் கையை வெக்கப் போறீங்களா? வேண்டாண்ணே... நாம ஏதோ ஆளில்லாத வீட்டுக்குள்ளே நுழைஞ்சி நகை நட்டைத் திருடிட்டு சின்ன அளவுல இருக்கோம். பெண் பாவம் பொல்லாதது... அதிலும் இவ பைத்தியம் வேற. பைத்திய வெறியில் உங்களை ஒரு வழி பண்ணிடப் போகுது..."

"போடா... உன்னை மாதிரி பயந்தாங்கொள்ளியை என்னோட உதவியா வெச்சிருக்கேன் பாரு... என்னை செருப்பாலயே அடிக்கணும்."

"நான் நல்லதுதாண்ணே சொல்றேன்..."

"போடா இவனே... நான் காரியத்தையே முடிச்சிட்டேண்டா..."

"காரியத்தை முடிச்சிட்டீங்களா...?"

"ஆமா... இன்னிக்குப் பட்டப் பகல் பதினொரு மணிக்கு அந்தக் குடிசை வீட்டுக்குள்ளே நுழைஞ்சேன். திமிறப் பார்த்த செண்பகவல்லியை ஒரு கோழிக் குஞ்சை அமுக்கற மாதிரி அமுக்கி... காரியத்தை முடிச்சிட்டேன். திரும்பவும் பழைய மாதிரியே பூட்டைத் தொங்க விட்டுட்டு வந்துட்டேன். அந்தப் பைத்தியத்துக்கு- நடந்த விஷயம் புரிஞ்சிருக்காது... சொல்லவும் தெரியாது. அம்மாக்காரிக்கும் விஷயம் தெரியாது. இத்தனை நாளா நான் மோப்பம்தான் பிடிச்சிட்டிருந்தேன். இனிமே ருசி கண்ட பூனை... ஆசை எப்பவெல்லாம் வருதோ அப்பவெல்லாம்... இந்தத் தங்க சாவி போட்டு அந்த வீட்டைத் திறந்து..."

சிரிப்போடு பரட்டைத் தலை சொல்லிக்கொண்டிருக்க- திடீரென்று சகா அலறினான்.

"அண்ணே... போலீசு..."

"போலீசா...?"

பரட்டைத் தலை திடுக்கிட்டு நிமிர- இரண்டு பேரையும் காவலர்கள் சுற்றி வளைத்தார்கள். தலைமைக் காவலர் கைவிலங்கோடு பக்கத்தில் வந்தார்.

"ஏழெட்டுத் திருட்டு வழக்கிலும், ஒரு கொலை வழக்கிலும் உங்க ரெண்டு பேரையும் தேடிக்கிட்டிருக்கோம். இந்தத் தடவை நீங்க உள்ளே போனா ஆயுசுக்கும் வெளியே வர முடியாது."

உஷாராக சற்றுத் தொலைவிலேயே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஜீப்புக்கு பரட்டைத் தலை ஆசாமியையும், அவன் சகாவையும் நெட்டித் தள்ளிக்கொண்டு போக ஆரம்பித்தார்கள் காவலர்கள்.

**வ**டிவாம்பிகை நடுங்கும் உடலோடு படபடப்பாய் நின்றுகொண்டிருக்க- செண்பகவல்லியை டாக்டர் சீதாலட்சுமி தீவிரமாய்ப் பரிசோதித்துவிட்டு கனமான கவலையோடு சொன்னாள்.

"நீ சந்தேகப்பட்டது சரிதான்... அது சாதாரண வாந்தி இல்லை. செண்பகவல்லி இப்போ கர்ப்பமா இருக்கா..."

வடிவாம்பிகை நெஞ்சில் அடித்துக்கொண்டு அழ
ஆரம்பித்தாள்.
"வீட்டுக்குள்ளே வெச்சுப் பூட்டி வெச்சிட்டுத்தாலே நான்
போவேன்..."
"பூட்டை திறந்துகிட்டு எவனோ ஒரு அயோக்கியன் உள்ளே
நுழைஞ்சிருக்கான். நடந்து முடிஞ்சதை நினைச்சு கவலைப்பட்டு
பிரயோஜனமில்லை வடிவு. நடக்க வேண்டியதை பத்தி யோசி..."
"யோசிக்க என்னம்மா இருக்கு? இந்தக் கருவை கலைச்சிடுங்க.
அன்னிக்கே நீங்க எச்சரிக்கை பண்ணினீங்க... நான் கேக்கலை..."
சீதாலட்சுமி இறுக்கமான குரலில் சொன்னாள்.
"இனிமே கருவைக் கலைக்க முடியாது வடிவு..."
"ஏ... ஏம்மா அப்படி சொல்றீங்க...?"
"கரு நல்லா வளர்ச்சி அடைஞ்ச நிலையில் இருக்கு. இப்போ
கர்ப்பத்தைக் கலைக்கறதுங்கறது செண்பகவல்லியைக் கொலை
பண்ணுறதுக்கு சமம்..."
வடிவு பெரிதாக அழ ஆரம்பித்தாள்.
"ஏற்கெனவே அவ புத்தி பேதலிச்சு இருக்கறதை ஊருக்குள்ளே
ஒரு மாதிரி பேசிக்கறாங்க. இந்த விஷயம் வேற வெளியே தெரிஞ்
சதுன்னா... அதுக்கப்புறம் ஊருக்குள்ளே நான் எப்படி தலை
நிமிர்ந்து நடக்க முடியும் டாக்டரம்மா...?"
"நடந்த விஷயத்துக்கு செண்பகவல்லியோ... நீயோ எப்படிப்
பொறுப்பாக முடியும்? இது ஒரு விபத்து மாதிரிதான்..."
"அப்படின்னு நீங்களும், நானும் சொல்லிக்கலாம். ஊரு ஜனமும்,
உலகமும் அப்படி நினைக்காதே டாக்டரம்மா..."
"நீ சொல்றது எனக்குப் புரியுது. வடிவு! கிராமத்து ஜனங்களின்
வாய்களில் விழாம நீ தப்பிக்கணும்னு நினைச்சின்னா ஒரே வழிதான்
இருக்கு..."
"சொல்லுங்கம்மா."
"சிகிச்சைக்காகக் கூட்டிட்டு போறதா சொல்லி செண்பகவல்லியை
வெளியூருக்குக் கூட்டிட்டுப் போய் பிரசவத்தைக் காதும் காதுமா
முடிக்கறதுதான் ஒரே வழி..."
"குழந்தை...?"
"அதைப்பத்தி அப்புறமா யோசிக்கலாம்."
"எனக்கு இந்த ஊஞ்சம்பட்டியை விட்டா வேற ஊர் தெரியாது
டாக்டரம்மா..."



"கவலைப்படாதே. இந்த விஷயத்தில் உனக்கு என்னால முடிஞ்ச
எல்லா உதவிகளையும் நான் செய்யறேன்..."
வடிவாம்பிகை கண்ணீர் மல்க சீதாலட்சுமியை நோக்கிக்
கையெடுத்துக் கும்பிட்டாள்.
பிரசவ அறை.
செண்பகவல்லி பிரசவ வேதனையில் வீறிட்டு அலறி ஓய்ந்தபோது
நர்சின் கையில் ஒரு அழகான பெண் குழந்தை.
"பெண் குழந்தையா!" சீதாலட்சுமி கேட்டாள்.
"ஆமா டாக்டர்..."
"சீக்கிரமா சுத்தம் பண்ணி குழந்தையை 'வார்ம் அப்'
பண்ணு..."
"சரி டாக்டர்..."
குழாய் அருகே சென்ற நர்ஸ் அதைத் திருகி விட்டுக்கொண்டே
சொன்னாள்.
"குழந்தை அப்படியே அம்மாவை உரிச்சு வெச்சிருக்கு
டாக்டர்..."
"சரி... சரி. மளமளன்னு செய். செண்பகவல்லிக்கு நினைவு
திரும்புறதுக்குள்ளே சில காரியம் பண்ணணும்..."
"குழந்தை பிறந்தவுடனே செண்பகவல்லிக்கு தூக்க ஊசி
போட்டீங்களே டாக்டர். இன்னும் மூணு மணி நேரத்துக்கு
செண்பகவல்லிக்கு நினைவு வராது. தாய்ப்பால் கொடுக்க
வேண்டாமா...?"
"அதெல்லாம் வேண்டாம். குழந்தையை முதல்ல நீ என்னோட
அறைக்கு கொண்டு போ."
நர்ஸ் திகைப்புடன் சீதாலட்சுமியைப் பார்த்தாள்.
"உங்க அறைக்கா டாக்டர்?"
"ஆமா... பேசிட்டிருக்காதே. சொன்னதைச் செய்..."
டவலால் அந்த மெல்லிய பஞ்சு மேகத்தைப் போர்த்திக்கொண்டு
நர்ஸ், கதவை நோக்கி நடக்க முயல– சீதாலட்சுமி கத்தினாள்.
"நர்ஸ்... அந்தப் பக்கம் வடிவு இருப்பா. பின்னாடி வழியா
கொண்டு போ..."
"டாக்டர்...?"
நர்ஸ் திகைக்க– டாக்டரம்மா குரலைத் தாழ்த்திக்கொண்டு
சொன்னாள்.
"பின்னாடி வழியா போ. வடிவு கண்ணில் இந்தக் குழந்தை

டக்கூடாது..."

நர்ஸ் தலையாட்டிவிட்டு பின்பக்கம் போக...

சீதாலட்சுமி பிரசவ அறையின் உள்ளே இருந்த தொலைபேசியை நெருங்கி மும்பை எண்களைச் சுழற்றிவிட்டு பேச ஆரம்பித்தாள்.

"ஹலோ... கஸ்தூரிபாய் அநாதை இல்லமா...?"

"எஸ்..."

"வசந்தராதேவி இருக்காங்களா...?"

"ஸ்பீக்கிங்..."

"நான் சீதாலட்சுமி பேசறேன்... வசந்தரா!"

"சீதாவா! எங்கிருந்து பேசறே...?"

"சென்னையில் இருந்துதான்..."

"எப்படி இருக்கே...?"

"நல்லா இருக்கேன். நீ எப்படி இருக்கே வசந்தரா...?"

"நல்லாவே இருக்கேன். சின்னதா நான் ஆரம்பிச்ச இந்த அநாதை இல்லத்துக்கு பல இடங்களில் இருந்து உதவிகள் கிடைக்குது. பயத்தோடதான் என்னோட சேவையைத் தொடங்கினேன். ஆனா, இப்போ நிம்மதியா இருக்கு சீதா."

"எல்லாரும் பிறந்தோம்... வாழ்ந்தோம்னு இருக்காங்க. நீ அர்த்தத்தோட வாழ்ந்துகிட்டிருக்கே. யு ஆர் கிரேட் வசந்தரா..."

"செய்ய வேண்டியது இன்னும் எவ்வளவோ இருக்கு. சரி, நீ இப்ப எதுக்காக போன் பண்ணினே...?"

"அடுத்த வாரம் நான் மும்பை வரப்போறேன்..."

"வெல்கம்... வெல்கம்..."

"வர்றப்போ ஒரு பெண் குழந்தையோடு வருவேன்..."

"குழந்தையா... யாருடையது...?"

"என்னோட 'பேஷண்ட்' ஒருத்தியோட குழந்தை. அவங்களால வளர்க்க முடியாத சூழ்நிலை. அந்தக் குழந்தையை உன்னோட ஆசிரமத்தில் சேர்த்துக்க முடியுமா?"

"என்னடி இப்படி கேட்டுட்டே? தாராளமா."

"தாங்க்யூ வெரிமச்! அடுத்த வாரம் நான் வர்றேன்."

ரிசீவரைச் சாத்தியபோது நர்ஸ் திரும்பி வந்திருந்தாள். தயக்கத்தோடு கேட்டாள்.

"டாக்டர்... இந்தக் குழந்தையை அநாதை இல்லத்தில் சேர்க்கப் போறீங்களா...?"

"ஆமா..."



"ஏன் டாக்டர்?"

"யோசிச்சுப் பாரு. அந்தப் பொண்ணு புத்தி சரியில்லாதவள். எந்த அயோக்கியனின் கைவரிசையாலோ உண்டான குழந்தை இது. ஊர் உலகத்துக்கு தெரியாம வெளியூரில் வந்து பிரசவம் பார்த்திருக்காங்க. குழந்தையோடு அவங்க எப்படி திரும்பி சொந்த ஊருக்குப் போக முடியும்?"

"குழந்தை எங்கேன்னு வடிவு கேட்டா என்ன சொல்லப் போறீங்க டாக்டர்?"

"குழந்தை இறந்தே பிறந்துட்டதா சொல்ல வேண்டியதுதான்..."

நர்ஸ் திகைப்புடன் நின்றிருக்க- சீதாலட்சுமி பிரசவ அறையைவிட்டு வெளியே வந்தாள்.

கலக்கமாய் நெருங்கி வந்த வடிவாம்பிகையை ஒரு ஓரமாய் நிறுத்திக்கொண்டு மெல்லிய குரலில் சொன்னாள்.

"ஆண்டவன் உன் பக்கம்தான் இருக்கான் வடிவு. வேண்டாத அந்தக் குழந்தை கர்ப்பத்திலேயே இறந்திடுச்சு..."

"டா...க்...ட...ரம்மா..." வடிவு அதிர்ந்து போய் பார்க்க- சீதாலட்சுமி தொடர்ந்தாள்.

"ஒரு வகையில பார்த்தா இந்த இழப்பு கவலைப்பட வேண்டிய விஷயமில்லை. நடந்தது நல்லதுக்குத்தான். உன் மகளோட மனநிலை பாதிப்புக்கு சிகிச்சை கொடுக்கணும்னுதான் வெளியூருக்கு வந்தே. குழந்தையோடு ஊருக்குத் திரும்பிப் போகவும் முடியாது. நடந்த விஷயங்களை கெட்ட கனவா நினைச்சு மறந்துட்டு, செண்பகவல்லியை ஊருக்குக் கூட்டிட்டுப் போ வடிவு. இனிமே அவளை ஜாக்கிரதையா பார்த்துக்க. அப்ப பூட்டை நம்பி அவளை வீட்டில் தனியா விட்டுட்டுப் போகாதே."

சீதாலட்சுமி சொல்லிக்கொண்டு இருக்கும்போதே...

நர்ஸ் வேகமாய் வந்தாள்.

நடையில் பதற்றம், குரலில் பதற்றம்.

"டாக்டர்..."

"என்ன?"

"செண்பகவல்லியை பிரசவ வார்டில் இருந்து அறைக்கு மாத்திட்டேன்... அவளுக்கு நினைவு வந்திடுச்சு..."

"அதுக்கு ஏன் பதற்றப்படறே...?"

"நான் எங்கிருக்கேன்... எனக்கு என்ன ஆச்சுன்னு கேக்கறா டாக்டர்..."

பூக்காரம்மாள், மூலையில் உட்கார்ந்திருக்க அவளின் கால்களைக் கட்டிக்கொண்டு பிள்ளைகள் மூன்றும் கதறின. விசாரித்தபோதுதான் விஷயத்தின் விபரீதம் புரிந்தது. பூக்காரம்மாள் தற்கொலைக்கு முயன்றிருக்கிறாள். அதற்குச் சாட்சியாக மின்விசிறியில் அவளது சேலை படபடத்துக் கொண்டிருந்தது.

அமளிகள் எல்லாம் ஓய்ந்த பின்பு இவாஞ்சலின் சத்தம் போட்டாள். "உங்களை நான் ரொம்ப தைரியமானவங்கன்னு நெனச்சிருந்தேன்; ஆனா, இப்படி சிறுபிள்ளைத்தனமா நடந்துக்கிறீங்களே... போகக்குன்னு நீங்க செத்துப் போயிட்டா உங்க பிள்ளைங்களோட நிலைமை என்னாகுமின்னு கொஞ்சமாச்சும் யோசிச்சுப் பார்த்தீங்களா?"

"இல்லதாயி! மனசு வெறுத்துப் போயி என்ன பண்ணுறதுன்னு புரியாத குழப்பத்துலயும், ஒரு நிமிஷ தடுமாற்றத்துலயும் அந்த மாதிரியான முடிவுக்குப் போயிட்டேன்; நேத்து ராத்திரி எட்டு மணி இருக்கும்; நல்லாக்குடிச்சுட்டு முழு போதையில வந்துச்சு' என் புருஷன்... இதுவழக்கமா நடக்குறதுதானன்னு புள்ளைங்க அதது பாட்டுக்கு படிச்சுக்கிட்டிருந்ததுங்க; என்கிட்ட வந்து.... சொல்லவே கூச்சமா இருக்கு தாயி..." என்று தயங்கினாள்.

அப்புறம் "சொல்லித்தான் தீரணும்;உன்கிட்ட சொல்றதுல தப்பில்ல தாயி... என்கிட்ட வந்து அப்பவே 'வாடி படுத்துக்கலாம்'னு கூப்பிட்டார்; வீட்டுல இருக்கிறதே ஒரே ஒரு அறை தான்; வயசுக்கு வந்த பொட்டப்புள்ளையும், மத்த புள்ளைங்களும் அங்க உட்கார்ந்து இருக்காங்க; என்ன வக்கிரமான மனுஷன்னு பார்த்தியா தாயி? நான் முறைச்சுப் பார்த்துட்டு பேசாம இருந்தேன்... உடனே அது என்ன பண்ணுச்சு தெரியுமா? தன்னோட உடைகள் மொத்தத்தையும்..." என்றபடி முகத்தை கைகளால் மூடியவாறு பெருங்குரலெடுத்து அழத் தொடங்கினாள்.

"புள்ளைங்கெல்லாம் வெளிய ஓடிருச்சுங்க; இந்த வெறிபிடிச்ச மனுஷனோட எப்படி மிச்ச காலத்தையும் கழிக்குறதுன்ற வேதனையில் தான் செத்துத் தொலையிறதுன்னு முடிவுக்குப் போயிட்டேன்; இனிமே எது நடந்தாலும் இப்படிப் பண்ணமாட்டேன்; மன்னிச்சுக்கோ தாயி..." என்றாள்.

இது நடந்து பத்து நாட்களுக்குள் பூக்காரம்மாளின் கணவன் மரணம் நேர்ந்து





விட்டது. அழுது கொண்டிருந்த பூக்காரம்மாளிடம்,இவாஞ்சலின் ஆறுதலாய்ச் சொன்னாள், "நடந்தது நடந்து போச்சு; அத மறந்துட்டு மேற்கொண்டு ஆகவேண்டிய காரியங்களைக் கவனியுங்க..."

"எப்படி தாயி... என்னால தாங்கவே முடியலயே! ஆசை ஆசையா காதலிச்சு, சொந்த பந்தங்கள ஒதுக்கி கல்யாணம் பண்ணி, ஊருவிட்டு ஊரு வந்து, கடைசியில நானே கொல்ல வேண்டியதும் ஆயிடுச்சே! இதுக்கெல்லாம் என்ன அர்த்தம்னே புரியல தாயி..." இவாஞ்சலினுக்கு சிலீரென்றிருந்தது.

"என்ன சொல்றீங்க பூக்காரம்மா...? அவரு விஷச்சாராயத்தக் குடிச்சுச் செத்துப் போனதுக்கு நீங்க என்ன பண்ணுவீங்க?"

"இல்ல தாயி, அந்த மனுஷன் சாராயம் குடிச்சுச் சாகல... நாலு... நாளைக்கு முன்னாடி ஒரு நடு வயசத் தாண்டிய பாதிக் கிழவன வீட்டுக்குக் கூட்டிக்கிட்டு வந்து, அவனுக்கு சுகந்திய கல்யாணம் பண்ணி வைக்கப் போறதாச் சொல்லிச்சு. உனக்கென்ன பைத்தியம் கியித்தியம் புடிச்சுருச்சா? படிச்சுக்கிட்டிருக்கிற பச்சப் புள்ளைக்கு இப்ப எதுக்கு கல்யாணம்னு சண்டைக்குப் போனேன்... அதுக்கு அது என்ன சொல்லிச்சு தெரியுமா தாயி!

'அவ படிச்சு ஒண்ணும் கிழிக்க வேணாம். அதிகம் படிக்காத நீயே, என்னை மயக்கி, வளைச்சு பட்டணத்துக்கு கூட்டிட்டு வந்து என் வாழ்க்கையையே பாழாக்கிட்ட. இப்ப என்னை ஒரு துரும்புக்கும் மதிக்கிறதில்லை! இவ படிச்சு முடிச்சா உன்னை மாதிரியே, தட்டழிஞ்சு, எவனையாவது இழுத்துக்கிட்டு வந்து நிப்பா! அதனால வர்ற முகூர்த்தத்துல கல்யாணம் பண்ணியே தீருவேன்னு ஒத்தக்கால்ல நின்னுச்சம்மா...

அது பேசுனதைக் கேட்டதும் இந்த மனுஷனைப் போயி காதலிச்சுக் கல்யாணம் பண்ணிக்கிட்டமே... ச்சீய்ன்னு ஆயிருச்சு... என் மேலயே எனக்கு ஆத்தாமையா வந்துச்சு; இனியும் இந்த பூமியில உயிர் தரிச்சு இருக்குறதுல ஒரு அர்த்தமும் இல்லைன்னு பிள்ளைகளோட சேர்ந்து செத்துப் போகலாம்னு விஷம் வாங்கிட்டு வந்தேன். கடைசி நேரத்துல மனசு மாறி 'நாம ஏன் சாகணும்? அழிச்சாட்டியம் பண்ணுற அந்த மனுஷன்தான் சாகணும்'னுட்டு வீட்டுல அது வாங்கி வச்சுருந்த சாராயத்துல விஷத்தக் கலந்து வச்சுட்டேன் தாயி......" மீண்டும் அழத்தொடங்கினாள் அவள். ★

"வாட்...?"

"பிரசவ வேதனையில் அவளுக்கு மனநிலை சரியாயிடுச்சுன்னு நினைக்கறேன்..."

செண்பகவல்லி இருந்த அறைக்கு அவர்கள் பரபரப்பாய் ஓடிச் சென்றார்கள்.

கட்டிலில் அவள் குழப்பத்தோடு எழுந்து உட்கார்ந்திருந்தாள்.

வடிவாம்பிகையைப் பார்த்து பலகீனக் குரலில் கேட்டாள்.

"அம்மா, எனக்கு என்ன ஆச்சு...? ஏன் நான் ஆஸ்பத்திரியில் இருக்கேன்?"

படுக்கை விரிப்பை மேலே போர்த்திக்கொண்டு தன் உடலை மறைத்தபடி உட்கார்ந்திருந்த செண்பகவல்லியைப் பார்த்து வடிவாம்பிகையின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் சுரக்க ஆரம்பித்தது.

## 12

**டா**க்டர் சீதாலட்சுமி தம்ளர் தண்ணீரை தொண்டைக்கு வார்த்து கொஞ்சம் ஆசுவாச மூச்சு விட்டுக்கொண்ட பின் எதிரே அமர்ந்திருந்த சுந்தர், ராமமூர்த்தி, லேகாவைப் பார்த்து பேச்சைத் தொடர்ந்தாள்.

"தன் வாழ்க்கையில் ஒரு வருட இருண்ட காலம் இருந்தது செண்பகவல்லிக்கு தெரியவே தெரியாது. மனசளவில் அவ கறை படியாதவள் மிஸ்டர் ராமமூர்த்தி. மும்பையில் ஒரு பேத்தி வளர்ந்துட்டிருந்தது வடிவாம்பிகைக்கும் தெரியாது. ஓரளவு வசதியான இடத்தில் செண்பகவல்லி வாழ்க்கைப்பட்டு இருக்காள்னு ஒரு தடவை வடிவாம்பிகை என்கிட்டே சொன்னப்ப- எனக்கு ரொம்ப சந்தோஷமா இருந்தது..."

ராமமூர்த்தி கம்மிப் போன குரலில் சொன்னார்.

"செண்பகவல்லி என்னை ஏமாத்திட்டாளோன்னு நான் மன சஞ்சலம் அடைஞ்சிட்டேன் டாக்டர்..."

லேகாவும் தலையசைத்தாள்.

"எஸ் டாக்டர்... அம்மாவை தப்பா நினைச்சதுக்காக நான்



வெட்கப்படறேன்..."

"நடந்ததை நினைச்சு வருத்தப்பட வேண்டாம். எந்த சூழ்நிலையிலும் மனசு தடுமாறாம உண்மையைத் தெரிஞ்சிக்கணும்னு விவேகத்தோட செயல்பட்ட சுந்தர் மாதிரி தங்கமான மாப்பிள்ளை கிடைச்சதுக்காக சந்தோஷப்படுங்க..."

ராமமூர்த்தி லேசாய்த் தழுதழுத்த குரலில் சொன்னார்.

"ஏனோ எனக்கு ஊர்மிளாவை ஒரு தடவை பார்க்கணும் போல இருக்கு டாக்டர்."

**ஊ**ர்மிளாவின் சிவாஜிநகர் வீட்டைத் தொட்டு அழைப்பு மணியை அடித்தபோது நேரம் சாயந்தரம் ஆறு மணி.

வேலைக்காரப் பெண்ணோ, ஊர்மிளாவோ வந்து கதவைத் திறப்பார்கள் என்று எதிர்பார்த்த சுந்தர், ராமமூர்த்தி, லேகா மூன்று பேரும் திகைப்பைத் தொட்டார்கள்.

ஒரு நடுத்தர மனிதர் பாதி திறந்த கதவில் வெளியே பார்த்து... இந்தியில்-

"கோன்...?" என்றார்.

"இது ஊர்மிளாவின் வீடுதானே...? ஊர்மிளா இருக்காளா...?"

"உள்ளே வாங்க..."

அவர் வரவேற்றதைத் தொடர்ந்து உள்ளே சென்றவர்களின் பார்வையில் ஒரு அம்மாள் கண்ணில் பட்டாள்.

சுந்தர் கேட்டான்.

"நீங்க யாரு...?"

நடுத்தர மனிதர் புன்னகைத்தார்.

"நான் ஊர்மிளாவோட அப்பா. இவ என் மனைவி. சாந்திப்பூர் கிராமத்தில் இருந்து நேத்திக்குத்தான் நாங்க வந்தோம். நீங்க யாரு... பிரகாஷா...? இது உங்க அப்பாவா...?"

சுந்தரையும், ராமமூர்த்தியையும் பார்த்து அவர் கேட்க- சுந்தர் குழப்பமாய் தலை அசைத்தபடியே சொன்னான்.

"நான் பிரகாசும் இல்லை. இவர் பிரகாசோட அப்பாவும் இல்லை. இவர் ஊர்மிளாவோட அப்பா..."

சுந்தர் சொன்னதைக் கேட்டு அவர்கள் அதிர்ச்சியுடன் பார்க்க-

சத்தம் கேட்டு வெளியே வந்த ஊர்மிளாவும் திகைப்பும், கோபமுமாய் அவர்களைப் பார்த்தாள்.

"சுந்தர் சார்... நீங்க மூணு பேரும் மறுபடியும் எதுக்காக இங்கே வந்திருக்கீங்க...?"

"உன்னோட கடந்த காலம் பத்தி நாங்க கேட்டோம். நீ சரியா சொல்லலை. இப்போ நாங்க தெளிவா விசாரிச்சுத் தெரிஞ்சிட்டு... அதைப் பத்தி உன்கிட்டே சொல்லலாம்னுதான் வந்திருக்கோம்..."

"என்னோட கடந்த காலம் பத்தி நீங்க சொல்றீங்களா..? அதான் நானே அன்னிக்கு சொல்லிட்டேனே! என்னோட அம்மா, அப்பாவைப் பார்க்கணும்னு கேட்டீங்க... இதோ உங்க கண்ணெதிரே இருக்காங்க... பாருங்க... பேசுங்க..."

சுந்தர் புன்னகைத்தான்.

"யாருக்காக இந்த நாடகம்னு எனக்குத் தெரியலை ஊர்மிளா. ஆனா இவங்களை அம்மா, அப்பான்னு சொல்லி உன்னை நீயே ஏமாத்திக்க வேண்டாம். இதோ இந்தப் படத்தைப் பார்த்தியா...? இதான் உன்னோட அம்மா..."

செண்பகவல்லியின் அந்தப் பழைய புகைப்படத்தை ஊர்மிளாவின் முகத்துக்கு நேரே நீட்டினான் சுந்தர்.

அதிர்ச்சியும், படபடப்புமாய் அதைப் பார்த்த ஊர்மிளாவின் கண்களில் வியப்பு பரவியது.

"இது... இது...?"

திணறலாய்க் கேட்டவளிடம்...

டாக்டர் சீதாலட்சுமி சொன்ன விபரங்களை சுந்தர் சொல்லி முடிக்க- இரண்டு நிமிட மவுனத்துக்குப் பின் கண்களில் நீர் மல்க நிமிர்ந்தாள்.

"ந... நான் அம்மாவை ஒரு தடவை பார்க்க முடியுமா...?"

ராமமூர்த்தி குறுக்கிட்டு சொன்னார்.

"அதைப்பத்தி பேசறதுக்காகத்தாம்மா நாங்க வந்திருக்கோம். உனக்கு அப்பாவா நான் இருக்கேன். தங்கையா லேகா இருக்கா. ஆனா, அம்மா மட்டும் இல்லைன்னு நினைச்சிக்க..."

ஊர்மிளா அதிர்ச்சியோடு பார்க்க- ராமமூர்த்தி அமைதியாய்ச் சொன்னார்.



"என்னோட சுய நலத்துக்காகவோ, குடும்ப கவுரவம் பாழாயிடும்னோ நினைச்சு நான் இப்படிச் சொல்லலை. இதைப்பத்தித் தெரிஞ்சதுன்னா செண்பகவல்லியின் நிம்மதி போயிடும். நீ எக்காரணம் கொண்டும் அவளோட வாழ்க்கையில் மட்டும் குறுக்கிடவே கூடாது..."

கண்ணீரோடு தலையசைத்த ஊர்மிளா, கலங்கிப் போன குரலில் கேட்டாள்.

"இந்த 'போட்டோ'வையாவது நான் வெச்சிக்கலாமா?"

"தாராளமா"– ராமமூர்த்தி தலையசைத்த விநாடி– அந்த நடுத்தர வயது நபர் குரல் கொடுத்தார்.

"ஊர்மிளா... ஏழு மணிக்கெல்லாம் பிரகாஷ் வீட்டிலிருந்து வந்துருவாங்கன்னு சொன்னியே..."

ஊர்மிளா ஒருவித பரபரப்புக்கு உள்ளானாள்.

ராமமூர்த்தி கேட்டார்.

"யாரு அந்த பிரகாஷ்...?"

"அவர் என்னோட வுட்பி. ஒரு வருஷத்துக்கு மேலா ரெண்டு பேரும் ஒருத்தரை ஒருத்தர் காதலிக்கறோம். நான் ஒரு அநாதைன்னு சொன்னா அவங்க வீட்டில் ஏத்துக்கமாட்டாங்க. இன்னிக்கு அவரோட அம்மா, அப்பாவோடு இங்கே வர்றேன்னு சொன்னார். அவங்களுக்காகத்தான் இவங்களை என்னோட அம்மா, அப்பாவா நடிக்கச் சொல்லி இருக்கோம்..."

"இருக்கோம்னா...?"

"பிரகாசும், நானும் சேர்ந்துதான் இந்த ஏற்பாட்டை செஞ்சிருக்கோம். நீங்க வந்து என்கிட்டே என் கடந்த காலம் சம்பந்தமா விசாரிச்சப்போ பிரகாஷ் வீட்டைச் சேர்ந்தவங்கதான் ஏதோ விசாரிக்க முயற்சி பண்ணுறாங்கன்னு பயந்து போய் நான் அதே சாத்திப்பூர் கிராமம் கதையை உங்ககிட்டே சொன்னேன்..."

"எத்தனை நாளைக்கு உங்களால் இந்த நாடகத்தை 'மெயின்ட்டெயின்' பண்ண முடியும்...?"

"கல்யாணம் வரைக்கும் 'மெயின்டெயின்' பண்ணினா போதும்னு நாங்க நினைக்கறோம்..."

"இது சரியில்லை ஊர்மிளா..."

"எங்களுக்கு வேற வழியில்லை. இல்லைன்னா அவங்க





சம்மதத்தோட எங்க கல்யாணம் நடக்காது..."

ராமமூர்த்தி சொன்னார்.

"உன் சார்பா பேசறதுக்கு பெரியவங்க யாருமில்லைங்கற சூழ்நிலை காரணமாத்தான் நீங்க முடிவை எடுத்திருக்கீங்க. உன் சார்பா அந்த பிரகாசோட அம்மா– அப்பாகிட்டே நான் பேசறேன் ஊர்மிளா. உனக்கும், பிரகாசுக்கும் நல்லவிதமா கல்யாணம் பண்ணி வைக்கறது என்னோட பொறுப்பு... போதுமா?"

ஊர்மிளா, ராமமூர்த்தியின் கையைப் பற்றிக்கொண்டு–

சூடான கண்ணீர்த் துளிகளை நழுவ விட்டாள்.

## 13

சென்னை.

பெரிய பெரிய சூட்கேஸ்களை டாக்சியில் இருந்து இறக்கி வீட்டுக்குள் வைக்க வைக்கவே ராமமூர்த்தியையும், லேகாவையும் பார்த்துப் பரபரப்போடு கேட்டாள் செண்பகவல்லி.

"போன காரியம் என்னாச்சு...? மாப்பிள்ளையோட தாத்தாவை பார்த்தீங்களா... ரெண்டு பேரும்?"

ராமமூர்த்தி இவளையே பார்த்தபடி சொன்னார். "யாரைப் பார்க்கணும்னு போனோமோ... அவங்களைப் பார்த்துட்டுதான் வந்தோம்."

"பெரியவர் என்ன சொன்னார்? அவருக்கு இவளைப் பிடிச்சதா...?"

"வந்ததும், வராததுமா ஏன் இப்படி படபடக்கறே...? நம்ம லேகாவை அவருக்கு பிடிக்காமப் போகுமா? ஆற அமர உக்கார்ந்து பேசலாம் செண்பகவல்லி..."

"என்னங்க நீங்க... என்னோட பரபரப்பு உங்களுக்குப் புரியவேமாட்டேங்குதே. இந்த ஒரு வாரமும் ஒரு யுகம் மாதிரி பயத்தோடவே கழிஞ்சது. நமக்கு இருக்கறது ஒரே ஒரு பொண்ணு. அவளை நல்லபடியா கரை சேர்க்கற வரைக்கும் எனக்கு நிம்மதி கிடையாது."

'நமக்கு இருக்கறது ஒரே ஒரு பொண்ணு' என்று செண்பகவல்லி சொல்றபோதே-

சட்டென்று திரண்ட கண்ணீரோடு லேகா தலை நிமிர...

ராமமூர்த்தி, செண்பகவல்லிக்குத் தெரியாமல் அவளைப் பார்த்து புன்னகை பூத்தார்.

லேகா மறுபக்கம் திரும்பி கண்ணீரைத் துடைத்துக்கொள்ள-செண்பகவல்லியிடம் ராமமூர்த்தி சொன்னார்.

"நமக்கு ஒரு பொண்ணு என்ன... இன்னும் ஒன்பது பொண்ணு இருந்தாலும், எல்லாருக்குமே நல்ல வாழ்க்கைதான் அமையும் செண்பகவல்லி. ஏன்னா, நாம யாருக்கும் எந்தத் துரோகமும் பண்ணலை."

"உண்மைதாங்க."

தங்கம் பிரகாசிக்கிற மாதிரி புன்னகைத்தாள் செண்பகவல்லி.

**முற்றும்**

## மும்பையில் ஒலிக்கும் சென்னை மணி

மும்பையில் உள்ள முலுண்ட் பள்ளிக்கூடத்தில் சுமார் 850 கிலோ எடையுள்ள காண்டாமணி பொருத்தி இருக்கிறார்கள். இதிலிருந்து வெளிப்படும் சப்தம், மிகப் பலமாக உள்ளது. ரூபாய் 10 லட்சம் மதிப்புடைய இது, சென்னை தயாரிப்பு!

– திவ்ய மீனா, மும்பை.

## முதலாளிகள் தினம்

மே 1-ந்தேதி தொழிலாளர்கள் தினம் என்பது நாம் அறிந்தது. அதேபோல அக்டோபர் 17-ந்தேதி உலக முதலாளிகள் தினமாக கொண்டாடப் படுகிறது.

– வே.செல்வகணேசன், மஞ்சள்நீர்க்காயல்.

ராணிசிண்டிகேட் சார்பில் வெளியிட்டவர், ஆசிரியர்: ர. பாஸ்கரன், 86, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை-600 007. அச்சிட்டவர்: சி. கல்யாண சுந்தரம், ராணி அச்சகம், 86, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை-600 007.



# இதயம் பேசுகிறது

## சந்தன மணம்!

லட்சுமி ராஜரத்னத்தின் 'சந்தனசிற்பம்' நாவல் சந்தன மணம் கலந்து இதயத்துடன் ஒன்றிவிட்டது.

எஸ். விஜயலட்சுமி,
ஆதம்பாக்கம்.

'சந்தனச்சிற்பம்' மணிக் கணக்காக மணத்தது... மனதில் பதிவாகிப்போனது!

ஆர். ராஜகோபாலன்,
கொம்மடிக்கோட்டை.

மயிலிறகால் வருடியது போன்ற சிலிர்ப்பு நடையில், 'ஜெட்' வேகத்தில் சென்றது.

ஆர்.பிரேமா பாலன்,
திசையன்விளை.

கருத்துகளும் வர்ணனைகளும் கலந்த கூட்டணி தென்றலாகி இனிய மணம் கமழ்ந்தது!

ஆர்.ஆர்.உமா,
செல்லமருதூர்.

நாவலைப் படித்துவிட்டு, உங்கள் கருத்துகளை எழுதி அனுப்புங்கள். முகவரி: **இதயம் பேசுகிறது, "ராணி முத்து", சென்னை-600 007.**

## சிறை வேதனை

முகலாய மன்னர் ஷாஜஹான் தன் சொந்த மகன் ஔரங்கசீப்பால் ஆக்ரா கோட்டையில் சிறைவைக்கப்பட்டார். சிறையில் தண்ணீர்கூட தராமல் தவிக்கவிட்டிருந்தபோது மகனுக்கு அவர் எழுதிய வேதனை கடிதம், இது:

**"இறந்தவர்களுக்குக்கூட 'சிரார்த்தம்' என்ற பெயரில் எள்ளும், தண்ணீரும் தருகிறார்கள். ஆனால், மகனே! பெற்ற தகப்பனாகிய எனக்கு நீ தாகத்துக்குத் தண்ணீர்கூட தராமல் தவிக்கவிட்டிருக்கிறாயே!" என்று எழுதினார் ஷாஜஹான்.**